# வைகறை வெளிச்சம்

விலை ரூ. 20/-

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume - 11 Issue - 12

டிசம்பர் 2018 - ரபியுல்அவ்வல் - ரபியுல் ஆகிர் - 1440




## பாபரி மஸ்ஜிதும் உச்சநீதிமன்றமும்

மீனாட்சிபுரம் மதமாற்றங்கள்

## திருமாவளவன் vs கிருஷ்ணசாமி

## தொடரும் வாக்காளர் பெயர் நீக்கங்கள்?

## கஜா புயல் நிவாரணப் பணிகளில் தாருல் இஸ்லாம்

## லாலு பிரசாத் யாதவும் பொய் வழக்கும்

சி.பி.ஐ - ஒப்புதல் வாக்குமூலம்

## அண்ணலாரின் வாழ்வில் அதிகாரப் பரிமாணங்கள்

بسم الله الرحمن الرحيم

**உலகத்தார் யாவரையும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காக (சத்தியத்தையும், அசத்தியத்தையும் தெளிவாகப்) பிரித்தறிவிக்கும் இவ்வேதத்தைத் தன் அடியார் மீது இறக்கியவன் மிக்க பாக்கியமுடையவன். (அந்த நாயன்) எத்தகையவன் என்றால் வானங்கள், பூமி (ஆகியவற்றின்) ஆட்சி அவனுக்கே உரியது; அவன் (தனக்கென) ஒரு மகனை எடுத்துக் கொள்ளவில்லை; அவனுடைய ஆட்சியில் அவனுக்கு கூட்டாளி எவருமில்லை; அவனே எல்லாப் பொருட்களையும் படைத்து, அவற்றை அதனதன் அளவுப் படி அமைத்தான்.**

(25:1,2)

# பாபரி மஸ்ஜித்

## உச்ச நீதிமன்றம் நீதியை வழங்கிடுமா?


கவர் ஸ்டோரி | பக்கம் - 04

மஸ்ஜித்களும் இஸ்லாமும்....11

கஜா புயல் நிவாரணப் பணிகளில் தாருல் இஸ்லாம்....12

லாலு பிரசாத் யாதவும் பொய் வழக்கும்....14

வாக்காளர் பெயர் நீக்கங்கள்....16

மீனாட்சிபுரம் மதமாற்றங்கள் திருமாவளவன் VS கிருஷ்ணசாமி....17

எது முதலில்?....21

சிலுவைப் போர் 2.0....26

படேல் சிலை - லாபமா? நஷ்டமா?....30

இஸ்லாம் அரசியல் அதிகாரம் அரபுலக எழுச்சி....36

நூல் அரங்கம்....39

முதல் சிலுவைப் போர் வெற்றி வீரர் சுல்தான் நூருத்தீன் ஸங்கி(ரஹ்)....42

அண்ணலாரின் அதிகாரப் பரிமாணங்கள்....46

உஹது களம் அழைக்கின்றது - மகளிர் மன்றம்....58

இவர்கள் ஏன் இஸ்லாத்தை ஏற்றார்கள்?....62



# வைகறை வெளிச்சம்

டிசம்பர் 2018 ரபிய்யுல் அவ்வல் - ரபிய்யுல் ஆகிர் 1440

ஆசிரியர்

**மு.குலாம் முஹம்மது, M.A.,**
**Journalism & Communication**

துணை ஆசிரியர்

**கே.எம்.இல்யாஸ் ரியாஜி, M.A.,**



All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts Only



http:/www.facebook.com/vaigaraivelicham

**தனி இதழ்: ரூ.20.**

**ஆண்டுச் சந்தா**

**உள் நாடு: ரூ.240.**

**வெளி நாடு: ரூ.3000.**

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
**DARUL ISLAM FOUNDATION TRUST**
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

**VAIGARAI VELICHAM**
**52/1, Mannady Street, Room# 07, Mannady, Chennai - 600001.**
**+91 81481 29887 | Email: darultrust@yahoo.com |**
**Web: www.darulislam.in**



# பாபரி மஸ்ஜித்

## உச்ச நீதிமன்றம் நீதி வழங்கிடுமா?



**கவர் ஸ்டோரி**

“முஸ்லிம்கள்
உச்ச நீதிமன்றத்தை
அணுகிய போதெல்லாம்
முஸ்லிம்களுக்கு
எதிராகவும்,
இந்துக்களுக்குச்
சாதகமாகவுமே
உச்ச நீதிமன்றம்
தீர்ப்புகளை வழங்கியது.
இந்தப் பேருண்மையையும்
அறுதி தீர்ப்பை
வழங்கிடும் முன்
உச்ச நீதிமன்றம் கருத்தில்
கொள்ள வேண்டும்”

✍ மு. குலாம் முஹம்மது. M.A.,

பாபரி மஸ்ஜித் விவகாரத்தை நீதிமன்றங்கள் நினைத்திருந்தால் எப்போதோ தீர்த்திருக்கலாம். ஆனால் நமது நீதிமன்றங்கள் அதனை கோயிலாக மாற்றிடும் வரை இழுத்தடித்துக் கொண்டிருக்கின்றன.

பாபரி மஸ்ஜித் - ஐ மையமாகக் கொண்டு இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்கும் ஒற்றுமைக்கும் வேட்டு வைத்து வருகின்றன சங்கப்பரிவார அமைப்புகள். இந்தியக் குடிமக்களை இந்துக்கள் என்றும், அல்லாதவர்கள் என்றும் பிரித்திட பாபரி மஸ்ஜித் - ஐ போல் பாசிச பாரதீய ஜனதாவுக்கு உதவி செய்தவை எவையுமில்லை.

ஆக இந்தியாவின் வரலாற்றை வகுப்புவாத சக்திகளிடம் ஒப்படைத்தமைக்கு இந்த வழக்கை இழுத்தடித்த நீதிமன்றங்களே பொறுப்பேற்றிட வேண்டும் என பல ஓய்வு பெற்ற நீதிபதிகளும் சமூக ஆர்வலர்களும் எடுத்துச் சொல்லிவிட்டார்கள்.

இந்தப் பின்னணியில் தான் பாபரி மஸ்ஜித் வழக்கு உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர் நோக்கி நிற்கின்றது. ஆனால் சங்க பரிவாரங்கள் இப்போது தங்களுக்கு இருக்கும் சாதகமான அரசியல் சூழலைப் பயன்படுத்தி பாபரி மஸ்ஜித் இருந்த இடத்தில் கோவில் கட்டுவதில் குறியாக இருக்கின்றார்கள். நீதிமன்றங்களையே மிரட்டும் விதமாக அறிக்கைகளை அன்றையிலிருந்தே விட்டு வருகின்றனர்.

**அவசரப் பிரகடனம்**

இப்போதைய குடியரசு தலைவர் சங்கப் பரிவாரத்தைச் சார்ந்தவர் என்பதால் அவர் மூலம் ஓர் அவசரப் பிரகடனத்தைக்

கொண்டு வந்து கோயிலைக் கட்டிட வேண்டும் எனத் துடித்துக் கொண்டிருக்கின்றனர்.

எடுத்துக்காட்டாக அவர்களின் இந்து பத்திரிகையில் அக்டோபர் 30, 2018 ஆம் நாள் இடம் பெற்ற அறிக்கைகளைக் குறிப்பிடலாம். அதனை இந்து பத்திரிகை இப்படித் தலைப்பிட்டது.

"சங்கப் பரிவாரங்கள் குடியரசு தலைவரின் அவசரப் பிரகடனத்திற்கு அழுத்தங்களைத் தந்து கொண்டிருக்கின்றன" - sang Parivas Ayodhya Order - The Hindu Oct 30, 2018

இந்த அழுத்தம் எப்போது வருகின்றது என்றால் உச்ச நீதிமன்றம் அக்டோபர் 29, 2018 அன்று பிறப்பித்த ஆணைகளின் பின்னணியில் வருகின்றன.

அக்டோபர் 29, 2018 - இல் உச்சநீதிமன்றம் பிறப்பித்த ஆணையில், ஜனவரி 2019ஆம் ஆண்டு பாபரி மஸ்ஜித் வழக்குக்காக ஒரு "பெஞ்ச்" 8 நீதிபதிகளைக் கொண்ட ஓர் அமர்வு நியமிக்கப்படும், அந்த அமர்வு பாபரி மஸ்ஜித் வழக்கை விசாரிக்கும் என்றது.

ஆனால் சங்கப்பரிவாரங்கள் 2019ஆம் ஆண்டு மே மாதம் நடக்கவிருக்கும், நாடாளுமன்றத் தேர்தலுக்குள் மஸ்ஜித் நின்ற இடத்தில் கோவில் கட்டிவிட வேண்டும் என்று குதிக்கின்றன.

இது நடந்தால் அவர்களின் பாசிச சிந்தனைக்கு ஒரு செயல் வடிவமும் கொடுத்து விடலாம், நாட்டில் ஏற்கனவே ஏற்படுத்தி வைத்திருக்கும் இந்து - முஸ்லிம் பிரிவினைகள் இன்னும் அதிகமாகும். பல அப்பாவி முஸ்லிம்களை கொன்று குவிக்கலாம். அத்தோடு மோடியின் ஆட்சியிலுள்ள அத்தனைத் தோல்விகளையும் முற்றாக மறைக்கலாம். இன்னொரு முறை ஆட்சியை பிடிக்கலாம்.

**வழக்கறிஞர் கபில் சிபல்**

இந்த பின்னணியில் தான் முஸ்லிம்களின் சார்பில் நியமிக்கப்பட்ட மூத்த வழக்கறிஞர்களுள் ஒருவரான கபில் சிபல் என்ற வழக்கறிஞர், பாபரி மஸ்ஜித் வழக்கை 2019 ஜூலையிலிருந்து, அதாவது 2019 நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் விசாரிக்கலாம் என்றார்.

ஆனால் காங்கிரஸ் கட்சி, இனி கபில் சிபல் முஸ்லிம்களின் சார்பில் பாபரி மஸ்ஜித் வழக்கை வாதிடக் கூடாது எனத் தடை போட்டுவிட்டது.

**எப்போது விசாரணை**

இப்போது பாபரி மஸ்ஜித் வழக்கை 2019 ஜனவரியிலிருந்து விசாரிக்கலாம் என ஆணையிட்டுள்ளது தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் அடங்கிய அமர்வு;

"பாபரி மஸ்ஜித் வழக்கு ஜனவரியிலிருந்தோ, பிப்ரவரியிலிருந்தோ, மார்ச் மாதத்திலிருந்தோ, ஏப்ரல் மாதத்திலிருந்தோ விசாரணைக்கு வரலாம். இதனை நீதிபதிகள் அடங்கிய குழு ஒன்று முடிவு செய்யும்." என்றுக் கூறியுள்ளார்.

அத்தோடு இன்னொன்றையும் தெளிவுப் படுத்தியுள்ளது. அது நாங்கள் ஜனவரி 2019 எனக் கூறியுள்ளது பாபரி மஸ்ஜித் வழக்கை அன்றே விசாரணைக்கு எடுத்துக் கொள்வோம் என்ற பொருளில் அல்ல. மாறாக ஜனவரி 2019 எந்தெந்த நீதிபதிகள் அடங்கிய அமர்வு பாபரி மஸ்ஜித் வழக்கை விசாரிக்கும் என்பதை நியமிப்பதற்குத்தான் என்று தெளிவுப் படுத்தியுள்ளது.

**மூத்த வழக்கறிஞர்கள், நீதியை நாடுவோர் ஆகியோர் முறையீடு**

உச்ச நீதிமன்றம் பாபரி மஸ்ஜித் -ஐ எப்போது விசாரணைக்கு எடுத்தாலும் அது பின்வரும் அடிப்படைகளிலிருந்து நிறுவிடக்கூடாது என்பது சட்ட வல்லுநர்கள் இந்தியாவின் ஒற்றுமையிலும், ஒருமைப்பாட்டிலும் நம்பிக்கை உள்ளவர்கள் வைத்திடும் விண்ணப்பம். அவையாவன;

1. பாபரி மஸ்ஜித் முஸ்லிம்களுக்கு சொந்தமானது என்பதை நிரூபிக்கும் எண்ணற்ற ஆவணங்கள் இருக்கின்றன. முஸ்லிம்களிடமிருந்து பாபரி மஸ்ஜித் வன்முறையின் மூலமே பிடுங்கப்பட்டது. என்பதை நிரூபிக்க 13 ஆவணங்கள் இருக்கின்றன.அத்தனையும் அரசு ஆவணங்கள். இதில் கருத்தில் கொண்டே எல்லா தீர்ப்புகளும் வழங்கப்பட வேண்டும். குறிப்பாக பாபரி மஸ்ஜித்துக்குள் சிலை வைக்கப்பட்ட டிசம்பர் 22/23, 1949 அன்று நடந்தவை அனைத்தும் மிகப்பெரிய குற்றங்கள் என்பது பதியப்பட்டு வழக்குகளும் தொடரப்பட்டிருக்கின்றன. என்பதை நினைவில் கொள்ள வேண்டும் இறுதி தீர்ப்புகளை வழங்கிடுவோர். இந்த குற்றத்தை நியாயப்படுத்தும் அளவில் தீர்ப்பு அமைந்திடக் கூடாது.



*2. வக்ஃப் சொத்துகளின் மேற்பார்வையாளர் முஹம்மத் இப்ராஹீம் அவர்கள் சிலைகள் வைக்கப்படுவதற்கு முன்பே, பாபரி மஸ்ஜிதுக்குள் தொழுகைக்கு செல்பவர்கள் கற்களால் தாக்கப்பட்டார்கள், தொடர்ந்து துன்புறுத்தப் பட்டார்கள் (Harassments) என்பதை பதிவு செய்துள்ளார். இதனை மறுபரிசீலனைச் செய்த அரசு அதிகாரிகள் ஏற்றுக்கொண்டு, குற்றப் பத்திரிகைகளையும் தாக்கல் செய்துள்ளார்கள். ஆக தொடக்கக் காலம் தொட்டே பாபரி மஸ்ஜித் - இல் நடந்து கொண்டிருப்பவை குற்றங்கள் என்பதை பாபரி மஸ்ஜித் வழக்கில் அறுதி தீர்ப்பை வழங்கிடுவோர் கவனத்தில் கொள்ள வேண்டும். இவை தீர்ப்பில் சொல்லப்பட வேண்டும்.*

*3. கற்களால் தாக்கப்பட்ட போதும், தொழுகைக்குச் செல்லும் போது குரூரமான தொந்தரவுகளுக்கு உள்ளாக்கப்படும் போதும் முஸ்லிம்கள் தொடர்ந்து தொழுதுக் கொண்டே இருந்தார்கள். வன்முறையின் மூலமே அவர்கள் தொழுகையிலிருந்து நிறுத்தப்பட்டார்கள்.*

*4. 1949 - இல் இராம் சபுத்ராவில் கோயில் கட்டுவதற்கு பாபரி மஸ்ஜிதுக்கு வெளியே உள்ள திடலில் கோயில் கட்டியது அரசுத் தந்த கள்ளத்தனமான ஆதரவால் தான் என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது.*

### 1949 டிசம்பர் 22/23 அன்று பதியப்பட்ட வழக்கு முதல் தகவல் அறிக்கை - FIR

*5. அன்று அதாவது 1949 டிசம்பர் 22/23 ஆகிய நாட்களில் (22ஆம் நாள் இரவு) சிலை வைக்கப்பட்ட போது அங்கு பள்ளியில் இருந்த (Sub Inspector) துணை ஆய்வாளர் இராம் குபே (Ram Kube) அயோத்யா காவல் நிலையத்தில் ஒரு முதல் தகவல் அறிக்கையை தாக்கல் செய்தார். அதில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.*

*நிலைய அதிகாரி (Station Officer) S.O. வின் அறிக்கை 23 டிசம்பர் 1949 U/S 147/295/448 தாசிராளி ஹிந்த் (IPC) பதிவு செய்தவர் பண்டிட் ஷரீ ராம் டியோ குபே, பொறுப்பு வகித்த மூத்த துணை ஆய்வாளர்; Senior Sub Inspector in charge தானா (PS) காவல் நிலையம்.*

**எதிரிகள்**

*01.அபேய் ராம்தாஸ்ராம், 02.சுக்ளதாஸ், 03.சுதர்ஷன் தாஸ் R/O அயோத்தியா, பைஜாபாத் இன்னும் 50 முதல் 60 பேர். அவர்களின் பெயர்களும், முகவரிகளும் தெரியாது. தானா அயோத்தியா*

**வரைவு**

*மாதா பிரசாத் - காண்டபுல் எண் 7, தந்த தகவலின் அடிப்படையில் காலை சுமார் 9.00 மணி அளவில், நான் ஜென்ம பூமியை சென்றடைந்த போது 50 முதல் 60 பேர் பாபரி மஸ்ஜித் வளாகத்தின் (காம்பவுண்ட் - Compound) கதவுகளின் பூட்டை உடைத்துக் கொண்டும், காம்பவுண்ட் சுவரில் ஏறி உள்ளே குதித்தும் சிரீ ராம் பகவானின் சிலையை வைத்து விட்டார்கள்.*

*அத்தோடு சுவரில் சீத்தாவின் உருவத்தையும் காவி மற்றும் மஞ்சல் நிறங்களில் வரைந்து வைத்திருந்தார்கள். இந்த வரைவுகள் உள் மற்றும் வெளிச் சுவர்களிலும் வரையப்பட்டிருந்தன. ஹன்ஸ் ராஜ் என்ற காவலர் (காவல் எண் 70) அவர்களைத் தடுக்க முயன்றார். ஆனால் அவர்கள் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை.*



அங்கே நின்றிருந்த (PAC - Provincial Armed Constabulary) 'பி.ஏ.சி.' என்ற காவலர் பிரிவு உதவிக்கு அழைக்கப்பட்டது. ஆனால் அப்போது அந்த மக்கள் மஸ்ஜிதுக்குள் புகுந்து விட்டார்கள். மூத்த மாவட்ட அதிகாரிகள் அந்த இடத்தைப் பார்வை இட்டார்கள். நடவடிக்கை எடுக்க விரைந்தார்கள்.

பின்னர் ஐந்தாயிரம் முதல் ஆறாயிரம் வரை மக்கள் அங்கே திரண்டார்கள். மஸ்ஜிதுக்குள் நுழைந்திட முயற்சி செய்தார்கள். அவர்கள் மத முழக்கங்களையும், கீர்த்தனைகளையும் பாடியவாறே வந்தார்கள். ஆனால் முறையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததால் எதுவும் நடக்கவில்லை.

குற்றத்தை செய்தவர்கள் ராம்தாஸ், சுகள்தாஸ், சுதர்ஸன் தாஸ் இன்னும் 50 முதல் 60 பேர் - அவர்களின் பெயர்கள் அறியப்படவில்லை. மஸ்ஜிதை அசிங்கப்படுத்தி விட்டார்கள். அத்துமீறியும், கலவரங்களை செய்தும், சிலைகளை மஸ்ஜிதில் வைத்தும் இதைச் செய்தார்கள். இதனை அப்போது பணியிலிருந்த பல அலுவலர்களும், இன்னும் பல மக்களும் அதைப் பார்த்தார்கள். ஆகவே இந்த வழக்கு சோதனை செய்யப்பட்டது. சரியென உறுதிச் செய்யப்பட்டது.

நான் தலைமை முஹாரிர் சான்று பகறுகின்றேன். இந்த வழக்கு துணை ஆய்வாளரின் அறிக்கைப்படி பதிவு செய்யப்பட்டது. படிக்கப்பட்டது. இது சரியானது.

(ஒப்பம்: தலைமை முஹாரிர்)

(**ஆதாரம்**: FIR Copy Announced with Babri masjid depute, As hand over by Advocate Jay yer yab Gelani doing with other Documents of Babari Masjid)

6. இந்த முதல் தகவல் அறிக்கை, அதனை தொடர்ந்து வந்த வழக்குகள் எல்லாம் சொல்லும் உண்மைகள்:

நின்று கொண்டிருந்த பாபரி மஸ்ஜித் என்றும், சிலை வைத்தது கிரிமினல் குற்றம் என்றும் அதன் அடிப்படையில் வழக்குகள் தொடுக்கப்பட்டு நடந்தன என்றும் உறுதி செய்யும். சிலை வைக்கும் போது நடந்த அத்து மீறல்களுக்கு அரசு அதிகாரிகளே சாட்சியம் என்பதையும் தெளிவாக எடுத்துக் காட்டும். இந்த குற்றங்களை நியாயப்படுத்திடும் அளவில் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு அமைந்திடக் கூடாது என்பதை உச்ச நீதிமன்றம் வழங்கும் தீர்ப்புக் கவனத்தில் கொண்டிட வேண்டும்.

7. டிசம்பர் 23, 1949 இம் மாவட்ட நீதிபதி கே.கே. நய்யர் (நாயர்) முதலமைச்சர், தலைமை செயலாளர் (உத்திரப்பிரதேசம்) ஆகியோருக்கு வானொலி மூலம் தந்த தகவல்கள் அன்றே அரசு ஆவணங்களில் இப்படிப் பதியப்பட்டுள்ளது.

"சில இந்துக்கள் இரவில் பாபரி மஸ்ஜிதுக்குள் நுழைந்தார்கள். அப்போது மஸ்ஜிதின் புனிதம் களங்கப்படுத்தப்பட்டது. சிலைகள் வைக்கப் பட்டன." (Frontline Line: Nov 9, 2018 Page 54)

8. டிசம்பர் 26, 1949 இல் கே.கே. நய்யார்( நாயர்) தலைமை செயலாளருக்கு இப்படி எழுதினார்.

'சிலைகள் பள்ளிவாசலுக்குள் 22/23 இரவில் வைக்கப்பட்டன. டிசம்பர் 22, 1991இல் இராமச்சந்திர தாஸ், பரமிஹம் தாஸ் என்பவர் நியூயார்க் டைம்ஸ் - Newyork Times எனும் பத்திரிகைக்கு அளித்தப் பேட்டியில் "The Newyork Times" நாங்கள் தாம் சிலைகள் வைத்தோம்: என ஒப்புதல் வாக்குமூலம்

வழங்கி இருந்தார்.

*9.* இவையெல்லாமல் ஜனவரி *9, 1950* - இல் அன்றைய பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால் நேரு, உத்திரப்பிரதேச முதலமைச்சர் ஜி.பி. பந்த் அவர்களுக்கு எழுதிய கடிதம், அதே தேதியிட்டு அன்றைய இந்திய உள்துறை அமைச்சர் சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்களுக்கு பிரதமர் நேரு அவர்கள் எழுதிய கடிதங்கள், பாபரி மஸ்ஜிதுக்குள் சிலைகள் அத்துமீறி வைக்கப்பட்டன என்ற உண்மையை உறுதிப்படுத்தும். அத்தோடு சிலைகளை அகற்றிட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன என்பதையும் உறுதிபடுத்தும்.

*10.* பிற்றை நாட்களின் காந்தியவாதி, அக்சய பிரம்மச்சாரி அவர்கள் உள்துறை அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரி அவர்களிடம் தந்த அறிக்கை அனைத்தும் பாபரி மஸ்ஜிதுக்குள் சிலைகள் அத்துமீறி வைக்கப்பட்டன என்ற உண்மையை அறிவுறுத்தும். ஆக, வன்முறையின் மூலம் ஒரு மஸ்ஜித் - கோயிலாக மாற்றப்பட்டுள்ளது. அதற்கு சுதந்திர இந்தியாவில் 70 ஆண்டுகளாக நீதி வழங்கப்படவில்லை என்பதையும் அறுதி தீர்ப்பை வழங்கிடும் உச்ச நீதிமன்றம் கருத்தில் கொண்டு 70 ஆண்டுகளாக சிறுபான்மை முஸ்லிம்களுக்கு மறுக்கப்பட்டு வரும் நீதியை வழங்கிட வேண்டும்!

### அலஹாபாத் நீதிமன்றத்தின் அநீதி!

அலஹாபாத் நீதிமன்றத்தின் சிறப்பு அமர்வுதான் உச்சபட்ச அநீதியை செய்தது. செப்டம்பர் 30,2010ஆம் ஆண்டு வழங்கியத் தீர்ப்பில் என்பது நினைவில் கொள்ளப்பட வேண்டும்.

அலஹாபாத் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு உச்ச நீதிமன்றத்தின் அனைத்து வழிகாட்டுதல்களுக்கும் எதிரானது என்பதை நாம் மறந்து விடக் கூடாது உச்ச நீதிமன்றம்.

### உச்ச நீதிமன்றம்

அலஹாபாத் உயர் நீதிமன்றத்தை சாடுகின்ற அதே நேரத்தில் உச்ச நீதிமன்றம் தனது கடந்த கால ஆணைகளையும் தீர்ப்புகளையும் சீர்தூக்கிப் பார்த்திட வேண்டும். காரணம் பாபரி மஸ்ஜித் குறித்து முஸ்லிம்கள் உச்ச நீதிமன்றத்தை அனுகிய போதெல்லாம் உச்ச நீதிமன்றம் அப்பட்டமான அநீதிகளையே தீர்ப்புகளாக தந்தது.


முஸ்லிம்கள் உச்ச நீதிமன்றத்தை அணுகிய போதெல்லாம் முஸ்லிம்களுக்கு எதிராகவும், இந்துக்களுக்குச் சாதகமாகவுமே உச்ச நீதிமன்றம் தீர்ப்புகளை வழங்கியது. இந்தப் பேருண்மையையும் அறுதி தீர்ப்பை வழங்கிடும் முன் உச்ச நீதிமன்றம் கருத்தில் கொள்ள வேண்டும்.

### உச்ச நீதிமன்றம் முறையாக செயல்பட்டிருந்தால்?

"1992 டிசம்பர் 6ஆம் நாள் பாபரி மஸ்ஜித் இடிக்கப்படவிருக்கின்றது. பாதுகாப்பேன் பாபரி மஸ்ஜித் - ஐ இடிக்கப்படாமல் என நீதிமன்றத்தில் வழங்கப்பெற்ற வாக்குறுதியை முதலமைச்சர் கல்யாண் சிங் (அப்போதைய உத்திரப்பிரதேச முதல்வர்) மீறவிருக்கின்றார். பாபரி மஸ்ஜித் பற்றி உச்ச நீதிமன்றம் வழங்கியிருந்த பாதுகாப்பு வழிகாட்டுதல்கள் காற்றிலே பறக்கவிருக்கின்றது." என்றெல்லாம் தகவல்கள் இந்திய உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி வெங்கடாச்சலைய்யாவுக்கு சொல்லப்பட்டது அப்போது.

மிகத்தெளிவாக பாபரி மஸ்ஜித் இடிக்கப்படுவது நிச்சயம் உச்ச நீதிமன்ற தலையிட்டால் மட்டுமே மஸ்ஜித் இடிக்கப்படாமல் தடுக்கப்படும், என்ற தகவலும் சொல்லப்பட்டது இந்தியாவின் தலைமை நீதிபதி அவர்களுக்கு.

ஆனால் தலைமை நீதிபதி வெங்கடாச்சலைய்யாவுக்கு பாபரி மஸ்ஜித் இடிக்கப்படுவதை பற்றிய கவலை இருக்கவில்லை. மாறாக அவர் நக்கலும், நையாண்டியும் நிறைந்த தோரணையில், கரசேவகர்களின் பாதுகாப்பைப் பற்றிக் கவலைப்பட்டார். கரசேவகர்களுடைய பாதுகாப்பைப் பற்றி மெத்தக் கவலையோடு விசாரித்துக் கொண்டிருந்தார்.



ஏ.ஜி. நுரானி

இதனை மூத்த வழக்கறிஞரும், வரலாற்று ஆய்வாளருமான ஏ.ஜி. நூரானி அவர்கள் இப்படி பச்சையாகப் பதிவு செய்கின்றார். உச்ச நீதிமன்றம் முஸ்லிம்களுக்கு இழைத்த அநியாயம் அப்படியே பதியப்பட வேண்டும் என்பதற்காக அதனை வைகறையில் பதிவு செய்கின்றோம்.

**அவர் கூறியதன் தமிழாக்கம்**;

“அன்றைய இந்திய தலைமை நீதிபதி கே.என். வெங்கடாச்சாலைய்யாவிடம் கீழறுப்பு வேலைகள், (நயவஞ்சகத்தனம்) இவை இல்லாமலிருந்திருந்தால் பாபரி பள்ளிவாசல் டிசம்பர் 6, 1992இல் இடிக்கப் பட்டிருக்காது. தலைமை நீதிபதி வெங்கடாச்சலையாவுடன் அதே அமர்வில் இருந்த ஏ.என். ரேயும் இந்த கீழறுப்பு வேலைகளுக்கு துணை நின்றார். முதலமைச்சர் கல்யான் சிங் நவம்பர் 25, 1991 இல் உச்ச நீதிமன்றம் விதித்தத் தடை ஆணை, உயர் நீதிமன்றம், ஜூலை 15, 1992 இல் விதித்தத் தடை ஆணை ஆகியவற்றை தாராளமாக மீறினார். அவரை உச்ச நீதிமன்றமோ, உயர் நீதிமன்றமோ கண்டு கொள்ளவில்லை.

(முதலமைச்சர் கல்யான் சிங்) - ஐ அட்டார்னி ஜெனரல் அரசின் தலைமை வழக்கறிஞர் மிலன் கே யாதவ் எச்சரித்துக் கொண்டார். (அதாவது முதலமைச்சராகிய நீங்கள் உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றம் ஆகியவற்றின் ஆணைகளைத் தொடர்ந்து மீறிக் கொண்டே இருக்கின்றீர்கள் என எச்சரித்துக் கொண்டே இருந்தார்.) அதனை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியிடமும் சொல்லிக் கொண்டே இருந்தார். ஆனால் தலைமை நீதிபதி ஒருக்கட்டத்தில் கரசேவர்களின் பாதுகாப்பைப் பற்றிக் கவலைப்பட்டார். ஆனால் பாபரி மஸ்ஜித் - ஐ பாதுகாப்பதைப் பற்றிக் கவலைப்படவில்லை. நீதிமன்ற உத்தரவுகளைப் பற்றியோ உச்ச நீதிமன்றம் பிறப்பித்த தடை ஆணைகளைப் பற்றியோ கவலைப்படவில்லை.

இறுதியில் தலைமை நீதிபதி வெங்கடாச்சாலய்யா ஓய்வு பெறுவதற்கு ஒரு நாளைக்கு முன்னால் அக்டோபர் 24, 1994 அன்று முதலமைச்சர் அவர்களை நீதிமன்ற அவமதிப்பிற்காக ஒரு நாள் நீதிமன்றக் காவலில் வைத்து வாழ்த்தி அனுப்பினார்.

அரசியல் நிர்ணயச்சட்டம், உச்ச நீதிமன்ற தடை உத்தரவுகள், உயர் நீதிமன்ற தடை உத்தரவுகள் இவற்றையெல்லாம், காலிலே போட்டு மிதித்தமைக்காக, தலைமை நீதிபதி வெங்கடாச்சலைய்யா ஓய்வு பெற்ற பின் 1998/1999 இல் ஆட்சிக்கு வந்த பாரதீய ஜனதா கட்சி வெங்கடாச்சலைய்யாவுக்கு, அரசியல் நிர்ணயச் சட்டம் மறு ஆய்வுக் குழுவின் தலைவராக (Chairman Constitution Review Committee) நியமனம் செய்து, சகல வசதிகளையும் செய்து தந்து பெரும் பணத்தையும் சம்பளமாகவும் தந்தது.

நீதிபதி வெங்கடாச்சலைய்யா தயாரித்த அறிக்கையை யாரும் ஏறெடுத்தும் பார்த்ததில்லை.

ஆதாரம் : **Frontline : Nov 9, 2018 pages, 54,58**

அன்றைய உச்ச நீதிமன்ற நீதிபதி வெங்கடாச்லைய்யா கரசேவகர்களின் பாதுகாப்பைப் பற்றிக் கவலைப்பட்டார். அன்றைய பிரதமர் நரசிம்ம ராவ், எது வந்தாலும் கரசேவகர்களை நான் எதுவும் செய்ய மாட்டேன் என சாதுக்களிடம் உத்தரவாதம் தந்தார். (விரிவான தகவல்களுக்கு பார்க்க: பாபரி மஸ்ஜித் அடிப்படைத் தகவல்கள். நூல் வெளியீடு: வேர்கள் பதிப்பகம். ஆசிரியர் : மு. குலாம் முஹம்மது)

இதே உச்ச நீதிமன்றத்திடம் தான் இன்னும், இன்றும் நாடு பாபரி மஸ்ஜித் வழக்கில் நீதியை எதிர்ப்பார்த்த நிற்கின்றது.

**ஒரு வேளை உச்ச நீதிமன்றம் நீதி வழங்கினால்..?**

பாப்ரி மஸ்ஜித் வழக்கில் இதுவரை நீதிமன்றங்கள் அநீதியையே தீர்ப்பாக வழங்கியுள்ளன. ஒரு வேளை அவை உண்மையான நீதியை வழங்கினால் என்ன நடக்கும் என்பதற்கு உச்ச நீதிமன்றமே சாட்சி!

பாபரி மஸ்ஜித் - இடிப்பின் இறுதி வேலைகளைச் செய்து முடித்தவர் அன்றைய பிரதமர் நரசிம்ம ராவ் தான். அரசின் புல்டோசர்களைக் கொண்டு எஞ்சி இருந்த மஸ்ஜித் - ஐ இடித்துத் தரை மட்டமாக்கினார். அதே வேகத்தில் உச்ச நீதிமன்றத்தில் ஒரு மனுவைத் தாக்கல் செய்தார். இந்த மனு அரசியம் நிர்ணயச் சட்டம் பிரிவு 143 - இன் கீழ் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவில் அவர் - நரசிம்ம ராவ் அரசின் சார்பில் வைத்த கோரிக்கை அல்லது கேள்வி, பாபரி மஸ்ஜித் நின்றிருந்த இடத்தின் கீழ் ஒரு கோயில் இருந்ததா? என்பதே (விரிவான தகவல்களுக்கு: பாபரி மஸ்ஜித் அடிப்படை



தகவல்கள் - வேர்கள் வெளியீட்டகம்).

இதற்கு பதில் சொல்லும் பயிற்சியோ, பாடமோ நீதிபதிகளுக்கு இல்லை. இது நீதிமன்றங்களின் வேலையுமில்லை எனக் கூறிய உச்ச நீதிமன்றம், உலகில் உள்ள எந்த நாட்டிலும், உலகில் உள்ள எந்த நீதிமன்றத்திடமும் இப்படி ஒருக் கேள்வி வைக்கப்பட்டதில்லை எனக் கூறிவிட்டது.

இந்த வழக்கு செப்டம்பர் *6, 1993*இல் உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது அப்போது தலைமை நீதிபதி எஸ்.பி. பரூச்சா பிரிதொரு எதிர் வினாவை அரசிடமும், நீதிபதிகளிடமும் வைத்தார்கள். அந்தக் கேள்வி அரசின் இந்தக் கோரிக்கையை ஏற்று அங்கு ஒருக் கோயில் இருந்ததில்லை எனத் தீர்ப்பு வழங்கினால், பாபரி மஸ்ஜித் மீண்டும் அதே இடத்தில் கட்டித் தரப்படுமா? என்பதே

இந்தக் கேள்விக்கு அப்போதைய அரசு வழக்கறிஞர் Solicitor General ஒரு வாரத்திற்கு அரசைக் கேட்டு பதில் சொல்வேன் என்றார். ஆனால் செப்டம்பர் *14* ஆய்வு நாள்*(1993)* வழக்கு மீண்டும் வந்த போது அரசு இது குறித்துச் சொல்வதற்கு ஏதுமில்லை எனக் கூறிவிட்டார். (ஆதாரம்: Frontline Nov *9, 2018* AGN கட்டுரை)

ஆக பாபரி மஸ்ஜித் - ஐ மீண்டும் கட்டித் தந்திட வேண்டும் என்றோ, இல்லை அந்த இடம் பாபரி மஸ்ஜித் மற்றும் அதைச் சுற்றியுள்ள *2.77* ஏக்கர் நிலம் முஸ்லிம்களுக்கு சொந்தம் என்றோ தீர்ப்பு வந்தால் அதைச் செயல்படுத்தும் மனம் எந்த அரசுக்கும் இருக்காது.


உச்ச நீதிமன்றம் துணிந்து உண்மையையே தீர்ப்பாகத் தரும் என்ற நம்பிக்கை முஸ்லிம்களுக் கிருந்தால் அவர்கள் பாபரி மஸ்ஜித் - ஐ மீண்டும் கட்டிடும் முயற்சிகளை மேற்கொள்ளட்டும்.

உச்ச நீதிமன்றம் பாபரி மஸ்ஜித் வழக்கில் இறுதி தீர்ப்பை வழங்கிடும் போது நீதி முஸ்லிம்களின் பக்கமிருந்தால் (அவர்கள் பக்கம் தான் இருக்கிறது) அதனை துணிந்து வழங்கிட வேண்டும். அத்தகையதொரு தீர்ப்பை இருக்கின்ற அரசுகள் செயல்படுத்தாது. நம் எண்ணங்களிலிருந்து முற்றாக விடுவித்திட வேண்டும்.


பாபரி மஸ்ஜித் இருந்த இடத்தில் கோவில் கட்டுவோம், என இப்போது கூப்பாடு போடுபவர்கள் மீது, நீதிமன்ற அவதூறு உட்பட உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

அலஹாபாத் நீதிமன்றம் செப்டம்பர் *30, 2010* - இல் தந்த தீர்ப்பை நிராகரிப்பதில் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் யாரும் கருத்து வேறுபடவில்லை. அந்தத் தீர்ப்பை நிராகரிப்பதில் மெஜாரிட்டி நீதிபதிகள் மைனாரிட்டி நீதிபதிகள் எனக் கருத்து வேறுபாடுகள் இருக்கவில்லை என்பதையும் கருத்தில் கொண்டு நீதி வழங்கிட வேண்டும்.

அப்போது மட்டுமே இந்திய நீதி பரிபாலனம் உலக அரங்கில் உயர்ந்து நிற்கும்.


பாபரி மஸ்ஜித் அடிப்படைத் தகவல்கள்.
விலை: 90/-


+91 8148129887



# மஸ்ஜித்களும்! இஸ்லாமும்!!

பாபரி மஸ்ஜித் வழக்கு நீதிமன்றங்களை எட்டிப்பார்த்த போதெல்லாம், அநீதியே தீர்ப்பாக வந்தது!

இப்போது கழுதை தேய்ந்து கட்டெறும்பாகப் போன கதையாக - மஸ்ஜித்கள் இஸ்லாத்தின் முக்கியப் பகுதியல்ல அவர்கள் எங்கே வேண்டுமானாலும் தொழலாம். திறந்த வெளியிலும் தொழலாம் என அன்றைய உச்ச நீதிமன்ற நீதிபதி ஜெ.எஸ். வர்மா அவர்கள் கூறியதை விவாதமாக்கி விடுகின்றார்கள்.

நீதிபதி வர்மா தனது கூற்றிற்காக பயன்படுத்தியது மௌலானா ஷஹீதுத்தீன் கான் அவர்களின் கூற்று ஒன்றைத்தான் பயன்படுத்தியுள்ளார். இதில் ஷஹீதுத்தீன் கான் எழுதிய இந்திய முஸ்லிம்கள் 'Indian Muslims' என்ற நூலை மிகையாக சார்ந்துள்ளார்.

ஒரு நீதிபதி என்ற அளவில் ஒருவர் சில நூல்களை அடிப்படையாகக் கொள்கின்றார், தான் கூறும் சில கூற்றுகளுக்கு என்றால், அவர் அந்தத் துறையில் வந்துள்ள நடுவு நிலையாளர்கள் சிலரின் கூற்றுகளைப் படித்திருக்கலாம். அவர்கள் மௌலானா வஹீதுத்தீன் கானைப்போல் பயந்தும், பதறியும் சங்கப் பரிவாரத்திற்கும் துதி பாடுபவர்கள் அல்ல.

அவர்கள் ஆய்வாளர்கள், அவர்கள் நடுவு நிலையோடு நின்று இஸ்லாம் - மஸ்ஜித் இவற்றை ஆய்வு செய்த முஸ்லிமல்லாத ஆய்வாளர்கள். மதம் சார்ந்த படிப்புகள் (Study on Religious) என்றால் அறிவைத் தேடுபவர்கள், இவர்களை விட்டுப் போவதில்லை அவர்கள்.

Shorter Encyclopedia of Islam H.A.R. GIBB and J.H. KRAMERS இந்த நூல் இஸ்லாத்தைப் பற்றிய இலக்கியங்களில் மிகவும் உயர்ந்த தரத்தில் உள்ளவை என்றும் அதிகமாக வாசிக்கப் பட்டவை என்றும் பேசப்படுபவை.

இந்த நூலில் உள்ள ஒவ்வொரு வரியும் பெரிய சான்றோர்களால் வரையப்பட்டவை எனப் போற்றப்பட்டவை. இதில் பக்கங்கள் 330 முதல் 353 வரை மஸ்ஜித்களைப் பற்றி வருகின்றது. அதில் மஸ்ஜித்கள் தொழுகைக்கு மட்டுமல்ல, இஸ்லாமிய சமுதாய அமைப்பின் அனைத்து நிர்வாகங்களுக்கும் மஸ்ஜித்களே பயன்படுத்தப்பட்டன.

மஸ்ஜித்கள் பற்றிய இதர தரவுகளைப் படித்தால் மஸ்ஜித்களே எல்லாம் என்ற முடிவுக்கு எளிதில் வந்து விடலாம். இந்தப் பின்னணியில் ஜெ.எஸ். வர்மாவின் மஸ்ஜித்கள் பற்றிய கூற்றை முழு அறிக்கை என்றே சொல்ல வேண்டும்.

(Mosque in Islamic Law and Faith: Frontline; Nov 9, 2018 AGN)

**- MGM**


தமிழகத்தில் கடந்த 15ம் தேதி இரவு கஜா புயல் கரையை கடந்த நிலையில் நாகை, புதுக்கோட்டை, தஞ்சாவூர் உள்ளிட்ட காவிரி டெல்டா மாவட்டங்கள் கடுமையான இழப்பை சந்தித்துள்ளன.

மிகவும் பாதிப்புக்குள்ளான தென் தமிழக மக்களுக்கு உதவ பல தொண்டு நிறுவனங்களும், தன்னார்வலர்களும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அதன் வரிசையில் தாருல் இஸ்லாம் அறக்கட்டளையும் தன்னுடைய அறப்பணிகளைச் செய்து வருகிறது. (புகைப்படங்கள் அடுத்தப் பக்கத்தில்)

# கஜா புயல்

## நிவாரணப் பணிகளில் தாருல் இஸ்லாம்



















# IRCTC ஒப்பந்த முறைகேடு வழக்கில் சிக்க வைக்கப்பட்டாரா லாலு?

இந்தியாவின் உச்சபட்ச புலனாய்வு அமைப்பான மத்திய புலனாய்வு துறை CBI-யின் இயக்குனராக கடந்த 2017 ஆம் ஆண்டு ஜனவரியில் பொறுப்பேற்றார் அலோக் வர்மா. அப்போது சிபிஐ-யின் சிறப்பு இயக்குனராக ராகேஷ் அஸ்தானா நியமிக்கப்பட்டார்.

வரும் ஜனவரியில் அலோக் வர்மா ஓய்வு பெறவிருந்தார். இதனால் அவருக்கு அடுத்த நிலையில் இருக்கும் ராகேஷ் அஸ்தானா சிபிஐ இயக்குனராக நியமிக்கப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகின.

இந்நிலையில் ஒருவருக்கொருவர் ஊழல் குற்றசாட்டுகளை சுமத்தினர். எனவே இருவருமே தற்போது விடுப்பில் அனுப்பப்பட்டுள்ளனர்.

வரலாற்றிலேயே முதன்முறையாக, சிபிஐ தனது சொந்த அலுவகத்திலேயே அக்டோபர் 22 அன்று தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டது.

அதில், டி.எஸ்.பி தேவேந்தர் குமார் ஆவணங்களை கையாள்வதில் மோசடி செய்ததாக குற்றச்சாட்டின் அடிப்படையில் கைது செய்யப்பட்டார். இது, சிபிஐ சிறப்பு இயக்குநர் ராகேஷ் அஸ்தானா லஞ்சம் வாங்கியதாக குற்றம்சாட்டப்பட்ட வழக்குடன் தொடர்புடையது.

**விவகாரம் என்ன?**

ராகேஷ் அஸ்தானாவின் தலைமையில், சிறப்பு விசாரணை குழு (SIT) அமைக்கப்பட்டது, அந்தக் குழு இறைச்சி ஏற்றுமதியாளர் மொயின் குரேஷி வழக்கை விசாரித்துக் கொண்டிருந்தது.

தேவேந்திர குமார் சிறப்புக் குழுவில் ஒரு புலனாய்வு அலுவலராக பணியாற்றினார். அக்டோபர் 22 பிற்பகல் 2மணியளவில் தேவேந்திர குமார் கைது செய்யப்பட்டார். அதற்கு முன்னதாக வெள்ளிக்கிழமையன்று, சிபிஐ பவனில் உள்ள தேவேந்திர குமாரின் அலுவலகத்தில் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அக்டோபர் 23 அன்று தாக்கல் செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையில், குற்றம் சாட்டப்பட்டவர்களின் பட்டியலில் அஸ்தானா முதலிடத்திலும், தேவேந்திர குமார் இரண்டாம் இடத்திலும் இடம் பெற்றுள்ளார்கள்.

மொயின் குரேஷி வழக்கில் ஒரு சாட்சி ஐதரபாத் தொழிலதிபர் சனா சதீஸ் பாபு. இவர் அளித்த புகாரின் பேரில் ராகேஷ் அஸ்தானா உள்ளிட்டோர் லஞ்ச புகாரில் சிக்கியுள்ளனர்.

சனா பாபுவை மனோஜ் பிரசாத், சோமேஷ் பிரசாத் சகோதரர்கள் CBI அதிகாரிகள் சார்பாக அணுகியதாக புகாரில் கூறப்பட்டுள்ளது.

5 கோடி லஞ்சமாக கொடுத்தால் மொயின் குரோஷி வழக்கிலிருந்து சனா பாபுவை விடுவிப்பதாக அவர்கள் பேரம் பேசியுள்ளனர். 5 கோடியில் முன்பணமாக 3 கோடி ரூபாயை 5 தவணைகளில் 2017 டிசம்பர் முதல் அக்டோபர் 2018 வரையிலும் கொடுத்துள்ளதாகவும் ஆதாரங்களை சனா பாபு வழங்கியுள்ளார்.

சனா பாபுவின் வாக்குமூலம் நீதிபதி முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு ராகேஷ் அஸ்தானா, துணை கண்காணிப்பாளர் தேவேந்திர குமார், இடைதரகர்கள் (மனோஜ் பிரசாத், சோமேஷ் பிரசாத்) மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

**லாலுவை சிக்க வைக்க முனைப்புடன் செயல்பட்ட சுஷில் மோடி, பிரதமர் அலுவலகம்:**

அலோக் வர்மா மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக நீதிபதி பட்நாயக் மேற்பார்வையில் மத்திய ஊழல் தடுப்பு குழு ஒன்றை நியமித்து கடந்த 26/10/2018 அன்று உத்தரவிட்டிருந்தது உச்ச நீதிமன்றம்.

ஊழல் கண்காணிப்பு ஆணையத்தில் விசாரணைக்காக ஆஜராகிய சிபிஐ முன்னாள் இயக்குநர் அலோக் வர்மா தனக்கு எதிரான எல்லா குற்றசாட்டுகளையும் மறுத்ததோடு, ஐ.ஆர்.சி.டி.சி ஊழல் வழக்கு தொடர்பாக அதிர்ச்சிகரமான பல குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார்.

IRCTC ஊழல் வழக்கில் அலோக் வர்மாவின் தலையீடு இருப்பதாக குற்றம் சாட்டினார் அந்த வழக்கை விசாரித்த ராகேஷ் அஸ்தானா. இந்த குற்றசாட்டை அலோக் வர்மா மறுத்தார். பாஜக மூத்த தலைவர் சுஷில் மோடி(பீகார்), சிபிஐ முன்னாள் சிறப்பு இயக்குனர் ராகேஷ் அஸ்தானா மற்றும் பிரதமர் அலுவலகம் ஆகியவை கூட்டாக இணைந்தே, ஐ.ஆர்.சி.டி.சி ஊழல் வழக்கில், லாலுவை சிக்க வைத்ததாக மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணைய விசாரணையில் தெரிவித்துள்ளார்.

பீகாரில் பாஜகவுக்கு எதிராக கூட்டணி அமைத்த நிதிஷ் குமார் - லாலுபிரசாத் யாதவின் உறவில் விரிசல் ஏற்பட்டு,அவர்கள் பிரிந்த போது, லாலுவுக்கு எதிரான நடவடிக்கையாகவே ஐ.ஆர்.சி.டி.சி ஊழல் வழக்கு ஜோடிக்கப்பட்டதாகவும் வர்மா தனது வாக்கு மூலத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐ.ஆர்.சி.டி.சி வழக்கில், லாலு பிரசாத் யாதவ் - சக்சேனா (IRCTC முன்னாள் இயக்குனர்) ஆகியோர் ஜோடிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் சிக்க வைக்கப்பட்டுள்ளதாகவும், அவர்கள் மீதான குற்றச்சாட்டை உறுதியாக்கும் வகையில் போதிய ஆவணங்கள் இதுவரை கிடைக்க வில்லை என மேற்பார்வை அதிகாரிகள் கருதுவதாக அலோக் வர்மா குறிப்பிட்டுள்ளார்.

தன்னாட்சி அதிகாரம் பெற்ற அமைப்பான சி.பி.ஐ-யில், பிரதமர் அலுவலகம் பல முறை தலையிட்டு விசாரணையின் போக்கை திசை திருப்ப முயற்சித்ததாகவும், இதன் பின்னணியில் பிரதமர் அலுவலகத்தில் உள்ள மூத்த அதிகாரிகள் பலருக்கும் தொடர்பு உள்ளதாக அதிரடியான தகவல்களைக் கூறியுள்ளார். முறையான விசாரணை நடைபெறும் என ஊழல் கண்காணிப்பு ஆணையம் உறுதி அளித்தால், பிரதமர் அலுவலகத்தில் உள்ள மூத்த அதிகாரிகளின் பெயர்ப்பட்டியலை வழங்கவும் தயாராக இருப்பதாகவும் அலோக் வர்மா தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

*தகவல்கள் ஆதாரம்: BBC TAMIL 24/10/2018, NEWS18 22/10/2018, NEWS7 TAMIL 19/11/2018, THEWIRE 18/11/2018*

# வாக்காளர்கள் பெயர் நீக்கங்கள்

எப்படியாவது இந்த ஆட்சியை தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்கிற முனைப்போடு எல்லாவகையிலும் பிஜேபி சங்பரிவார் அமைப்புகள் முழுவீச்சில் களம் இறங்கி விட்டன.

அதன் முன்னோடியாக கர்நாடகத்தில் 12 லட்சம் முஸ்லிம்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கியதும் அதன் காரணமாக காங்கிரஸை விட குறைந்த வாக்குகள் பெற்றாலும் பிஜேபி அதிக தொகுதிகளை கைப்பற்றியது.

ஆனால் அவர்களுக்கு பெரும்பான்மை கிடைக்காமல் போனதற்கு முஸ்லிம்களிடம் ஏற்பட்ட மிகப்பெரிய தெளிவு ஒரு காரணம். முஸ்லிம்களின் விடுபட்ட பெயர்களை கண்டுபிடித்து அதனை சேர்த்ததன் மூலம் அவர்களின் பெரும்பான்மை தடுக்கப்பட்டது என்கிற உண்மை இதில் அடங்கும்.

மேலும் அவர்களின் இந்த விளையாட்டை இந்தியா முழுக்க கொண்டு சென்று இதை ஒரு பெரும் விவாதப் பொருளாக மாற்றியதற்கு இமாம்களின் மிகப்பெரிய பங்கும் காரணம். மற்றும் எல்லா மாதத்திலும் வாக்காளர் பட்டியல் பற்றி செய்திகளை அளித்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தியதில் வைகறை வெளிச்சம் மாத இதழும் முன்னோடியாக இருக்கின்றன.

தமிழகத்தில் இருந்து நீக்கப்பட்ட 10 லட்சம் முஸ்லிம் வாக்காளர்களும் கிட்டத்தட்ட முழுமையாக சேர்க்கப்பட்டு விட்டதாகவே தோன்றுகிறது அந்த அளவிற்கு மக்களிடம் ஒரு தெளிவு ஏற்பட்டு உள்ளது. எல்லா புகழும் இறைவனுக்கே.

மேலும் இதர கட்சிகளும் பிஜேபியை ஒரு பெரும் ஆபத்து என்பதை இப்போதாவது உணர்ந்திருக்கிறார்கள் அதன் காரணமாக பல்வேறு மாநிலங்களில் நேரெதிராக இருக்கின்ற அரசியல் கட்சிகள் கூட இப்போது சேர்ந்து பணியாற்ற தொடங்கிவிட்டார்கள்.

முஸ்லிம்களின் வாக்குகள் மட்டுமல்லாமல் ராஜஸ்தான் மத்திய பிரதேசம் போன்ற மாநிலங்களில் தலித் வாக்குகளையும் காணாமல் செய்திருக்கிறார்கள் இதனை காங்கிரஸ் உச்சநீதிமன்றம் வரை சென்று எந்த பலனும் எட்ட முடியவில்லை. வரக்கூடிய தேர்தல் முடிவுகளைப் பொறுத்தே இந்த சூழ்ச்சி எந்த அளவிற்கு பிஜேபிக்கு வெற்றியை தரப்போகிறது என்று பார்ப்போம்.

அதன் தொடர்ச்சியாக சில தினங்களுக்கு முன்பு டெல்லி துணை முதலமைச்சர் மணிஷ் சிசோதியா அவர்கள் பத்திரிகைக்கு ஒரு பேட்டியில் டெல்லியில் காணாமல் போன 11 லட்சம் வாக்குகளுக்கு பிஜேபியே முழுக்க காரணம் என்று நேரடி குற்றம்சாட்டினர்.

வழக்கம்போல் மீடியாக்கள் இந்த செய்தியை ஒரு விவாதப்பொருளாக மாற்றாமல் இருட்டடிப்பு செய்ததின் மூலம் தாங்கள் எப்போதும் சங்பரிவாரின் அடிவருடி தான் என்று நிரூபித்து வருகிறார்கள். நாட்டின் தலைநகரமாக இருக்கும் மாநிலம் மேலும் அங்கு ஆட்சியில் இருக்கும் துணை முதலமைச்சர் கூறிய கருத்திற்கு பிஜேபி பதில் சொன்னதாக தெரியவில்லை.

சில காலங்களுக்கு முன்பு டெல்லி சட்டமன்றத்தில் வாக்களிக்கும் எந்திரத்தின் நம்பகத்தன்மையை கேள்விக்கு உள்ளாக்கியது ஆம் ஆத்மி கட்சி. சட்டமன்றத்திலேயே அவர்கள் வாக்காளர் எந்திரத்தில் வாக்களித்து அதன் முடிவை காண்பிக்கும்போது அளித்த வாக்குக்கும் முடிவுக்கும் எந்த சம்பந்தமே இல்லை என்பது போன்று இருந்தது.

உண்மை என்னவென்றால் வாக்களிக்கும் இயந்திரத்தின் நம்பகத்தன்மை மிகமிக குறைவு என்பதுதான். இப்போது மணிஷ் சிசோதியா வெளியிட்டிருக்கும் தகவலில் தொகுதிக்கு 15 ஆயிரம் மக்கள் விடுபட்டு இருப்பதாகவும் அவர்கள் யார் என்பதை தேர்தல் ஆணையம் உடனே உடனே கண்டுபிடித்து இதன் பின்னணியை ஆராய வேண்டும் என்று கூறியுள்ளார்.

மேலும் விடுபட்ட வாக்காளர்கள் யாரும் புலம் பெயரவோ அல்லது பெயர் நீக்கம் செய்ய வேண்டிய விண்ணப்பம் செய்யவில்லை என்றும் அவர் கூறுகிறார். பிஜேபி தோல்வி பயத்தால் இதனை செய்திருக்கிறது என்று பகிரங்க குற்றம்சாட்டியுள்ளார்.

ஜனநாயகமும் அதன் கட்டமைப்பும் கேலிக் கூத்தாய் இருக்கின்றன என்பது மட்டும் தெளிவாகிறது.

<http://caravandaily.com/portal/aap-claims-10-lakh-names-deleted-from-delhi-voters-list-blames-bjp-for-it/>

**அபூதாஹிர்**

# மீனாட்சிபுரம் மதமாற்றங்கள்



## திருமாவளவன் VS கிருஷ்ணசாமி



விடுதலை சிறுத்தைகளின் கட்சி நிறுவனர் தொல் திருமாவளவன் அவர்கள் முனைவர் பட்டம், அதாவது டாக்டர் பட்டம் பெற்றவர்.

டாக்டர் பட்டம் பெறுவதற்கு அவர் எடுத்துக் கொண்ட பொருள் 1981/82 களில் நடந்த மீனாட்சி புரம் மக்கள், இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதால் பெற்ற ஏற்றம், அதன் இதர தாக்கங்கள் என்பனவாகும்.

அதனை மதமும், மதச்சார்பின்மையும் பாதிக்கப்பட்டோரின் பார்வையிலிருந்து மதமாற்றம் எனும் அவருடைய ஆய்வை வைகறை வெளிச்சம் செப்டம்பர் 2018 இதழில் தந்திருந்தோம். வாசகர்கள் அதனை படிக்கும் படிக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

திருமா. அவர்கள் மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில் அவருக்கு டாக்டர் பட்டம் அதாவது முனைவர் பட்டம் வழங்கப்பட்டது. இந்தச் செய்தி பரபரப்பானது. அதனது ஆய்வைத் தொடர்ந்து, அவர் தொலைகாட்சி ஒன்றிற்கு பேட்டி ஒன்றைக் கொடுத்தார். அதில்;

இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களின் வாழ்க்கையில் தீண்டாமை, ஜாதி ஆகியவை அறவே இல்லை என்பதைத் தெளிவுப்படுத்தி இருந்தார். கிருஸ்தவத்திற்கு சென்றவர்களை விட இஸ்லாத்திற்குச் சென்றவர்களே தீண்டாமையிலிருந்து சுதந்திரமடைந்தவர்களாக இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருந்தார். (முழுப் பேட்டியையும் வைகறை வெளிச்சம் இதழில் வெளியிட்டிருந்தோம்)

இவற்றையெல்லாம் புதிய தமிழகம் கட்சி கிருஷ்ணசாமி அவர்கள் கடுமையாக எதிர்த்தார். மிகவும் ஆவேசமாக ஒரு பதிலை இணையதளங்கள் வழி வெளியிட்டிருந்தார்.

அதில் திருமாவளவன் அவர்கள் ஆய்வுக்கு மீண்டும், மீனாட்சிபுரத்தை அல்லது ரஹ்மத் நகரை எடுத்திருக்க வேண்டாம். அவர் மீனாட்சிபுரத்திற்குப் பின் அதைப் போன்ற மதமாற்றங்கள் நடந்திருக்கின்றனவா? என்றொரு ஆய்வை மேற்கொண்டிருக்கலாம். குறிப்பாக

புதிய தமிழகம் கட்சி வருகைக்குப் பின் அது போன்ற பெரிய மதமாற்றங்கள் தடுக்கப் பட்டிருக்கின்றன. அதை ஆய்வுக்கு எடுத்திருக்கலாம் என்றெல்லாம் சாடியிருந்தார்.

மருத்துவர் கிருஷ்ணசாமியும் அவரைச் சார்ந்தவர்களும், இன்னும் தீண்டாமைக் கொடுமையிலிருந்தும் சாதிய அடுக்கு முறையிலிருந்தும் விடுபடவில்லை என்பதை அவரது மறுப்பு தெளிவாகவே சுட்டிக் காட்டுகின்றது.

அதற்காக அவர் இப்போது தனது ஜாதிக்கே இன்னொரு பெயரை வைத்துத் தப்பித்துக் கொள்ளலாம் என எண்ணுகின்றார். இந்த எண்ணத்தை செயலில் கொண்டு வந்திட வழிகளைத் தேடி கொண்டிருக்கின்றார்.

அதில் பல விமர்சனங்களும் அவரை நோக்கி பாய்ந்துள்ளன. அவற்றிற்கு அவர் இன்னும் திருப்தியான பதில் எதையும் தரவில்லை. அவர் சாதிய அடுக்கு முறைக்கும், அடக்கு முறைக்கும் ஆளாக்கப்படுவதிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள வழிமுறைகளைத் தேடிக்கொண்டே தான் இருப்பார். அது அவரது உரிமை. ஆனால் அவர் இஸ்லாத்தைப் பரிந்துரைப்பவர்கள் மீது பாய்வதை விட மீனாட்சிபுரத்தைச் சென்று ஒரு முறை பார்த்து விட்டு வரலாம். இதைச் செய்தால் அவர் படிப்பினைகள் பல பெறலாம்.

**மதமாற்றங்கள் இல்லையா?**

மீனாட்சிபுரம் மதமாற்றத்திற்கு பின் இஸ்லாத்தை யாரும் ஏற்றுக்கொள்ளவில்லை, என்பது ஐமுக்காளத்தில் வடிகட்டின பொய். அவர் ஓர் இருட்டு உலகில் இருக்கின்றார் என்பதை அது எடுத்துக்காட்டுகிறது.

ஏறத்தாழ அதேக்காலக்கட்டத்தில் கூரியூர் என்ற கிராமம், அதனைத் தொடர்ந்து இன்னும் பல கிராமங்கள் என தொடர்ந்து இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டு நிரந்தரமாகச் ஜாதிக் கொடுமைகளிலிருந்து விடுதலையடையும் - விடுதலை இயக்கம் நடந்து கொண்டே தான் இருக்கின்றது. அவர்களின் அடுத்த தலைமுறைக்கு தங்களது தலைமுறையின் இஸ்லாமியப் பாரம்பரியம் ஒன்றைத்தான் தெரியும். தாங்கள் தலித்களாக இருந்தோம் என்ற அடையாளமே தெரியாது.

> **“மதமாற்றங்கள் நடந்த ஒவ்வொரு இடத்திலும் அதை முன்னே நின்று செய்த ஒருவர் தன் உயிரைத் தந்திருக்கின்றார். அதாவது அல்லாஹ்வின் பாதையில் மரணத்தை அடைந்திருந்தார். நாட்டுப் பாஷையில் சொன்னால் ஒருவர் கொலை செய்யப்பட்டிருக்கின்றார்.”**

இப்போதெல்லாம் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு விடுதலை அடைபவர்கள் ‘அமுக்கி வாசிக்கின்றார்கள்’ காரணம் பிரதமரிலிருந்து அத்தனை பேரும் அந்தப் பகுதிக்குப் படை எடுத்துச் சென்று அந்த மக்களை மூச்சுத் திணர வைத்து, திக்கு முக்காட வைத்து நிலைகுலையச் செய்து விடுகின்றார்கள். அதனால் ஆராவார மில்லாமல் மக்கள் விடுதலையடைந்துக் கொண்டிருக்கின்றனர். இதுதான் உண்மை.

இது தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியா முழுவதும் நடந்துக் கொண்டிருக்கின்றது. டெல்லி ஜாமா மஸ்ஜிதில் ஒரே ஊரைச் சார்ந்த 19 குடும்பத்தினர் இஸ்லாத்தை ஏற்றார்கள். அவர்கள் இதற்கு முன் பவுத்தத்தை ஏற்றவர்கள்.

**வட இந்தியாவில் மதமாற்றங்கள்**

அதே போல் நாங்கள் 2010 ஆண்டு லக்னோவில் ஏற்றி வைத்த தாஃவா பணிகள் இன்னும் - இன்றைய நெருக்கடியான அரசியல் சூழ்நிலையிலும், இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டு, ஜாதிக்கொடுமையிலிருந்து தங்களை நிரந்தரமாக விடுவித்துக் கொள்ளும் சூழ்நிலைத் தொடர்ந்துக் கொண்டே தான் இருக்கிறது.

புதிய தமிழகம் கட்சி மருத்துவர் கிருஷ்ணசாமி அவர்கள், கண்ணை மூடிக் கொண்டால் உலகமெல்லாம் இருட்டு என்ற இருண்ட மன நிலையிலிருந்து வெளிவந்து விட வேண்டும் என அன்பாய் கேட்டுக் கொள்ளுகின்றோம். அத்தோடு இஸ்லாத்தை முழுமையான ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். அதேப்போல் இஸ்லாத்தை

ஏற்றுக் கொண்டவர்களின் ஜாதி ஒழிந்ததா? இல்லையா? என்பதை அவர் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

இதை அவர் செய்வாரேயானால், இஸ்லாம் மட்டும் தான், தீண்டத்தகாத மக்களின் அமுக்கப் பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் தீண்டாமையை, ஜாதிக் கொடுமையை முற்றாக ஒழித்திருக்கின்றது என்ற முடிவுக்கு நிச்சயமாக வருவார். அதை நெஞ்சுரத்தோடு அவர் தன்னுடைய மக்களுக்கும் பரிந்துரைக்க வேண்டும்.

இதைச் செய்தால், அவர் டாக்டர் அம்பேத்கர், தந்தை பெரியார் வரிசையில் வருவார். இல்லையேல் அந்த மக்களை அதாவது தாழ்த்தப்பட்ட தீண்டத்தகாத மக்களை நட்டாற்றில் விட்டவர்கள் வரிசையில் இடம் பெறுவார்.

டாக்டர் கிருஷ்ணசாமியின் வேகமான மறுப்பு அவர் ஏற்படுத்த நினைத்த பரபரப்பை ஏற்படுத்தவில்லை. காரணம் எல்லா தரப்பு மக்களிடமும் இஸ்லாம் ஒன்றே சாதியத்திற்கு சம்மட்டி அடி தரும் என்ற எண்ணம் நிலைத்து நிற்கின்றது. ஏனெனில் அவர்கள் ஊருக்கு ஊர் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட மக்கள் பூரணமாக தீண்டாமையிலிருந்தும், சாதிக் கொடுமையிலிருந்தும் விடுதலையடைவதை கண்கூடாக காண்கின்றார்கள்.

இதெற்கெல்லாம் மேலாக அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இந்தியாவில் வாழும் பெரும்பாலான முஸ்லிம்கள், உரிய நேரத்தில் இந்து மதத்திலிருந்து வெளியேறியவர்கள் என்று.

டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் தொல் திருமா. அவர்கள் இஸ்லாத்திற்கு செல்லுங்கள் என கூறுகின்றார் என அவர் சொல்லாததைச் சொன்னபோது, திருமா. அவர்கள் தந்த அறிக்கையில் இப்படிக் குறிப்பிட்டார்கள்;

நான் மீனாட்சிபுரம் மக்கள் ஏன் இஸ்லாத்தை தழுவினார்கள்? அம்பேத்கர், புத்த மதத்திற்குத்தானே பரிந்துரைத்தார் என்பதை அறிந்திடவே மீனாட்சிபுரம் மதமாற்றத்தை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டேன்.

அதே போல், வளைகுடா பணம் அங்கே பயன்படுத்தப்படுகின்றதா, அவர்கள் (மீனாட்சிபுரம் மக்கள்) மதம் மாறிய நாட்களில் அப்படித்தானே குறிப்பிட்டார்கள் என்பதையும், வேறு ஏதேனும் ஊக்கங்கள் தரப்பட்டுள்ளனவா? என்பதையும் அறிந்திட முயன்றேன். அதனால் தான் மீனாட்சிபுரம் மதமாற்றங்களை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டேன்..

*But you cannot deny the fact, that the social Economic status of the Dalits in Meenashipuram has witnessed a tremendous improvement when compared to Dalits living elsewhere of the second and third generation feel as if they are born Muslims and fully devoid of only humiliation and discrimination (The Hindu oct. 01.2018)*

*Prolonged social discrimination was the factor luhaid the conversion and the situation was perpetuated by police atrocities of a double murder in the village Explained the VCK leader who had one to one meetings with the number of the first generation that converted to Islam. (The Hindu Eng. Oct 01. 2018)*

இதன் பொருள்

*நீங்கள் (மதம் மாறியவர்களைப் பற்றி என்னதான் சொன்னாலும் ஒன்றை நீங்கள் மறுத்திட முடியாது. மீனாட்சிபுரம் தலித் மக்களின் பொருளாதார அந்தஸ்தும், சமூக அந்தஸ்தும் மதம் மாறிய பின் பெரிய அளவில் மிகப்பெரிய மாற்றத்திற்கு உள்ளாகியுள்ளது மற்ற தலித்களோடு ஒப்பிட்டுப் பார்த்திடும் போது.*

*அவர்களின் இரண்டாவது மூன்றாவது தலைமுறையினர் தாங்கள் பிறப்பாலே முஸ்லிம்கள் என்ற எண்ணத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் அவமானங்களிலிருந்தும், தீண்டாமையிலிருந்தும் முற்றாக விடுதலை அடைந்து விட்டார்கள்.*

*இப்படி தொடர்ந்து நீண்ட காலம் நடந்த சமுதாய புறக்கணிப்பு தீண்டாமைதான் இந்த மத மாற்றங்களுக்குப் பின்னால் உள்ள காரணம். இந்த சூழலை போலிஸின் அட்டூழியங்கள் குரூரமாக்கிவிடுகின்றன.*

*இவையெல்லாம் அங்கே நடந்த இரட்டை கொலைகளுக்குப் பின் நடந்தவை.*

என விளக்கம் சொன்னார் வி.சி.க. தலைவர். இவர் இஸ்லாத்திற்கு மதம் மாறிய முதல் தலைமுறையினருடன் தனித்தனி சந்திப்புகளை நடத்தியவர்.

புதிய தமிழகம் தலைவர், மீண்டும் பலர் இந்து மதத்திற்கு மதம் மாறிவிட்டார்கள் எனக் குறிப்பிட்டிருக்கின்றாரே எனக் கேட்டபோது,

*"தொடக்கத்தில் 200 குடும்பங்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதாகத்தான் இருந்தது. பின்னர் இருபது குடும்பங்கள் இந்து மதத்திற்கு திரும்பி விட்டனர். 180 குடும்பத்தவர்கள் தாம் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்கள். மதம் மாறியவர்களுக்கிடையேயும், மதம் மாறாதவர்களுக்கிடையேயும் நல்ல உறவுகள் இருக்கின்றன." என்றார்* (TH (E) 10.2018)

**இஸ்லாத்திற்கு வராதவர்கள் / வந்த பின் திரும்பியவர்கள்**

மீனாட்சிபுரம் மதம் மாற்றத்தைத் தொடர்ந்து பல கெடுபிடிகள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள் மீது போடப்பட்டன. அப்போதைய முதலமைச்சர் எம்.ஜி.ஆர். பாரதீய ஜனதா கட்சியைச் சார்ந்த முன்னாள் பிரதமர் வாஜ்பேயி உட்பட எல்லாப் பிரபல்யங்களும் அங்கே படை எடுத்தன. பிரதமர் இந்திரா காந்தி இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட மக்களை மீண்டும் இந்து மதத்திற்கு கொண்டு வந்து விடுவதைத் தன்னுடைய தலையாயப் பணியாக ஆக்கிக் கொண்டார்.

அவர்கள் மீது தேசிய பாதுகாப்புச் சட்டம் உட்பட எல்லாக் கொடுமையான சட்டங்களையும் பாய்ச்சினார்கள். குண்டு வெடிப்பு வழக்குகளை போட்டார்கள். இத்தனையையும் தாண்டித்தான் அவர்கள் இஸ்லாத்தில் நிலைத்து நின்றார்கள். இதற்காகவே அவர்கள் அல்லாஹ்விடம் அழகிய நற்கூலியைப் பெறுவார்கள். சலீம் என்பவர் படுகொலைச் செய்யப்பட்டு ஷஹீதும் ஆனார். ஆனால் இதில் ஓர் உண்மை மட்டும் தெளிவு படுத்தப்பட்டது.

அன்று சமுதாய சிங்கம் கி.ரி.ரிபாயி அவர்கள் மீனாட்சிபுரம் மக்கள் எதிர் கொண்ட அரசு விசாரணைகளைத் தானும் எதிர் கொண்டார்.

> **“இஸ்லாத்திற்கு சென்று பூர்வகுடிகள் முழுமையாகத் தீண்டாமைக் கொடுமைகளிலிருந்து சாதிய அடுக்குமுறைகளிலிருந்து, நிரந்தரமாக விடுதலை அடைவதை எதிர்கட்சிகள், ஆளும் கட்சிகள் இவை பாகுபாடின்றி எதிர்க்கின்றன.”**

அரசு அனுப்பிய குழுக்களிடம் இரண்டு உண்மைகளை நிலைநாட்டினார். ஒன்று மதம் மாறியவர்களுக்கு சல்லிக் காசு கூட கொடுக்கப்படவில்லை. இரண்டு மதம் மாறியவர்களை மீண்டும் திரும்பி வர பணமும் மற்ற சலுகைகளும் வழங்கப்பட்டன. என்பனவை. இதில் ஒரு விசாரணைக் குழுவிடம் அவர் மீண்டும் இந்து மதத்திற்கு வந்திட பணம் தந்தது என்ன நியாயம் எனக் கேட்டார். அதிகாரிகள் பதில் சொல்லவில்லை. இந்தக் கேள்வி இன்றும் அப்படியே இருக்கின்றது.

இந்த உண்மைகள் டாக்டர் கிருஷ்ணசாமிக்குத் தெரியாததில்லை. ஆனால் அவர் இஸ்லாத்திற்கு மக்கள் செல்வதை வழிமறித்தாக வேண்டும் என்பதில் அக்கறையோடு இருக்கின்றார். அன்றைய நாளிலிருந்தே காங்கிரஸ், பா.ஜ.க ஆகியவற்றின் இலக்கும் இதுதான். ஆனால் அவர்களால் வெற்றி பெற இயலாது. இயலவில்லை.

எழுச்சித் தமிழர் தொல் திருமாவளவன் அவர்களின் ஆய்வின் வரையறையில் இது இல்லை.

*மீனாட்சிபுரம் மதமாற்றத்தில் கள ஆய்வு ஒன்றை மேற்கொண்ட* **எம்.ஜி.எம்.**

# எது முதலில் பற்றி

## இமாம் கஸ்ஸாலி (ரஹ்) கூறுகிறார்கள்





அரபியில்
டாக்டர். யூசுஃப் அல் கர்ளாவீ



தமிழில்
பேராசிரியர். இல்யாஸ் ரியாஜி

எதற்கு முதலிடம் தர வேண்டும் என்பதை அதற்குரிய முக்கியத்துவத்துடன் அணுகிய அறிஞருள் ஒருவர் பேரறிஞர் இமாம் கஸ்ஸாலி(ரஹ்) அவர்கள்.

தம்முடைய 'அர்பயீன்' எனும் நூலில் இது பற்றி அவர்கள் கூறியிருந்தாலும் இஹ்யாவு உலூமித்தீன் என்ற பென்னம் பெரும் நூலில் தெளிவாக இதைப்பற்றி விளக்கியுள்ளார்கள். முஹ்லிகாத் - அழிக்கக் கூடியவை என்ற பெரும் தலைப்பின் கீழ் பத்தாவதாக அவர்கள் கூறுவது ஃதம்முல் கூரூர் " ஏமாறுதல் ஓர் இழுக்கு" என்பதாகும்.

இந்த தலைப்பின் கீழ் இமாம் கஸ்ஸாலி(ரஹ்) அவர்கள் தம்மையும் அறியாமல் தம்மிடமே ஏமாந்து போனவர்கள் பற்றி கூறியுள்ளார்கள்.

கல்வியாளர்கள், வணக்க வழிபாட்டில் திளைப்பவர்கள், துறவிகள்ம் செல்வந்தவர்கள் ஆகியோரைப் பற்றிக் கூறிவிட்டு இவர்களில் யாரெல்லாம் தம்மிடமே ஏமாந்தவர்கள். இவர்களின் தீய செயல்களைக் கூட ஷைத்தான் எவ்வாறு இவர்களுக்கு அழகாக்கிக் காட்டினான் என்பதையெல்லாம் விபரமாகவும் விருவாகவும் படம் பிடித்துக் காட்டியுள்ளார்கள் இமாம் கஸ்ஸாலி(ரஹ்). அவற்றுள் இரண்டு வகைகளை மட்டும் இங்கே எடுத்துரைக்கிறேன்ஞ்

இதன் மூலம் இமாம் கஸ்ஸாலி(ரஹ்) அவர்கள் அல்லாஹ்வின் மார்க்கத்தையும், மனிதர்களின் உலகத்தையும் எவ்வளவு அருமையாகப் புரிந்து வைத்திருக்கிறார்கள் என்பதையும் அகத்திலும் புறத்திலும் சமுதாயத்தை சீர்திருத்த வேண்டும் என்பதில் அவர்கள் எவ்வளவு பேரார்வம் உள்ளவர்கள் என்பதையும் "எது முதலில்" துறைக்கு அவர்கள் எவ்வளவு முக்கியத்துவம் அளித்துள்ளார்கள் என்பதை அறிந்திட முடியும்.

இதோ இமாம் கஸ்ஸாலி(ரஹ்) அவர்களின் நுண்ணறிவுத்திறன் மிக்க ஆழமான வலிமையான விமர்சனத்தைப் படியுங்கள்.

# தம்மைத்தாமே ஏமாற்றிக் கொள்ளும் வணக்கசாலிகள்

வணக்க வழிபாட்டில் திளைப்பவர்களில் சிலர் கடமைகளில் கோட்டை விடுகின்றனர். உபரியான கூடுதலானவற்றை அக்கறையாகச் செய்கின்றனர். சில நேரங்களில் இவர்கள் கடமைகளை தாண்டி சிறப்பானவை என்று கருதப்படுபவற்றைச் செய்வதற்காக வரம்பு மீறிப் போகின்றனர்.

உதாரணமாகப் பாருங்கள். தொழுகைக்காக ஒளு (அங்க சுத்தம்) செய்யும் போது மனக்குழப்பம் ஏற்பட்டு திரும்ப, திரும்ப கழுவிய உறுப்பையே கழுவுகின்றனர். மார்க்கத்தீர்ப்பின் படி சுத்தமாக இருக்கும் தண்ணீரைக் கூட சந்தேகக் கண்கொண்டு பார்க்கின்றனர். அதில் அசுத்தம் கலந்திருக்குமோ என்று வீணாகக் கற்பனை செய்கின்றனர்.

ஆனால், உணவுகள் விஷயத்தில் இவர்கள் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை. ஹராமான (அனுமதிக்கப்படாத) உணவாக அது இருப்பதற்கான வாய்ப்பை புறக்கணிக்கின்றனர். சில நேரங்களில் ஹராமான உணவுகளைக் கூட தின்று விடுகின்றனர்.

நீரில் காட்டும் அக்கறையை உணவில் காட்டுவதுதான் நபித்தோழர்களின் வழிமுறைக்கு ஒத்திசைந்தது. இதோ பாருங்கள்; உமர்(ரலி) அவர்கள் ஒரு கிறிஸ்தவரின் பாத்திரத்திலிருந்த நீரில் ஒளு செய்தார்கள். அது அசுத்தமாக இருப்பதற்கான வாய்ப்புள்ளது. இத்தனைக்கும் உமர்(ரலி) அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்றால் ஹராமை (விலக்கப் பட்டதை) செய்து விடுவோமோ என்ற அச்சத்தில் சில ஹலால் (அனுமதிக்கப் பட்டவை)களைக் கூட விட்டு விடக்கூடியவர்கள். (காண்க " அர்ரசூல் வல் இல்ம் – கர்ளாவீ , பக்கம் 20-23)

இன்னும் சிலர் இப்படி இருக்கிறார்கள். கடமைகளில் அக்கறைக் காட்டுவதில்லை. உபரி வணக்கங்களிலோ பேரார்வம் கொண்டிருக்கிறார்கள்.

ளுஹா (முற்பகல்) தொழுகை இரவுத் தொழுகை உள்ளிட்ட உபரித் தொழுகையின் நேரம் வந்தால் பேரானந்தத்துடன் இவற்றைத் தொழுகின்றனர். ஆனால் கடமையான தொழுகைகளில் இவர்களுக்கு ஆன்நதம் இருப்பதில்லை. நேரம் வந்தவுடனேயே கடமையான தொழுகையைத் தொழ வேண்டும் என்று ஆர்வம் கொள்வதில்லை.

இவர்கள் பின்வரும் நபிமொழியை மறந்து விட்டார்கள்..

அபூஹுரைரா(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்; "தம்மீது கடமையாக்கப்பட்டதைச் செய்து நெருக்கத்தைப் பெறுவதைப் போல வேறு எதனாலும் என் நெருக்கத்தைப் பெற முடியாது" என்று அல்லாஹ் கூறுவதாக நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல் : புகாரி)

நல்ல காரியங்களை அவற்றின் வரிசைப்படி நிறைவேற்றாததும் தீமைகளில் ஒன்றுதான் என்பதையும் அவர்கள் மறந்து விட்டனர்.

சில நேரங்களில் மனிதனுக்கு ஒரு நெருக்கடி ஏற்படும். ஒரே நேரத்தில் இரண்டு கடமைகளைச் செய்ய வேண்டிய சூழல் ஏற்படும். ஒரே நேரத்தில் இரண்டு நன்மைகளைச் செய்ய வேண்டிய சூழல் ஏற்படும். அப்பொழுது இந்த நேரத்தை தவற விட்டால் பிறகு செய்ய முடியாது என்ற நிலையுள்ள கடமையை உடனே செய்ய வேண்டும். மற்றொன்றை அப்புறம் செய்ய வேண்டும்.

இப்பவும் செய்யலாம் எப்பவும் செய்யலாம் என்பனவற்றை அப்புறம் செய்ய வேண்டும். இந்த ஒழுங்கைப் பேணாதவன் ஏமாளி. இது போன்ற உதாரணங்களைக் கூறப் போனால் கூறிக் கொண்டே போகலாம்.

பாவங்கள் எவை? நன்மைகள் எவை? என்பதெல்லாம் எல்லோருக்கும் தெரிந்தது தான். ஆனால் நன்மைகளில் எதை முதலில் செய்வது, எதை அப்புறம் செய்வது என்பது தான் சிலருக்குப் புரிவதில்லை.

உபரியான(நஃபில்)வற்றை விட கடமைகளையே முதலில் செய்ய வேண்டும். ஃபர்ளு, கிஃபாயா எனும் சமுதாயத்தின் மீது

சுமத்தப்பட்டிருக்கும் கடமையை விட ஃபர்ளு அய்ன் எனும் தனி மனிதனின் மீதான கடமைகளுக்கே முதலிடம் தர வேண்டும்.

ஒரு ஃபர்ளு கிஃபாயாவை சமுதாயத்தின் சார்பில் யாரேனும் சிலர் செய்து கொண்டிருந்தால் இன்னொரு ஃபர்ளு கிஃபாயாபை செய்ய ஆளில்லை என்றால் இதைச் செய்வதற்கு முதலிடம் தர வேண்டும்.

ஃபர்ளு அய்ன் எனும் கடமைகளில் எது முக்கியமோ அதை முதலில் செய்ய வேண்டும். குறித்த நேரத்தில் செய்ய வேண்டியதை அந்த நேரத்திலேயே செய்து முடிக்க வேண்டும்.

தந்தையின் தேவையை விட தாயின் தேவையை நிறைவேற்றிட முன்னுரிமை தர வேண்டும்.

ஏனெனில் நபி(ஸல்) அவர்களின் ஒருவர், "யாருக்கு நான் அதிக உபகாரம் செய்ய வேண்டும்?" என்று கேட்ட போது "உன் தாய்க்கு" என்றார்கள். "பிறகு" என்றார் அவர். "உன் தாய்க்கு" என்று மீண்டும் கூறினார்கள். "பிறகு" என்றார் அவர். "உன் தாய்க்கு" என்று மூன்றாவது தடவையும் கூறினார்கள் நபி(ஸல்) அவர்கள்.

"பிறகு யாருக்கு?" என்று கேட்டார். "உன் தந்தைக்கு" என்று கூறினார்கள். "பிறகு யாருக்கு?" என்று கேட்டார் அவர். "உனக்கு மிக நெருங்கியவர்களுக்கு, பின்னர் அவர்களுக்கு அடுத்து நெருக்கமானவர்களுக்கு" என்று பதில் கூறினார்கள். (நூல்: திர்மிதி, ஹாகிம்)

எனவே உறவுகளில் நமக்கு மிக நெருக்க மானவர்களிடமிருந்து நம் உதவிகள் தொடங்க வேண்டும். ஒரே தரத்தில் இருவர் இருந்தால் அவ்விருவரில் யாருக்கு உடனே உதவி தேவை என்று பார்க்க வேண்டும். அதிலும் இருவரும் ஒரே தரத்தில் இருந்தால் அவ்விருவரில் யார் இறையச்சமுள்ளவரோ (யார் மிக ஒழுக்கமானவரோ) அவருக்கு முன்னுரிமை தர வேண்டும்.

ஒருவரிடம் பணம் உள்ளது. அதை வைத்து ஹஜ்ஜுக்குச் செல்ல விரும்புகிறார். அப்பொழுது அவரின் பெற்றோருக்கு பணம் தேவைப்படுகிறது. இவரிடம் வேறு பணம் இல்லை என்றால் அப்பொழுது என்ன செய்வது?

ஹஜ்ஜை விட பெற்றோர் நலனே முதன்மையானது. இது முக்கிய கடமையை விட அதிமுக்கியக் கடமைக்கு முதலிடம் தரும் பண்பாகும். இப்போது இவர் ஹஜ்ஜுக்குச் சென்றால் இவர் ஏமாளி. தன்னிடம் ஏமாந்தவர்.

ஒருவரிடம் "நான் இத்தனை மணிக்கு உங்களை சந்திக்கிறேன்" என்று வாக்குக் கொடுத்திருக்கிறார். அவரைப் பார்க்கப் புறப்பட்டார். அப்பொழுது வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகைக்கான நேரம் வந்து விட்டது. அவரைப் பார்க்கச் சென்றால் தொழுகை நேரம் முடிந்து விடும் என்றிருந்தால் தொழுகைக்கே முதலிடம் தர வேண்டும்.

வாக்குறுதியை நிறைவேற்றுவதென்பது ஒரு நல்ல காரியமாக இருப்பினும் ஜும்ஆவை விட்டு விட்டுச் செல்வது பாவமாகி விடும். ஒருவரின் ஆடையில் அசுத்தம் பட்டுவிட்டது. இதற்குக் காரணமான தன் பெற்றோரை (அல்லது குடும்பத்தினரை) கடுமையாக பேசுகிறார். அசுத்தமும் தவிர்க்கப்பட வேண்டியதுதான். பெற்றோரை மன வேதனைக்கு ஆளாக்குவதும் தவிர்க்கப்பட வேண்டியது தான். எனினும் தம் ஆடையை அசுத்தப்படுத்திய தம் பெற்றோரைத் துன்புறுத்துவதையே தவிர்க்க வேண்டும். இதற்கே முதலிடம் தர வேண்டும். பிறகு அசுத்தத்தை அப்புறப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இது போல் உதாரணங்களைச் சொன்னால் சொல்லிக் கொண்டே போகலாம். எனவே நன்மைகளை அதற்கேற்ற தர வரிசைப்படி செய்யாதவர் தம்மைத்தாமே ஏமாற்றிக் கொள்கிறார். இது அறிவீனத்தால் ஏற்பட்ட ஏமாற்றம்.

ஆம்! நன்மை என்று நினைத்துக் கொண்டு செய்யும் ஒரு செயல் பாவமாகிக் கொண்டிருப்பதை இவர் அறியவில்லை. அதை விட முக்கியமான தொன்று இருக்க அதை விட்டுவிட்டு இதைச் செய்து பாவியாகிக் கொண்டிருக்கிறார். என்னே ஏமாளித்தனம்! (நூல்: இஹ்யாவு உலூமித்தீன்)

சட்டமேதை இமாம் கஸ்ஸாலி(ரஹ்) அவர்கள் என்ன அருமையான விளக்கத்தை தந்திருக்கிறார் பார்த்தீர்களா? இந்தப் புரிதலும், தெளிவும், புலமையும் இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைப்பவர்கள் அனைவருக்கும் தேவை.

ஃபிக்ஹூ மராத்திபில் அஃமால் எனும் நன்மைகளின் தர வரிசைப் பற்றிய புரிதலையும் மேலும் மார்க்கத்தின் கட்டளைகள் தடைகள் இவற்றில் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தரத்தையும், இடத்தையும் மார்க்கம் வைத்துள்ளது. ஒவ்வொன்றையும் அதனதற்குரிய தரத்தில் வைக்க வேண்டும் என்பதையும் நான் (கர்ளாவீ) நீண்ட நெடுங்காலமாக கூறிக்கொண்டிருக்கின்றேன்.

இஸ்லாமிய இயக்கங்கள், அதன் செயல் வீரர்கள் இதில அதிகக் கவனம் செலுத்த வேண்டும்.

“நன்மைகளுக்கு மத்தியிலுள்ள தராதரங்களைப் பேணாமல் விடுவதும் கூட தீமைகளுள் ஒன்றுதான்.” என்று “பளிச்”சென்று இமாம் கஸ்ஸாலி(ரஹ்) அவர்கள் கூறிவிட்டார்கள். இந்த வரிகளை முன்பை விட இப்போது தான் நான் தெளிவாகவும், ஆழமாகவும் வாசிக்கின்றேன். இமாம் கஸ்ஸாலி(ரஹ்) அவர்களின் வரிகளை முன்னர் நான்(கர்ளாவீ) வாசித்திருக்கிறேன் என்றாலும் இவ்வளவு ஆழமாக இப்போதுதான் வாசிக்கிறேன்.

# செல்வத்தை ஏறுக்கு மாறாக செலவிட்டு ஏமாறும் செல்வந்தவர்கள்

இமாம் கஸ்ஸாலி(ரஹ்) தொடர்கிறார்கள். செல்வந்தர்களில் சிலர் தம்மைத்தாமே ஏமாற்றிக் கொள்கின்றனர். அவர்களில் சிலர் பள்ளி வாசல்களையும், மதரஸா எனும் கல்விக் கூடங்களையும், மிருகங்களை பராமரிக்கும் சாலைகளையும், ஆற்றுப் பாலங்களையும், இன்ன பிற மையங்களையும் மக்களுக்கெல்லாம் தெரியும் படி கட்டிக் கொடுக்கின்றனர். பிறகு அதில் தமது பெயர் பொறித்த கல்வெட்டுக்களைப் பொறிக்கின்றனர்.

தாம் இறந்த பின்னரும் தமது பெயர் நிலைத்திருக்க வேண்டும். மங்காத புகழ் பெற வேண்டும் என்பதற்காக. இப்படியெல்லாம் செய்வது தமது பாவங்களுக்குப் பரிகாரமாக அமையும் என்று நினைக்கின்றார்கள். இவர்கள் இருவகையில் ஏமாளிகள். தம்மையே ஏமாற்றிக் கொண்டவர்கள்.

**ஒன்று:**

இவர்கள் மக்கள் பணத்தைச் சுரண்டி லஞ்சம் வாங்கி தவறான வழியில் பொருளீட்டி அல்லாஹ்வின் கோபத்துக்கு ஆளானவர்கள். அந்தப் பணத்தை வைத்து கட்டிடங்கள் கட்டி மறுபடியும் அல்லாஹ்வின் கோபத்துக்கு ஆளாகிறார்கள்.

ஆம்! அவர்கள் முறை தவறிப் பொருளீட்டியிருக்கக் கூடாது. அதுவே ஒரு பாவம். அப்படி முறை தவறி சம்பாதித்தவர்கள் என்ன செய்திருக்க வேண்டும்? அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் தேடி மனம் திருந்தியிருக்க வேண்டும்.

அந்த (லஞ்ச, ஊழல்) பணத்தை உரியவர்களிடம் திருப்பித்தர வேண்டும். கொள்ளையடித்த அதே பொருளைத் தர வேண்டும். அது இயலாத பொழுதே அதற்கு ஈடானதை உரியவர்களிடம் தர வேண்டும்.

உரியவர்கள் இல்லையென்றால் அவர்களின் வாரிசுகளிடம் ஒப்படைக்க வேண்டும். வாரிசுகள் யாரும் இல்லையென்றால் நல்ல காரியங்களுக்காக அதைச் செலவிட வேண்டும். ஏழைகளுக்கு அதை பகிர்ந்தளித்து விடலாம். இப்படிச் செய்தால் தம் குட்டு வெளிப்பட்டு விடும் என்று பயந்து கட்டிடங்களை எழுப்புகின்றனர். இது என்ன நியாயம்?

இவ்வாறு கொள்ளையடித்த பணத்தில் பேரும் புகழும் அடைந்திட விரும்பி கட்டிடம் கட்டி அதில் தங்கள் பெயரையும் பொறித்துக் கொள்கிறார்கள். இப்படி தம்மைத்தாமே ஏமாற்றிக் கொள்கின்றனர். இது ஒருவகை ஏமாளித்தனம்.

**மற்றொன்று:**

இவர்கள் நன்மையைக் கருதியும் அல்லாஹ்வுக்காகவும் கட்டிடப்பணிக்கு உதவி செய்வதாகக் கருதிக் கொள்கின்றனர்.

தமது பெயர் பொறிக்காத கட்டிடத்திற்காக எவ்வளவு வலியுறுத்திக் கேட்டாலும் ஒரு தினார் (தங்கக்காசு) கூட தர மனம் வராது இவர்களுக்கு.

பெயர் பொறித்தாலும், பொறிக்காவிட்டாலும் செலவளித்தவன் யாரென்பது அல்லாஹ்வுக்குத் தெரியுமல்லவா?

பிறகு ஏன் தருவதில்லை? இவர்கள் மனிதர்களிடமிருந்து கிடைக்கும் புகழையும் தான் விரும்புகின்றார்கள். இறைவனின் திருப்தி இவர்களுக்கு முக்கியமில்லை. இதுவும் ஒரு வகை ஏமாளித்தனமே.

**செல்வந்தவர்களில் இன்னொரு வகை ஏமாளிகள்**

இமாம் கஸ்ஸாலி(ரஹ்) தொடர்கிறார்கள், செல்வந்தர்களில் சிலர் தமது செல்வம் தம்மிடமே இருக்க வேண்டும். வேறெங்கும் போய்விடக் கூடாது என்று கஞ்சத்தனமாக செலவு செய்யாமலிருக்கின்றனர்.

உபரி நோன்பு, இரவுத் தொழுகை, குர்ஆன் ஓதி முடித்தல் என்று செலவில்லாத வணக்கங்களையே கடைபிடிக்கின்றனர். இவர்களும் ஏமாளிகளே!

ஏனென்றால் இவர்களிடம் அடி மனதில் கஞ்சத்தனம் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கிறது. அதை அடக்க ஒரே வழி அறவழியில் செலவளிப்பது தான். ஆனால் இவரோ வேறு வழியில் நன்மைகளைத் தேடுகிறார்.

இதற்கு ஒரு உதாரணம் கூறலாம்..

ஒருவனின் ஆடைக்குள் பாம்பு புகுந்து விட்டது. அவன் மரணத்தின் விளிம்புக்கு வந்து விட்டான். ஆனால் அவனோ தன் உடலில் உள்ள பித்த நீரை கட்டுக்குள் வைத்திட மூலிகைக் கஷாயம் தயாரிக்க முனைப்புக் காட்டினானாம். பாம்பு கடித்து இறந்து போனால் மூலிகைக் கஷாயத்தை வைத்துக் கொண்டு என்ன செய்ய?

ஃபிஷ்ரு(ரஹ்) அவர்களிடம், "ஒரு பெரிய செல்வந்தர் ஏராளமாக நஃபில் நோன்பு நோற்கிறார். நிறைய நஃபில் தொழுகிறார்." என்று கூறப்பட்ட போது, "இவன் செல்வந்தனல்ல. ஏழை! தான் செய்ய வேண்டியதை செய்யாமல் மற்றவன் செய்ய வேண்டியதைச் செய்துக் கொண்டிருக்கிறான்.

"நோன்பு என்ற பெயரில் தனக்குத்தானே பசியூட்டிக் கொள்வதை விட தொழுவதை விட ஏழைகளுக்குத் தராமல் செல்வத்தைச் சேர்த்து வைத்திருப்பதை விட இவருக்குச் சிறந்தது எதுவென்றால் ஏழைகளுக்கு வழங்குவதும் பசித்தோருக்கு உணவளிப்பதும் தான்" என்று பிஷ்ரு(ரஹ்) பதிலளித்தார்கள்.

**சாதி ஒழிப்பு – முரண்பாடுகளும் தீர்வுகளும் என்ற தலைப்பில் விவாத அரங்கம் ஒன்று சென்னை பல்கலை கழகத்தில் 10/11/2018 அன்று நடைபெற்றது.**

**இதில் சாதி ஒழிப்பில் அக்கறைக் காட்டும்- அதில் முயற்சி எடுக்கும் பல்வேறு சமூகத் தலைவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினர்.**

**வைகறை வெளிச்சம் மற்றும் நீதி, அமைதிக்கான மக்கள் இயக்கம் சார்பாக அதன் ஆசிரியர் மு.குலாம் முஹம்மது அவர்களும் கலந்து கொண்டு உரையாற்றினார்.**

**அதாவது ஜாதி ஒழிப்பிற்கான நடைமுறை தீர்வினை அவர் கூறினார். இஸ்லாத்தில் இணைந்த எத்தனையோ சகோதரர்கள் தங்கள் சாதிகளை ஒழித்து விட்டனர். எனவே இஸ்லாத்தில் இணைவதன் மூலமே சாதியை ஒழிக்க முடியும் என்பதை மையக்கருத்தாக கொண்டு அவர் பேசினார்.**

விரிவான தகவல்கள் இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில்

## சாதி ஒழிப்பு! இஸ்லாமே தீர்வு!!





# சிலுவைப் போர் 2.0

அன்பார்ந்த வாசகர்களே!

இந்தத் தொடருக்கு இதழ் தோறும் புதிய வாசகர்கள் வந்து குவிந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் முந்தைய இதழ்களைத் தேடுகின்றார்கள். எல்லா இதழ்களும் நம்மிடம் இல்லை. இருப்பினும் தொலைப்பேசி மூலம் என்னால் முடிந்த அளவிற்கு அவர்களுக்கு முன் தொடர்களைப் பற்றி விளக்குகின்றேன். அது,

ஐரோப்பிய நாடுகள் அமெரிக்காவின் தலைமையில் முஸ்லிம் நாடுகளின் மீதும், இஸ்லாத்தின் மீதும் ஒரு பெரும் போரை தொடுத்துக் கொண்டிருக்கிறன. அதனை அவர்கள், அன்று நாங்கள் தொடுத்த சிலுவைப் போர்களின் தொடர்ச்சி என்று பெயர் வைத்துள்ளனர்.

அன்று 1905 முதல் 1147 வரை நடந்த சிலுவைப் போர்களை முதல் சிலுவைப் போர் எனப் பெயர் வைத்து அழைக்கின்றார்கள். இந்தக் காலக்கட்டத்தில் 152 ஆண்டு காலம் நடந்தவற்றைத்தான் முதல் சிலுவைப் போர் என அழைக்கின்றார்கள். இந்தச் சிலுவைப் போர்கள் மொத்தம் 9 போர்கள்.

சுருக்கமாகச் சொன்னால், இந்த 9 போர்களையும் அவை கடந்த 152 ஆண்டுகளையும் முதல் சிலுவைப் போர் என்கின்றார்கள். இந்தப் போர் வெள்ளைக் கிருஸ்தவ ஐரோப்பியாவிற்கும் – முஸ்லிம் நாடுகளுக்கும் இடையே தான் நடந்தது. இப்போதும் அதே கிருஸ்தவர்கள் தான். ஆனால் அவர்களுக்கு தலைமை தாங்கிடும் பொறுப்பை அமெரிக்கா ஏற்றுக் கொண்டுள்ளது. இவர்கள் இப்போது முஸ்லிம்கள் மீதும், இஸ்லாத்தின் மீதும் 1982 முதலே தாக்குதல்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதேத் தாக்குதல்களுக்குப் பல்வேறு பெயர்களை வைத்தார்கள். அவையானவ;

- **Clash of civilizations and The Remaking of the world order -** கலாச்சாரங்களின் மோதல்களும், புதிய உலகின் உருவாக்கமும்
- **Default Wars** – நாங்கள் இல்லாத போர்கள்
- **Global War on Terror** – தீவிரவாதத்தின் மீதான போர்
- **Crusade 2.0** – சிலுவைப் போர் 2.0

இப்படி அமெரிக்காவின் தலைமையில் வெள்ளைக் கிருஸ்தவ ஐரோப்பா ஒரு போரை நடத்திக் கொண்டிருக்கின்றது.

இந்தப் போரில் தங்களை அறியாமலேயே அமெரிக்கா – ஐரோப்பிய நாடுகளின் கூட்டணிக்கு துணை நிற்கின்றனர். துணை நிற்கின்றனர் என்பதை விட அவர்களின் யுத்தத்தை நம்மீது தொடுத்துக் கொண்டிருக்கின்றனர் அவர்கள் தந்த ஆயுதங்களுடன்.

இந்தப் போரை அதாவது சிலுவைப் போர் 2.0 வை எப்படி நடத்திக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை ஜான் பெஃபர் என்பவர், தான் எழுதிய நூல் ஒன்றில் விவரிக்கின்றார். அதனையே நாம் இங்கே தமிழ் வடிவில் தந்து வருகின்றோம். இனி சென்ற இதழின் தொடர்ச்சிக்கு செல்வோம்.





**இஸ்லாத்தின் மீது நாங்கள் தொடர்ந்த தாக்குதல்கள்**

நாங்கள் முஸ்லிம்கள் - அமெரிக்க முஸ்லிம்கள் எங்களை இப்படி எதிர்கொள்வார்கள் என்று நினைக்கவே இல்லை.

ஆமாம்! நாங்கள் முஸ்லிம்களைத் தீவிரவாதிகள் - மனிதாபிமானமற்றவர்கள், மனிதம், மனிதத் தன்மைகள் இவை களற்றவர்கள் மனித இனத்தின் எதிரிகளான இவர்கள் அழித்தொழிக்கப்பட வேண்டியவர்கள் என்றெல்லாம், பிரச்சாரம் செய்திடவே அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் தாக்கப்பட்டதைக் காட்டி வந்தோம்.

ஆனால் அந்த இடத்தில் மஸ்ஜித் ஒன்றை நிறுவிட முஸ்லிம்கள் தங்களால் ஆனதையெல்லாம் செய்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதைக் கேள்விப்பட்டோம். அதைத் தடுத்திட எல்லா முயற்சிகளையும் மேற்கொள்வது என முடிவு செய்தோம்.

**கார்தோபா அறக்கட்டளை**

ஆக, Ground Zero Masque என அறிவிக்கப்பட்ட மஸ்ஜித் அதனுடனான இதர மையங்கள் அனைத்தையும் எழுப்பிட நிறுவப்பட்ட அறக்கட்டளையின் பெயர் கர்தோபா இனிஷியட்டிவ், "Cordoba Initiative" என்பதைக் கண்டுபிடித்தோம்.

இந்தப் பெயரே எங்களை ஆத்திர மூட்டியது. காரணம் அமெரிக்காவில் கர்தோபா என்ற பெயர் ஏன்? இந்தப் பெயர் முஸ்லிம்கள் ஸ்பெயின் நாட்டை வெற்றிக் கொண்டு அங்கு கோலோச்சிய நாட்களை நினைவூட்டுவதாக இருந்தது.

இதன் மூலம் நாங்கள் அமெரிக்காவை வெற்றிக்கொள்ள போகின்றோம். என முஸ்லிம்கள் அறிவிக்கின்றார்கள் என்றே நாங்கள் எடுத்துக் கொண்டோம். ஆகவே அதை மையமாகக் கொண்ட பிரச்சாரங்களைக் கட்டவிழ்த்து விட்டோம்.

அமெரிக்கா இஸ்லாமிய மயமாகப் போகின்றது என்றும், முஸ்லிங்கள் அதற்காக இரகசியமாக உழைத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்றும் பிரச்சாரம் செய்தோம். வழக்குகளைத் தொடர்ந்தோம். ஆனால் முஸ்லிம்கள் அனைத்தையும், அழுத்தமான நெஞ்சூரத்தோடு எதிர் கொண்டார்கள். நீதிமன்றங்களில் நாங்கள் தொடுத்த வழக்குகளுக்கு எதிராக அவர்கள் இப்படியொரு வினாவை முன் வைத்தர்கள்.

"நாங்கள் எங்கள் சொந்த இடத்தில் ஒரு மஸ்ஜித் -ஐயும் இன்னும் சில மைய்யங்களையும் எழுப்பிட இருக்கின்றோம். இதற்கான உரிமையை எங்களுக்கு அமெரிக்காவின் சட்டங்கள் வழங்கியே இருக்கின்றன. இந்த உரிமையை நீங்கள் - நீதிமன்றங்கள் பறித்திட இயலுமா?" - என்பதே அந்தக் கேள்வி. இதற்கு பதில் ஏதுமில்லை. ஆகவே அவர்கள் அந்த மஸ்ஜித் -ஐயும் இன்ன பிற மைய்யங்களையும்





எழுப்பிடுவதை யாராலும் தடுத்திட முடியவில்லை.

அடுத்து "கர்தோபா இனிஷேட்டிவ்" என அதற்கு ஏன் பெயர் வைத்தீர்கள் என்ற வினா எழுந்தது இதற்கும் முஸ்லிம்கள் ஒரு வினாவை முன் வைத்தார்கள். அந்த வினா......

"அமெரிக்காவில் பிறந்து வளர்ந்த முஸ்லிம்களாகிய நாங்கள் செய்யும் நல்ல காரியங்களுக்கு ஒரு தளம் அமைத்திருக்கின்றோம். ஆகவே கர்தோபா இனிஷியேட்டிவ் - இப்படி ஒரு பெயர் வைத்திடும் உரிமை எங்களுக்கு உண்டா?" - இதற்கும் நாங்கள் வழக்கைத் தொடுத்த நீதிமன்றங்களிடம் பதில் இல்லை.

ஆகவே அந்த இடத்தில் அதாவது, அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் இருந்த இடத்தில் ஒரு மஸ்ஜித் அதோடு இன்னும் பல மையங்கள் வருவதை எங்களால் தடுத்திட இயலவில்லை.

**எங்கே இருந்து வந்தது நிதி?**

அதே போல் நீதிமன்றங்களில் எழுந்த இன்னொருக் கேள்வி, "நீங்கள் இதற்கான நிதியை எப்படி திரட்டுகின்றீர்கள்?"

இதற்கு கர்தோபா இனிஷியேட்டிவ் - ஐ சார்ந்தவர்கள், "எல்லாமே எங்கள் பணம் தான். நாங்கள் அமெரிக்காவிற்கு வெளியே எங்கேயும், யாரிடமும் பணம் "Collect" வசூல் செய்யவில்லை!

ஆனால் நீதிமன்றம், பணம் தந்தவர்கள், அவர்கள் தந்த பணம், இப்படி எல்லாவற்றையும் சமர்பிக்க வேண்டும், எனக் கேட்டிட வேண்டும் என நாங்கள் வைத்த முறையீட்டின் படி, முஸ்லிம்கள் தாங்கள் பணம், பெற்ற அனைவரின் முழுத் தகவலையும் தந்திட வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானார்கள். மொத்தத் தகவலையும் தந்தார்கள்.

ஏன், "வெளிநாட்டு பணமில்லாமல், எந்த விவகாரத்திற்குரியவர்களின் பணமுமில்லாமல், சொந்தப் பணத்திலேயே உருவாகுவதுதான் கர்தோபா இனிஷியேட்டிவ் - வின் பணிகள் என்பதை நிரூபித்தார்கள்.

**அவர்களும் அமெரிக்கர்களே!**

நாங்கள் இன்னொரு பிரச்சாரத்தையும் கட்டவிழ்த்து விட்டோம். அது, பல்வேறு நாடுகளிலிருந்தும் வந்து அமெரிக்காவில் தஞ்சம் புகுந்த முஸ்லிம்கள் தாம் இதுபோன்ற பணிகளை, அதாவது *Ground Zero Mosque*, இரட்டைக் கோபுரங்கள் நின்றுக் கொண்டிருந்த இடத்தில் பள்ளிவாசலைக் கட்டிடும் பணியையும், இதரப் பணிகளையும் செய்துக் கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் செய்யும் செயல் வெற்றி பெறுமேயானால் காலப்போக்கில் அமெரிக்கா இஸ்லாமிய மயமாகும்.

இந்த பிரச்சாரம் அமெரிக்க மக்களிடம்







அதிகமான தாக்கங்களை உண்டாக்கின. ஆனால் நாங்கள் செய்த கபளீகரங்களின் முடிவில் எங்களுடைய இந்தப் பிரச்சாரமும் பொய் என்பதை அந்த முஸ்லிம்கள் நிரூபித்தார்கள்.

நான் மேலே குறிப்பிட்ட அத்தனைப் பணிகளையும் செய்துக் கொண்டிருந்தவர்கள், அமெரிக்காவில் பிறந்து, அமெரிக்காவில் வளர்ந்த முஸ்லிம்கள். (புரியும் படியாகச் சொன்னால் அமெரிக்காவின் பிறவி முஸ்லிம்களே.)

**கடைசி ஆயுதம்!**

இருந்தாலும் நாங்கள் மனந்தளராமல் எங்களுடைய முயற்சிகளைத் தொடர்ந்தோம். நீதிமன்றத்தின் உதவிகளோடு வழக்குகளை இழுத்தடித்தோம்.

ஆனாலும் எங்களால் முடிந்ததெல்லாம், செப்டம்பர் திங்கள் 11ஆம் நாள் திறக்கவிருந்த மஸ்ஜித் -ஐ செப்டம்பர் திங்கள் 22ஆம் நாளில் திறக்க வைத்தோம். (2001 - செப்டம்பர் 11ஆம் நாள்)

அதாவது 9/11 என அடையாளப் படுத்தப்படுவது அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் தகர்க்கப்பட்ட நாள். இந்த நாளை இஸ்லாமியத் தீவிரவாதம் உலகின் மேல் தன் தாக்குதலை தொடுத்த நாள் எனக் கூறி வருகின்றோம்.

சரியாக பத்து ஆண்டுகள் கழித்து 2011 ஆம் ஆண்டு செப்டம்பர் 11ஆம் தேதி திறக்கவிருந்த பள்ளிவாசலை - பத்து நாட்கள் கழித்து செப்டம்பர் 21ஆம் நாள் திறந்தார்கள். இப்படி பத்து நாட்கள் மஸ்ஜித் திறப்பை தள்ளிப் போடுவதைத் தவிர எங்களால் எதுவும் செய்திட இயலவில்லை.

ஆனாலும் நாங்கள் மனம் தளர்ந்திட வில்லை. எங்கள் தாக்குதலைத் தொடர்ந்தோம். அதில் குரூரம் நிறைந்த பல உத்திகளைக் கையாண்டோம்.

அவை அடுத்த இதழில் இன்ஷா அல்லாஹ்.

**எம்.ஜி.எம்.**

**வைகறை வெளிச்சம் முந்தைய இதழ்களை படிக்க கீழுள்ள இணையதள முகவரியில் சென்று படிக்கலாம்**

**www.darulislam.in**

# படேல் சிலை லாபமா? நஷ்டமா??



சில வாரங்களுக்கு முன்பாக உலகின் மிகப் பெரிய சிலை இந்தியாவில் நிறுவப்பட்டது. இது இந்தியாவை ஒருங்கிணைத்த இரும்பு மனிதர் சர்தார் வல்லபாய் பட்டேலுக்கு பெருமை சேர்க்கும் விதமாக மத்திய அரசு செய்துள்ளது என்று விளம்பரம் செய்யப்படுகிறது.

இந்த நாட்டில் படேலுக்கு சிலை வைப்பதில் யாருக்கும் எந்த ஆட்சேபனையும் இருக்கப் போவதில்லை ஆனால் இந்த சிலை வைப்பதற்கு செலவிடப்பட்ட தொகை 3,000 கோடி ரூபாய் தேவையற்றது என்பதே பெரும்பாலான பாமர மக்களின் கருத்தாக உள்ளது.

10 லட்சம் ரூபாய் கட்டவில்லை என்பதால் மருத்துவமனைக்கு செல்ல வேண்டிய பிராணவாயு உருளைகள் நிறுத்தப்பட்டதால் மட்டும் 63 குழந்தைகள் இறந்தது இந்த தேசத்தில் தான். ஒருவர் அவர் மனைவி இறந்த பின்பு போதிய வாகன வசதி கிடைக்காததால் பத்து கிலோமீட்டர் வரை சுமந்து கொண்டு நடந்த துயரமும் இங்கு உண்டு. ஊட்டச்சத்து குறைபாடுகளால் அங்கன்வாடி உள்ள குழந்தைகள் இறந்தது குஜராத்தில்தான் மேலும் பிறந்து சில நாட்களே ஆன குழந்தையும் அதே மருத்துவமனையில் எலி கடித்து இறந்ததும் இதே நாட்டில்தான்.

இது போன்ற வசதிகள் மிகக்குறைவாக உள்ள நாட்டில் ஒரு சிலைக்கு இவ்வளவு செலவு தேவைதானா என்ற கேள்வியும் நியாயமானதே.

பட்டேல் சிலையால் மத்திய அரசுக்கு ஏற்படப்போகின்ற நன்மைகள் மிகவும் குறைவுதான் காரணம் அது ஒரு சுற்றுலாத் தலமாக காட்டிக் கொண்டாலும் அது மக்களை கவர்ந்திழுக்குமா என்பது மிகப்பெரிய கேள்வி.

**மக்களின் வருகை:**

இந்தியாவில் அதிக மக்களே ஈர்ப்பதில் சிறந்த சுற்றுலா தலமாக விளங்குவது தாஜ்மஹால். இங்கு வருடத்திற்கு 80 லட்சம் பேர் காண வருகிறார்கள் என்று தெரிகிறது. ஆனால் தாஜ் மஹாலின் மொத்த வருட வருமானமே 25 கோடி தான். அந்த வகையில் பார்த்தால் பட்டேல் சிலையை பார்ப்பதற்கு மக்களின் ஆதரவு கிடைத்தாலும் அரசு செலவு செய்த பணத்தை மீண்டும் எடுப்பது சாதாரண காரியமல்ல.

**சிறுதொழில் வளர்ச்சி:**

ஒரு சுற்றுலாத்தலத்தை அதன் வருமானத்தை மட்டும் வைத்து ஒப்பிடக்கூடாது. காரணம் அது பல மக்களுக்கு வாழ்வாதாரமாக இருக்கிறது. உதாரணமாக தங்கும் விடுதிகள்

மற்றும் கடைகள் என்று கூறலாம். ஆனால் இந்த கட்டமைப்புக்கு 3000 கோடி செலவு தேவைதானா?

இந்த பணத்தை வைத்து ஒரு தொழிற்சாலையை கட்டியிருந்தால் பல மக்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கி இருக்கலாம். மேலும் படேல் சிலை திறப்பு நாள் அன்று 75 கிராமங்களில் உணவு சமைக்க வில்லை காரணம் அவர்களுடைய நிலங்கள் பறிபோய் விட்ட நிலையிலும் அவர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுவிட்டது.

**கண்களுக்கு விருந்து:**

எந்த ஒரு சுற்றுலாத் தலமாக இருந்தாலும் அதனை புகைப்படத்தில் பார்த்தாலும் அல்லது காணொளியில் பார்த்தாலும் அதன் முழு அழகை ரசித்த விட முடியாது என்கிற நிலை இருந்தால் தான் சுற்றுலா பயணிகளின் வருகை கிடைக்கும். உதாரணமாக தாஜ்மஹால் அதனை புகைப்படத்தில் பார்ப்பதைவிட நேரில் பார்க்கும் போது கண்கொள்ளா காட்சியாக இருக்கும். இதுபோன்று ஒவ்வொரு சுற்றுலா தளத்திற்கு ஒரு தனி சிறப்பு உண்டு. அந்த வகையில் பட்டேல் சிலையைப் பார்க்கும் போது ஒரு ஈர்ப்பு வரவில்லை காரணம் அது ஒரு சிலை அதன் சிறப்பு பெரிதாக உள்ளது என்கிற சிறிய வட்டத்துக்குள் அடங்கிவிடுகிறது.

**போக்குவரத்து வசதி:**

உலகில் உள்ள தலைசிறந்த சுற்றுலா தலங்கள் அதன் தலைநகருக்கு அருகிலோ அல்லது சுலபமாக சென்று சேரும் இடத்தில் இருக்கும். ஆனால் பட்டேல் சிலை மும்பையிலிருந்து சென்றாலும் அல்லது அகமதாபாத்திலிருந்து சென்றாலும் பல மணி நேரங்கள் ஆகும். ஒரு சிலையை காண்பதற்கு இவ்வளவு நேரம் பயணிகள் கொடுப்பார்களா என்ற கேள்வி எழுகிறது.

எந்த கோணத்தில் அணுகினாலும் பட்டேல் சிலை நாட்டுக்கு தேவையற்றது. இந்த தேசத்தை உருவாக்கியதில் நாட்டின் முதல் பிரதமர் நேருவின் பங்களிப்பை குறைப்பதற்காகவும் மேலும் இந்துத்துவா பிதா சாவர்க்கரை காந்தி கொலை வழக்கில் இருந்து காப்பாற்றியதாலும் மற்றும் ஹைதராபாத்தை இந்தியாவோடு சேர்க்கிறேன் என்று கூறி 2 லட்சம் முஸ்லிம்களை கொன்றதால் பட்டேலை இவர்கள் முன்னிறுத்த பார்க்கிறார்கள்.

ஒரு நல்ல அரசு இல்லை என்றால் மக்களின் வரிப்பணம் எந்த வகையில் எல்லாம் வீணாக்கப்படும் என்பதற்கு உதாரணமாக இந்த அரசு விளங்குகிறது.

பிரிட்டன் அமைச்சர் பீட்டர் போன் இது ஒரு முட்டாள்தனமானது என்றும் இந்தியாவிற்கு செய்யப்படும் உதவிகளை நிறுத்த வேண்டும் என்றும் சாடியுள்ளார். கடந்த ஐந்து ஆண்டுகளில் பிரிட்டன் அரசாங்கம் கிட்டத்தட்ட 9500 கோடிகள் வழங்கியுள்ளது பல்வேறு துறைகளில் இந்தியாவை முன்னேற்றுவதற்கு. இப்படி அன்னிய நாடுகளின் பிச்சை எடுக்க வேண்டிய நிலையில் இருக்கும்போது இப்படிப்பட்ட செலவுகள் செய்வது நிச்சயமாக முட்டாள்தனம்தான். மேலும் இந்த சிலையை பற்றி எதிர்மறை கருத்துக்களை கூறுபவர்கள் தேச துரோகிகள் என்றும் நாட்டுப்பற்று அற்றவர்கள் என்றும் பதில் கூற சங்பரிவார்கள் என்றுமே தயங்குவதில்லை.

**அபுதாஹிர்**


**வாசகர்கள் தங்களது சந்தாக்களை புதுப்பித்துக் கொள்ளுங்கள்**

**8148129887**

தலையங்கம்

# ஒழுக்கம்

## பேண ஒரே வழி!

"மேலும், உங்களுக்கு கொடுக்கப் பட்டிருப்பவையெல்லாம் (அற்பமாகிய) இவ்வுலக வாழ்க்கையின் சுகமும், அதனுடைய அலங்காரமும் தான்; ஆனால் அல்லாஹ்விடத்தில் இருப்பவை மிகவும் மேலானவையாகவும் நிலையானவையாகவும் இருக்கின்றன; (இதை) நீங்கள் அறிந்து கொள்ள மாட்டீர்களா?"

(அல் குர்ஆன் 28:60)"

ஒருபால் புணர்ச்சி! என்பது மனித இனத்தை அழிவுக்கே அழைத்துச் செல்லும். இது மனித வரலாறு நமக்குப் படித்துத் தரும் பயனுள்ள பாடம். அது ஏற்படுத்திய நோய்களிலிருந்து இன்றளவும் மீளவில்லை மனித இனம். HIV, எய்ட்ஸ் போன்ற நோய்கள் இந்த ஒரு பால் புணர்ச்சியால் அவனியில் தரித்தவை.

அது போலவே அந்த Adultery எனும் கூடா உறவு. ஆண் பெண் தாம்பத்திய உறவுகள் திருமண ஒப்பந்தங்கள் வழியாகத்தான் நடந்திட வேண்டும். இது அல்லாத உறவுகள் அனைத்தும் கூடா உறவுகளே ஒழுக்கமற்ற ஈனச்செயல்களே.

திருமண உறவு நீடித்துக் கொண்டிருக்கும் போது நிச்சயமாக மனைவி இன்னொரு ஆணோடு உறவு கொள்ளக்கூடாது. அப்படிச் செய்தால் அது தண்டனைக்குரிய குற்றம். அது கடுமையான தண்டனைகளைப் பெற்றுத் தரும்.

ஒரு பெண் கணவனை விடுத்து இன்னொருவரோடு உடலுறவு வைத்துக்கொள்ள வேண்டும் என்றால், அவள் முதலில் கணவனிடமிருந்து முறையான மனவிலக்கைப் பெற வேண்டும். பின்னர் அந்த கணவனின் குழந்தை தன் கருப்பையில் இல்லை என்பதை உறுதி செய்துக் கொள்ள வேண்டும். கருவுற்றிருந்தால் குழந்தை

பெற்ற பின் முறையான மணவிலக்கை பெற்று விட வேண்டும். அதன் பின் தான் விரும்பிய ஆணோடு திருமணம் செய்துக் கொள்ள வேண்டும். ஆனால் இன்றைய பெண்கள் கணவனை கொலை செய்து விட்டு தான் விரும்பும் ஆணுடன் ஓடி விடுகின்றனர். அது வேறு விவகாரம்.

அல்லாமல் சில நீதிபதிகள் சொல்லுகின்றார்கள் என்ற மதமதப்பில் இல்லங்களை சிவப்பு விளக்குப் பகுதியாக மாற்றிட வேண்டாம். இவையெல்லாம் சாதி, மதம், நிறம், நிலம் இவற்றைக் கடந்த மனித மாண்புகள். மனிதனுக்கு வழிகாட்டிட இறைவனும் இந்த மாண்புகளையே விதியாக்கினான். மானுடம் தழைக்கவும் வாழவும்.

இஸ்லாம் இந்த உலகில் வந்து மனித மாண்புக்களை நல்ல ஒழுக்க விழுமியங்களைக் கற்றுத் தருவதற்கு முன்பு, ஆண்கள் எத்தனை பெண்கள், என்ன உறவு என்பதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் களித்துக் கிடந்தனர். அதில் எந்த ஒழுக்க நெறியும் கட்டுப்பாடுமில்லை. அந்த காலக்கட்டத்தை ஐய்யாமுல் ஜாஹிலிய்யா - அறியாமையின் இருள் மண்டிக்கிடந்த காலம் என்று வரலாறு பதிவு செய்கின்றது. ஆனால் இன்று அதே வாழ்க்கைக்கு வழிவிடும் தீர்ப்புகள் முன்னேற்றத்தின் படிகள் எனப் பாராட்டப் படுகின்றன.

முறை தவறிய வாழ்க்கையை வாழ்ந்துக் கொண்டிருந்த இந்தப் பெண்கள் கோடிஸ்வரர்களை ஓட்டாண்டிகளாக ஆக்கி இவர்கள் கொழுத்துக் கிடந்தார்கள். இவர்களோடு தொடர்பு வைத்திருந்த ஆண்கள் பல்வேறு பாலியல் நோய்களால் புழுத்துச் செத்தார்கள். சாவதற்கு முன்னால் நாயும் சீண்டாத ஜீவன்களாக தெரு வீதிகளில் நெளிந்து கொஞ்சம், கொஞ்சமாக நொந்து செத்தார்கள்.

இந்த பெண்கள் சீமான்களைத்தான் சில்லரை மனிதர்களாக சிதைத்தார்கள் என்றில்லை. கோமான்களையெல்லாம், காடும், நகரமும் இழந்தவர்களாக காடுகளுக்கும், முடிவில் இடுகாடுகளுக்கும் அனுப்பினார்கள். அன்றைய தமிழ் சினிமாக்கள் இந்த கோரங்களையெல்லாம் மக்களுக்கு எடுத்துச் சொல்பவையாக இருந்தன.

இவர்களின் சல்லாப விளையாட்டுகள் இத்தோடு நிற்கவில்லை. கிரீஸ், ரோம் போன்ற சாம்ராஜியங்களைத் தவிடு பொடியாக்கிக் காட்டினார்கள். இதனை பண்டித நேரு அவர்கள் கிரீஸ் வாழ்ந்த வரலாறு என்ற நூலில் சுட்டிக்காட்டியுள்ளார்கள். அழகு மங்கைகளோடு சல்லாபித்துக் கிடந்த மன்னர்கள் மட்டும் தான் மாண்டார்கள் என்றில்லை. அவர்களை நம்பி நின்ற நாடுகளும், சமுதாயங்களும் வேரோடு சாய்ந்தன.

இவையெல்லாம் வரலாறுகளாக மாற்றப்பட்டு, மனித சமுதாயம் எப்படி இருக்கக் கூடாது என்பதற்கான பாடங்களாக வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

கடந்த கால் நூற்றாண்டாக இந்தியா நாடு ஒரு பெருமையை உண்மையைச் சொன்னால் இழிவை சுமந்துக் கொண்டிருக்கின்றது. அஃது தஸ்லிமா நஸ்ரின் என்ற பெண்ணியவாதிக்கு நாம் தந்து வரும் நிபந்தனையற்ற ஆதரவு.

இந்தப் பெண்மணியை இஸ்லாத்திற்கு எதிரான அவதூறுகளைப் பரப்பவும், முஸ்லிம்களுக்கு சதா சர்வகாலமும் தலைவலியாக இருக்கவே நமது ஆட்சியாளர்கள் அவளுக்கு ஆதரவு தந்தார்கள். அடைக்கலம் தந்தார்கள். அவளுக்கு இந்திய விதிகள் இடம் தராத போது அந்த விதிகளை வளைத்தார்கள். தேவைப்பட்ட இடங்களில் மாற்றங்களைச் செய்தார்கள்.

அந்த அம்மணிக்கு அடைக்கலம் தருவதற்கும் பாதுகாப்புத் தருவதற்கும் ஏராளமான பணம் தேவைப்பட்டது. அதைத் தாராளமாக நமது அரசுகள் செலவழித்தன.

இந்த அம்மணி வளர்த்த பெண்ணியத்தின் ஒருக் கட்டத்தில் அது இப்படிக் குறிப்பிட்டது.

“என் கருப்பையில் எந்த ஆணின் குழந்தை வளர வேண்டும் என்று விரும்புகின்றேனோ, அந்த ஆணின் குழந்தையையே வளர்ப்பேன். அது என்னுடைய கணவனுடையதாக

இருந்திட வேண்டும் என என்னை யாரும் நிர்பந்திக்கக் கூடாது."

இந்த விபச்சாரத்தின் முதல் படியை அவள் கருப்பையின் சுதந்திரம் என்றாள். வீடு, குடும்பம், சமுதாய அமைப்புகள் இவற்றை சாம்பலாக்கிடும் பயங்கர முழக்கம் இது.

இதைத்தான் நமது உச்ச நீதிமன்றங்கள் இப்போது மனம் ஒப்பி இருவர் காமத்தில் ஈடுபட்டால் திருமண உறவகளுக்கு வெளியில் அது தவறேதுமில்லை எனக் கூறிவருகின்றது.

இந்த குளறுபடிக்கெல்லாம் என்னக் காரணம் சொல்லுகின்றார்கள்! மனிதன் முன்னேறி விட்டான். காலங்கள் மாறிவிட்டன. காலத்தின் மாற்றங்களுக்கு ஈடு கொடுத்தாற் போல் நாமும் மாறிட வேண்டும் என்பது தான். ஒருபால் புணர்ச்சியில் ஈடுபடுபவர்கள் பாலியல் சிறுபான்மையினர்.

இதில் ஓரின சேர்க்கைக்கு அனுமதியளித்த நீதிபதி ஒருவர் இப்படிக் குறிப்பிட்டார். "இத்தனை நாளாய் ஓரின சேர்க்கைக்குத் தடை விதித்திருந்ததற்கு அவர்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும்." இவர்கள் எதிர்கால தலைமுறையை தறிகெட செய்ததற்கு மன்னிப்புக் கேட்டிட வேண்டிய காலம் நிச்சயம் வரும்.

இந்திய திரு நாடு பொருளாதாரத்தில் தான் அதல பாதாளத்தில் வீழ்ந்தது என்றில்லை. ஒழுக்கத்தில் அதை விட மிகப்பெரிய சவக்குழியை நோக்கி இட்டுச் செல்லப் படுகின்றது இது போன்ற தீர்ப்புகளால்.

மனிதன் முன்னேறி விட்டான் என்ற போர்வையில், நாம் மது, சூது, விபச்சாரம், ஒருபால் புணர்ச்சி போன்றவற்றை உற்சாகப்படுத்திடும் போது இவற்றை அங்கீகரிக்கும் சட்டங்களை எண்ணிக்கைப் பலத்தைக் கொண்டு யாத்திடும் போது ஒன்றை கவனிக்க வேண்டும்.

அது நம்மிடம் எது நிலையான ஒழுக்கம் என்பதை அளப்பதற்கு எந்தத் துலாக் கோலுமில்லை. எந்த நிலையான வழி காட்டுதலுமில்லை என்பதே. இதனால் தான் நேற்று பாவம் அடாத செயல் கூடா ஒழுக்கம் எனக் கூறியவற்றை இன்று புண்ணியமானவை, அவசியம் செய்ய வேண்டிய செயல் எனக் கூறுகின்றோம்.

இனி ஒருபால் புணர்ச்சியும், இல்லந்தோறும் பெருக்கெடுக்கவிருக்கும் விபச்சாரமும், பல சொல்லாத நோய்களைத் தந்த பின்பு மனிதர்கள் மாண்ட பின்பு இனி கூடாது எனத் தடுப்பார்கள். தங்களுடைய தீர்ப்பால் எச்.ஐ.வி. – எய்ட்ஸ் போன்ற நோய்கள் வரலாம் என எதிர்பார்த்திருக்கின்றார்கள். இதைத் தீர்ப்பில் குறிப்பிட்டு நோய் நிவாரணம், ஆரோக்கியம் இவையெல்லாம் அரசின் பொறுப்பு எனக் கூறுகின்றார்கள்.

இப்படி இவர்களின் ஒழுக்க விதிகள் அடிக்கடி மாறி வருகின்றன. ஒரு நிலையான தரமில்லை. இங்கே தான் இஸ்லாம் உலகின் இதுவரை அறிமுகமான வழிகாட்டுதல்கள் அனைத்தையும் மிகைத்து நிற்கிறது.

அது 1400 ஆண்டுகளுக்கு முன்னால் எதையெல்லாம் மனிதர்களுக்குக் கூடாது, ஆகாது, பாவம், தடுக்கப்பட்டவை, அனுமதிக்கப்படாதவை எனக் கூறியதோ, அவையெல்லாம் இன்றும் கூடாது, ஆகாது, தடுக்கப்பட்டவைதான். இன்று மட்டுமல்ல என்றும் அவைக் கூடாது, தடுக்கப் பட்டவையாகவே இருக்கும். உலகம் உள்ளவரை இதே தான் நிலை. இடையில் எந்த மாற்றமும் இருக்காது.

தடுக்கப்பட்டவை, கூடாதவை, ஆகாதவை இவற்றை செய்பவர்கள் தகுந்த பாவப் பரிகாரங்களை செய்யவில்லையென்றால் அவர்கள் தண்டிக்கப்பட்டே தீருவார்கள் மரணத்திற்கு பின்னால் வரும் வாழ்க்கையில். அப்படி நிரந்தரமாக தடுக்கப்பட்டவை. இதில் குடி, சூது, குறி கேட்பது, விபச்சாரம், திருமண உறவு அல்லாமல் அதற்கு வெளியே வைத்துக்கொள்ளும் உடல் உறவுகள், ஒரு பால் புணர்ச்சி இவையெல்லாம் அடங்கும்.

மனிதனின் சிந்தனைகள், முற்போக்காக ஆகிவிட்டன என்று போலிப் போதையை பெண்ணியம் வளர்ந்து விட்டது போன்ற சிந்தனைகளால் இங்கே தடை செய்யப்பட்டவை, அனுமதிக்கப் பட்டவையாக மாறமாட்டா.

ஒவ்வொரு முஸ்லிமும் இதிலிருந்து தவிர்த்துக் கொள்வதில் கவனமாக இருக்கின்றான். அவன் மரணத்திற்கு பின்னால் வரும் வாழ்க்கையில் இறைவன் வகுத்துத் தந்த நெறிமுறைகளை மீறியமைக்காகத் தண்டிக்கப்படக் கூடாது என்பதில் கவனமாக இருக்கின்றான்.

இந்த நிலையான வழிகாட்டுதலும், மரணத்திற்கு பின்னால் வரும் வாழ்க்கையில், இறைவனால் தண்டிக்கப்படக் கூடாது என்ற இறைவனைப் பற்றிய அச்சமும் ஒழுக்கம் பேண இருக்கும் ஒரே வழி!

இந்த நெறிமுறைகளை அனைவருக்கும் அயராது எடுத்துச் சொல்வோம். அப்போது மட்டுமே மனித இனமும், குறிப்பாக இந்தியாவில் வாழும் சகோதர சமுதாயத்தைச் சார்ந்தவர்கள், இவர்களெல்லாம் இந்த உலகில் கொடூர நோய்களிலிருந்தும், அறிவீனத்திலிருந்தும் பாதுகாக்கப்படுவார்கள். மறுமையில் நிரந்தர வெற்றியைப் பெறுவார்கள்.

இறைவன் கூறுகின்றான்:

நூஹுக்கு எதனை அவன் உபதேசித்தானோ அதனையே உங்களுக்கும் அவன் மார்க்கமாக்கியிருக்கின்றான், ஆகவே (நபியே!) நாம் உமக்கு வஹீ மூலம் அறிவிப்பதும் இப்ராஹீமுக்கும் மூஸாவுக்கும் ஈஸாவுக்கும் நாம் உபதேசித்ததும் என்னவென்றால்: "நீங்கள் (அனைவரும்) சன்மார்க்கத்தை நிலை நிறுத்துங்கள். நீங்கள் அதில் பிரிந்து விடாதீர்கள்" என்பதே - இணை வைப்போரை நீங்கள் எதன் பக்கம் அழைக்கின்றீர்களோ அது அவர்களுக்குப் பெரும் சுமையாகத் தெரிகிறது - தான் நாடியவர்களை அல்லாஹ் தன் பால் தேர்ந்தெடுத்துக் கொள்கிறான் - (அவனை) முன்னோக்குபவரை அவன் தன் பால் நேர்வழி காட்டுகிறான்.

அவர்கள் தங்களிடம் ஞானம் (வேதம்) வந்த பின்னரும் தங்களுக்கிடையேயுள்ள பொறாமையின் காரணமாகவேயன்றி அவர்கள் பிரிந்து போகவில்லை, (அவர்கள் பற்றிய தீர்ப்பு) ஒரு குறிப்பிட்ட தவணையில் என்று உம்முடைய இறைவனின் வாக்கு முன்னரே ஏற்பட்டிருக்கா விடில் அவர்களிடையே (இதற்குள்) நிச்சயமாக தீர்ப்பளிக்கப்பட்டு இருக்கும், அன்றியும் அவர்களுக்கு பின்னர் யார் வேதத்திற்கு வாரிசாக்கப்பட்டார்களோ நிச்சயமாக அவர்களும் இதில் பெரும் சந்தேகத்தில் இருக்கின்றனர். (அல்குர் ஆன் : 42: 13,14)

ஒருபால் புணர்ச்சி என்பது உலகில் நபி லூத்(அலை) அவர்களின் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்று அதன் காலத்தைக் குறிப்பிடுவதென்றால் கிறிஸ்துவிற்கு முன் 1900 ஆண்டுகள் எனலாம். அதாவது இன்றிலிருந்து சரியாக 4500 முதல் 5000 ஆண்டுகளுக்கு முன்.

இடத்தை குறிப்பிடுவது என்றால் செங்கடலுக்கு **(Red Sea)**க்கு வடக்கே உள்ள பகுதி. இன்றைய ஆவணக் குறிப்புகள் **Dead Sea** சாக்கடல் பகுதிகள் என்றும் குறிப்பிடுகின்றன. இந்த இரண்டிற்குமிடையே பெரிய வேறுபாடுகள் எதுவுமில்லை. இன்னும் குறிப்பிட்டுச் சொன்னால் இஸ்ரேல் - ஜோர்டான் பகுதி எனலாம்.

இந்த மக்களை ஒருபால் புணர்ச்சியிலிருந்து முறையான திருமண உறவுக்கு திருப்பிட இறைவனின் தூதர் லூத்(அலை) அவர்கள் அனுப்பப்பட்டார். பயனில்லை. அந்த மக்கள் அழிக்கப்பட்டார்கள்.

அதே பாணியில் ஒட்டு மொத்தமான ஓர் அழிவை நோக்கியே இப்போதைய தீர்ப்புகள் இட்டுச் செல்கின்றன. அல் குர்ஆன் கூறுகின்றது;

"உலகத்தார்களில் நீங்கள் ஆடவர்களிடம் (கெட்ட நோக்கோடு) நெருங்குகின்றீர்களா? இன்னும் உங்கள் இறைவன் உங்களுக்காகப் படைத்துள்ள உங்கள் மனைவிமார்களை விட்டு விடுகிறீர்கள், இல்லை நீங்கள் வரம்பு கடந்த சமூகத்தாராக இருக்கின்றீர்கள்."

அதற்கவர்கள்: "லூத்தே (இப்பேச்சையெல்லாம் விட்டு) நீர் விலகிக் கொள்ளா விட்டால் நிச்சயமாக நீர் (இங்கிருந்து) வெளியேற்றப் படுவீர்" எனக் கூறினர். அவர் கூறினார் "நிச்சயமாக நான் உங்கள் செயல்களைக் கடுமையாக வெறுப்பவனாக இருக்கிறேன்.

என் இறைவனே! என்னையும் என் குடும்பத்தாரையும் இவர்கள் செய்து கொண்டிருக்கிற( தீய)வற்றிலிருந்து காப்பாயாக!" (எனப் பிரார்த்தித்தார்.)

அவ்வாறே நாம் அவரையும் அவர் குடும்பத்தார் யாவரையும் காத்துக் கொண்டோம். (அழிந்து போவோரில் ஒருத்தியாக) பின் தங்கிவிட்ட கிழவியைத் தவிர

பின்னர் நாம் மற்றவர்களை அழித்து விட்டோம். இன்னும் நாம் அவர்கள் மீது (கல்)மாரி பொழியச் செய்தோம். அச்சமூட்டி எச்சரிக்கப்பட்ட (ஆனால் அதைப் புறக்கணித்த)வர்கள் மீது (அக்கல்)மாரி மிகவும் கெட்டதாக இருந்தது. நிச்சயமாக இதிலே ஓர் அத்தாட்சி இருக்கிறது. எனினும் அவர்களில் பெரும்பாலோர் நம்பிக்கைக் கொள்வதில்லை.

மேலும் நிச்சயமாக உம்முடைய இறைவன் (யாவரையும்) மிகைப்பவனாகவும் கிருபையுடையவனாகவும் இருக்கின்றான்

அல்குர்ஆன் (26:16-175)



# இஸ்லாம் 9

## அரசியல் | அதிகாரம் | அரபுலக எழுச்சி

1941 ஆம் ஆண்டு ஜமாத்தே இஸ்லாமி என்ற இயக்கத்தை ஆரம்பித்தார் மவ்தூதி. முஸ்லிம்களுக்கு தனி நாடு வேண்டும் என்று அனைத்து இந்திய முஸ்லிம் லீக் தீர்மானம் நிறைவேற்றியது. தன்னுடைய இயக்கத்தின் முதல் மாநாட்டிலேயே அத்தீர்மானத்தை எதிர்த்தார் மவ்தூதி. முஸ்லிம்கள், தங்களுக்கென்று ஒரு நாட்டை அவர்களே உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கையை இந்திய முஸ்லிம்களிடம் வைத்தார். அது, இனத்தின் அடிப்படையில் தேசத்தை உருவாக்கிடும் ஐரோப்பாவின் மாதிரியை பின்பற்றாமல், இஸ்லாத்தின் அடிப்படையில் அமைய வேண்டும் என்றார்.

முஸ்லிம் நாடுகள் இணைந்து சர்வதேச அளவில் ஒரு ஒன்றியத்தை ஏற்படுத்த வேண்டும். அதன் மூலம் உலக அரசியலில் இஸ்லாத்தின் ஆற்றல் புத்துயிர் பெற வேண்டும் என்றார். மவ்தூதியை பொறுத்தவரை சமூக நீதியை நிலைநிறுத்த இஸ்லாமிய அரசு அவசிய தேவை. எனவே இஸ்லாத்தின் அடிப்படையில் முழு சீர்திருத்தம் செய்யப்பட வேண்டும் என்று நம்பினார்.

இஸ்லாத்தின் அரசியல் கொள்கை குறித்த விளக்கத்தில் சய்யித் குதுப்பும், மவ்தூதியும் கிட்டத்தட்ட ஒரேமாதிரியான கருத்துகளையே கொண்டிருந்தனர். மவ்தூதியின் அரசியல் கொள்கையால் மிகவும் கவரப்பட்டார் குதுப். ஹாகிமிய்யா குறித்த மவ்தூதியின் விளக்கத்தை பெற்றுக்கொண்டு சய்யித் குதுப் தனது கருத்துகளிலும் அதை பிரதிபலித்தார்.

### அரபு எழுச்சியும் அரசியல் மாற்றங்களும்:

2010-த்தின் கடைசி நாட்களில் அரபுலகத்தில் திரும்பும் திசையெல்லாம் வெறுப்பு, விரக்தி, எதிர்ப்பு அலைகளே வீசின. நவீன அரபுலகம் சந்தித்த எழுச்சியில் 2010- ஆண்டில் உருவான எழுச்சியே மிகப்பெரியது. அரபுலகத்தில் நிலவிய சமூக அரசியல் நிலைகளுக்கு எதிராக மக்கள் பெருமளவில் திரண்டு தங்கள் எதிர்ப்புகளை பதிவு செய்தனர். அடுத்த கணம் என்ன நடக்கும் என்பதை தீர்மானிக்க முடியாத அளவில் அரபு தேசங்களின் நிலை இருந்தாலும் ஒன்றை மட்டும் நிச்சயமாக அப்போது சொல்ல முடிந்தது. அரபுலகம் எப்போதும் ஒரே மாதிரி இருக்காது என்பதே அது.



ஏகாதிபத்தியம், அந்நிய நாடுகளின் கைப்பாவையாக செயல்படும் அரசாங்கம் இவற்றிற்கு எதிராக, முடிவு கட்ட நடந்ததே இந்த கிளர்ச்சிகள்.

2010 டிசம்பர் மாதம் முஹம்மத் புவாசிசி என்ற வேலை கிடைக்காத பட்டதாரி, துனீசியாவின் ஒரு நகரமான சிதி பௌஜித்தில் வைத்து தன்னை தானே நெருப்பிட்டு கொண்டார்.

இதன் பின்னரே புரட்சி ஆரம்பித்தது. போராட்டங்கள் கிராமத்திலிருந்து நகரத்திற்கும், ஒரு பகுதியிலிருந்து மறு பகுதிக்கும், ஒரு நாட்டிலிருந்து அடுத்த நாட்டிற்கும் பரவ ஆரம்பித்தது. இந்த எழுச்சியில் இணைய சேவைகளும், எலெக்டிரானிக் ஊடகங்களும் மிகப் பெரும் ஆயுதமாக பயன்படுத்தப் பட்டன.

அரபுலகத்தில் ஏற்பட்ட இப்புரட்சியினால் எகிப்து அதிபர் முபாரக், துனீசியா அதிபர் பின் அலி ஆகியோர் தங்கள் பதவியை இழந்தனர்.

### இஸ்லாத்தை முன்னிறுத்தி அரசியல்:

சமீப காலங்களில் அரசியல் இஸ்லாம் என்ற வார்த்தையை பலர் பயன்படுத்துகின்றனர். இந்த வார்த்தையை முதன் முதலில் 1980-இல் மார்டின் கிராமர் பயன்படுத்தினார். குறிப்பாக இந்த வார்த்தை எதற்காக பயன்படுத்தப்படுகிறது என்றால், ஓர் இயக்கம் இஸ்லாத்தின் பெயரால் மக்களை அரசியலை நோக்கி அழைத்து செல்லுதலை குறிப்பதற்காக. (இஸ்லாம் என்பது அரசியல், ஆன்மிகம் என அனைத்தையும் உள்ளடக்கியது. அதை ஆன்மீக இஸ்லாம், அரசியல் இஸ்லாம் என்று கூறி ஒரு பகுதியில் மட்டும் கவனம் செலுத்துவது ஏற்கத்தக்கதல்ல).

இஹ்வானுல் முஸ்லிமின் இயக்கத்தின் அரசியல் செயல்பாடுகளை குறிக்கவும் சிலர் அரசியல் இஸ்லாம் என்ற வார்த்தையை பயன்படுத்துகின்றனர். எப்படி அரபுலகத்தில் அரசியல் மாற்றங்கள் ஏற்படுகிறது என்பதை புரிந்து கொள்ள நாம் இஹ்வானுல் முஸ்லிமின் இயக்கத்தின் வரலாற்றை புரிந்து கொள்ள வேண்டும்.

அரபுலகத்தில் உருவான ஒவ்வொரு இஸ்லாமிய இயக்கமும் ஏதோ ஒரு வகையில் இஹ்வானுல் முஸ்லிமின் இயக்கத்தின் சிந்தனைகளை பெற்றுக் கொண்டதில் அவர்களுக்கு கடன்பட்டுள்ளது. ஒவ்வொரு இயக்கத்திற்கும் இடையே கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், இஸ்லாத்தில் அரசியலும் அடக்கம் என்பதை புரிந்து கொண்டு செயல்பட்டதற்கு காரணம் முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தின் கொள்கைகளே.

சோசியலிசத்தை நிலைநாட்டியே தீருவேன் என்று செயல்பட்ட நாசரின் ஆட்சி காலத்தில் முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்திற்கும் அரசுக்கும் இடையே இருந்த உறவு மிகவும் பின்னடைவை சந்தித்தது. இஸ்லாமிய ஒழுங்கு முறையை கொண்டு வருவது என்னுடைய விருப்பமல்ல என்பதை மிகத் தெளிவாகவே நாசர் குறிப்பிட்டார். 1954 இல் முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தின் உறுப்பினர்களும் அதன் ஆதரவாளர்கள் பலரும் சிறையில் அடைக்கப் பட்டனர். 1957-இல் நடைபெறவிருந்த

பாராளுமன்ற தேர்தலில், முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தில் இருந்து தேர்தலில் கலந்து கொள்ள விண்ணப்பித்தவர்களின் வேட்பு மனுக்கள் மொத்தமாக நிராகரிக்கப்பட்டன.

*1967-* இல் எகிப்தை தலைமையாக கொண்டு நடந்த அரபு-இஸ்ரேல் யுத்தத்தில் தோல்வியை தழுவியது எகிப்து. அதன் பின்பு *1968-* இல் எதிர்கட்சிகளும் அரசியலில் பங்கு பெரும் அளவில் கொள்கை மாற்றங்களை கொண்டு வந்தார் நாசர். முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தை சார்ந்த பல உறுப்பினர்கள் சிறையில் இருந்து விடுவிக்கப் பட்டனர். சதாத் ஆட்சிக்கு வரும்போது முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தின் *140* உறுப்பினர்களே சிறையில் இருந்தனர்.

கம்யூனிஸ்டுகளை ஓரங்கட்டவும், நாசரின் மரபை பின்னுக்கு தள்ளவும், முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தோடு இணைந்து செயல்படுவது என முடிவெடுத்தார் அன்வர் சதாத். நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் சகோதரத்துவ உறுப்பினர்கள் மீண்டும் நாட்டிற்கு திரும்பி வர அனுமதிக்கப்பட்டனர். முஸ்லிம் சகோதரத்துவ இயக்கம் எகிப்து அரசியலில் இணைந்து செயல்பட வேண்டும் என்றும் சதாத் அறிவுறுத்தினார். சதாத் ஆட்சியாளராக இருக்கும் பொழுது *1976-*இல் நடைபெற்ற முதல் தேர்தலில், அரபு சோசியலிஸ்ட் கட்சி என்ற அடையாளத்துடன் முஸ்லிம் சகோதரத்துவ இயக்க உறுப்பினர்கள் தேர்தலை சந்தித்தனர். ஆறு பேர் வெற்றி பெற்று எகிப்து பாராளுமன்றத்திற்கும் சென்றனர்.

*1979-* இல் இஸ்ரேலுடன் கேம்ப் டேவிட் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார் அன்வர் சதாத். அதன் பின்பு அன்வர் சதாத்தின் புதிய கொள்கையை ஏற்க மறுத்த முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தை துண்டாட ஆரம்பித்தார் அன்வர் சதாத். முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தின் உறுப்பினர்கள் பலர் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இன்ஷா அல்லாஹ் தொடரும்

– **அபூஹாசின்**

# வாசகர் கருத்துக்கள்

**Kaja Rabbani** முஸ்லிம்கள் அனைவரும் குறிப்பாக உலமாக்கள் படித்து அறிய வேண்டிய முக்கியமான நூல். நூலை அறிமுகம் செய்த மௌலானா இல்யாஸ் ரியாஜிக்கு வாழ்த்தும் துஆவும். பாரகல்லாஹ்.

Like · Reply · 4w   2

**Peer Mohammed Baqavi** தெளிவான பார்வை. கூர்மையான ஆய் வு.கச்சிதமான மதிப்புரை.கவிக்கோ களம் இறங்கியதற்கு காரணம் இருக்கத்தான் செய்கிறது.

Like · Reply · 4w   1

**Asar Mohamed**
today at 4:02 PM

அல்ஹம்துலில்லாஹ் வேர்கள் பதிப்பகத்தின் சிக்கல் நாயக்கன் பேட்டையிலிருந்து மக்கா மாநகரம் வரை எனும் புத்தகம் படிக்கையில் புரட்சி செய்த ஒவ்வொருவரும் இறுதியாக இஸ்லாத்தையே தீர்வாக தேர்ந்தெடுக்கிறார்கள் என்பதை அறிய முடிகிறது. தீண்டாமை என்ற கொடுமையிலிருந்த தாழ்த்தபட்ட மக்களுக்காக 25 வருடங்கள் போராடி இதற்கு தீர்வு கிடைக்காமலே போய்விடுமோ என்று கவலையில் இருக்கையில் ஜக்கரிய்யா பாய் அவர்களுக்கு இஸ்லாமிய கருத்துக்கள் அறிமுகமாகிய பின் இஸ்லாத்தை ஏற்ற நொடியிலேயே தீண்டாமை ஒழிந்ததை தம் அனுபவ ரீதியாக உணர்ந்து இந்த கொடுமையிலிருந்து நம் மக்கள் அனைவரையும் விடுவிக்க வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு நாளும் 30 ஆண்டுகளாக உழைத்துக்கொண்டிருப்பது மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக அமைந்துள்ளது. ஜக்கரிய்யா பாய் அவர்களையும் அவர்களை போன்று மார்க்கத்திற்காக உழைத்தவர்களையும் உழைப்பவர்களையும் அல்லாஹ் பொருந்திக்கொள்வானாக.


Type a message

**மதீனத்துல் முனவ்வரா**

வைகறை வெளிச்சம்
மாத இதழை முதல்
முறையாக படித்தேன்.
ஒரே சண்டை, போர்
என்று கலவரமாக இருக்கிறது.
படிப்பதற்கே பயமாக இருக்கிறது.

Type a message...

# இஸ்லாமியச் சட்டத்தின் வளமும் விசாலமும்




***நூல்*** **: *இஸ்லாமியச் சட்டத்தின் வளமும் விசாலமும்***

***தொகுப்பு*** **:** *மௌலவி, முனைவர்,* ***பி.எஸ். செய்யது மஸ்வூது ஜமாலி M.A.Phd.,***

***பக்கங்கள்*** **: *164.***

***விலை*** **: *180. ரூபாய்***

***வெளியீடு*** **: *அரபி மற்றும் இஸ்லாமிய இயல் கல்வியகம். பி.எஸ். அப்துர் ரஹ்மான் கிரசண்ட் பல்கலைக் கழகம், வண்டலூர், சென்னை - 48***

***போன் : 99520 36437 | 9444222875***

**மூ**ன்று பகுதிகளை கொண்டது இந்நூல்.

01.இஸ்லாமியச் சட்டத்தின் தோற்றமும் வளர்ச்சியும், 02.இமாம்களின் பங்களிப்பு, 03.நவீன பிரச்சினைகளுக்கான அணுகுமுறை.

இந்த மூன்று பகுதிகளை வைத்தே இஸ்லாமியச் சட்டத்தின் மாண்பையும் அதன் அவசியத்தையும் காலத்துக்கு ஏற்றப்படி தன்னை தகவமைத்துக் கொள்ளும் அதன் மேண்மையையும் சிறப்பாகப் பேசி விடுகிறது இந்நூல்.

பதினான்கு நூற்றாண்டுகளாக உலகின் பெரும் பரப்பை ஆண்ட அனுபவம் இஸ்லாத்துக்கு உண்டு. பல்வேறு மொழிகள், கலாச்சாரங்கள், பண்பாடுகள் இவற்றின் கீழ் வாழ்ந்து வந்த பல தரப்பினரும் பின் பற்றிட ஏற்றதாக ஷரீஅத் திகழ்ந்து வருகிறது.

அது மாத்திரமன்று இயற்கை எழில் கொஞ்சும் ஐரோப்பாவை இருளிலிருந்து வெளிச்சத்தை நோக்கி கொண்டு வந்தது இஸ்லாம் தான். ஐரோப்பிய சிவில் சட்டத்தின் உருவாக்கத்தில் இஸ்லாம் ஏற்படுத்திய தாக்கம் அபரிமிதமானது.

எகிப்து நாட்டின் வழியாக இஸ்லாமிய சட்டத்தின் விழுமங்களை அறிந்த நெப்போலியன் ஃப்ரான்சுக்கு வந்து உருவாக்கிய ஃப்ரஞ்சு சிவில் சட்டத்தில் மாலிக் மத்ஹபின் சாயல் உண்டு.

1950-இல் பாரிஸ் பல்கலைக் கழகத்தின் சட்டத்துறை வளாகத்தில் நடந்த சர்வதேச சட்ட ஒப்பீட்டுக் கழகத்தின் கீழை நாடுகளின் சட்டத்துறை மாநாட்டில் “இஸ்லாமிய சட்ட வாரம்” என்ற அமர்வில் பங்கேற்ற சட்ட வல்லுனர்கள் நடத்திய நீண்ட விவாதத்தின் பின்னர் எடுக்கப்பட்ட இரு முக்கிய முடிவுகள்;

1.இஸ்லாமிய ஃபிக்ஹு அடிப்படை கோட்பாடுகள் தரமிக்கவை. அவற்றிலிருந்து சட்டப்பிரிவுகள் இயற்ற முடியும்.

2.மத்ஹபுக்களுக்கிடையிலான கருத்து

வேறுபாடுகள் பொக்கிஷங்களாகும். உசூல் எனும் சட்டக் கோட்பாடுகள் போற்றத் தக்கவை. அதன் மூலம் எல்லாக் காலங்களிலும் எழும் பிரச்சனைகளுக்கு ஷரீஅத் ஆதாரத்துடன் சரியான தீர்வைப் பெற முடியும். (பக்:20)

இவ்வாறு மேற்கத்திய அறிஞர்களின் கருத்துக்களை சான்றாகக் காட்டி இஸ்லாமியச் சட்டத்தின் வளத்தையும் விசாலத்தையும் நிரூபிக்கும் ஆசிரியர், அதன் பின் வரும் பக்கங்களில் ஷரீஅத்தின் மூலாதாரங் களிலுள்ள வளத்துக்கும் விசாலத்துக்குமான உட் பொதிவுகளை விவரிக்கிறார்.

சட்டங்களை அகழ்ந்தெடுக்கும் திறனை தம் தோழர்களிடம் நபி(ஸல்) அவர்கள் வளர்த்தார்கள். அப்படி நபி(ஸல்) அவர்களால் வளர்க்கப்பட்ட தோழர்கள் பற்றி இமாம் ஷாஃபியீ(ரஹ்) கூறுகிறார்கள்.

“அவர்கள் நபி(ஸல்) அவர்களின் வழிமுறையை நம்மிடம் கொண்டு வந்து சேர்த்தவர்கள். அவ்வப்போது இறக்கப்பட்ட குர்ஆனின் வசனங்களை கண் கூடாகப் பார்த்தவர்கள். அவற்றின் உட்பொருள்களை நன்கறிந்தவர்கள். கல்வி, சிந்தனை, அதன்படி ஒழுகுதல், பகுப்பாய்வு, ஒப்பாய்வு மூலம் சட்டப் பிரிவுகளை உருவாக்குதல் போன்ற எல்லாத் துறைகளிலும் அவர்கள் நம்மை விட மேலானவர்கள் நம்முடைய கருத்துக்களை விட அவர்களின் கருத்துக்கள் மிக்க ஏற்புடையவை.”(பக்:45)

என்று மேற்கோள் காட்டும் நூலாசிரியர் அதன் பின் சட்டக் கல்வியின் வளர்ச்சி பற்றிக் கூறுகிறார். எந்த நாகரித்துக்கும் உரியவர்களாக இல்லாத அரபுக்கள், வெறும் மொழி வளமும் கவிதைத் திறனும் மட்டுமே பெற்றிருந்த அரபுக்கள் உலகத்தின் அறிவு வழிகாட்டிகளாக ஐரோப்பாவின் சட்ட வடிவமைப்பில் பாதிப்பை ஏற்படுத்துவோராக ஏற்றம் பெற்றதற்கு காரணம் நபி(ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வந்த உடன் அந்நகரை வெறும் அரசியல் தலைநகராக மட்டுமின்றி கல்வியின் கேந்திரமாகவும் ஆக்கினார்கள். மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்து வருவது கட்டாயக் கடமை என்றாக்கினார்கள் இதை நூலாசிரியர் (Centralization of Education) என்கிறார்.

ஹிஜ்ரி ஒன்பதாம் ஆண்டுக்குப் பின் ஹிஜ்ரத் இனி கட்டாயமில்லை, “லா ஹிஜ்ரத்த பஅதல் ஃபத்ஹ்” என்ற அறிவிப்பின் மூலம் முஸ்லிம்கள் அவரவர் வாழும் பகுதியிலேயே கல்வி கற்கலாம் என்ற திட்டத்தை DECENTRALIZATION of EDUCATION நடைமுறைப்படுத்தினார்கள்.

இப்படி கல்வியைப் பரவலாக்க தமது பாசறையில் உருவான நூற்று முப்பதுக்கும் மேற்பட்ட தோழர்களில் பலரை பல்வேறு பிராந்தியங்களுக்கும் அனுப்பி வைத்தார்கள் நபி(ஸல்) அவர்கள்.

நபி(ஸல்) அவர்களின் இறுதிக் காலத்தில் மதீனாவில் ஒன்பது பள்ளிவாசல்கள் இருந்தன. அவை வெறும் தொழுமிடமாக மட்டும் இல்லாமல் கல்விக் கூடங்களாகவும் விளங்கின.

இவ்வாறு நபி(ஸல்) அவர்கள் போட்ட அஸ்திவாரம் தான் ஐரோப்பாவின் சட்டாக்கத்துக்கு வழிகாட்டியிருக்கிறது. உலகின் பல்வேறு பாகங்களுக்கும் பரவிச் சென்ற நபி(ஸல்) அவர்களின் பாசறையில் உருவான மாணவர்கள், தாம் சென்ற இடங்களில், நாடுகளில் தமது ஆய்வின் முடிவின் படி மக்களை வழி நடத்தினர்.

கிளைச்சட்டங்களில் அறிஞர்களிடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகள் என்பவை நபித் தோழர்களின் காலத்திலேயே இருப்பவை தான். அதற்கான காரணங்கள் இஸ்லாத்தின் மூலாதாரங்களான குர்ஆனிலும், நபிமொழியிலுமே உள்ளன. அவ்வாறான கருத்து வேறுபாடுகள் ஒரு அருளேயன்றி வேறில்லை.

அறிஞர்களிடையே கருத்தில் வேறுபாடு இருப்பினும் இலக்கிய இலட்சியத்தில் ஒருமைப்பாடு தான் நிலவியது என்பது இந்நூலில் திட்டவட்டமாக நிரூபிக்கப் பட்டிருக்கிறது.

இமாம் மாலிக், இமாம் அபூ ஹனீஃபா, இமாம் ஷாபியீ, இமாம் அஹ்மத் ஆகிய

நாற்பெரும் இமாம்களின் வாழ்வையும் அவர்களின் அறிவுத்திறனையும் சேவைகளையும் தியாகங்களையும் சொல்லும் பகுதிகள் நூலுக்கு மெருகேற்றுகின்றன.

நான்கு மத்ஹபுகளில் ஏதேனுமொன்றைப் பின்பற்றி வணக்க வழிபாடுகளை அமைத்துக் கொள்வோர் இன்னொரு மத்ஹபின் சட்டங்களை தேவைக்கேற்ப பின்பற்றும் சூழ்நிலை ஏன் ஏற்படுகிறது என்பதை சான்றுகளுடன் விவரிக்கும் இந்நூல் பின்னர் இப்படி முடித்து வைக்கிறது இப்பிரச்சனையை;

“பொதுவாக ஒவ்வொரு மத்ஹபிலுமுள்ள சலுகைகளை அல்லது சாதகமான சட்டப்பிரிவுகளைப் தேர்ந்தெடுத்து நடைமுறைப்படுத்துவது தவறான அணுகுமுறை. ஏனென்றால் சட்டத்தை வடிவமைப்பதற்கான கோட்பாடுகள் மத்ஹபுக்கு மத்ஹபு மாறுபடும். அவ்வாறு முரண்பட்ட கோட்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட சட்டப்பிரிவுகளை ஒன்றாகத் தொகுப்பதோ அல்லது அவற்றை ஒன்று திரட்டி நடைமுறைப்படுத்துவதோ ஏற்புடையதல்ல. இதனால் இஸ்லாமியச் சட்டம் இறையச்சமற்ற சுய நலவாதிகளின் கைகளில் விளையாட்டுப் பொருளாகி விடும்.”(பக்:124)

மத்ஹபுகள் என்பவை புதிய சட்ட உருவாக்கம் அல்ல. அவை நபித்தோழர்களின் சட்ட உருவாக்க பணியின் நீட்சி தான் என்பதை எல்லோரும் புரியும் வண்ணம் கூறியிருப்பது நூலின் வெற்றி. ஒரு ஆழமான புரிதலுக்கு வழிகாட்டும் இந்நூலை அனைவரும் வாசிக்க வேண்டும்.


மஸ்லஹா (பொது நலன் கருதி உருவான சட்டப்பிரிவு) இஸ்திஸ்ஹாப், (தடை செய்யப்படாதவை அனுமதிக்கப்பட்டவை தான்), மகாசித்,(ஷரிஅத்தின் அடிப்படை நோக்கம்) கவாயித்(அடிப்படைக் கோட்பாடு) தக்னின்,(சட்ட நிர்ணயம்) ஆகிய புரிய வேண்டியவைகளை திறம்பட புரிய வைத்திருக்கிறார் நூலாசிரியர்.

நூலாசிரியர் நீண்ட நெடுங்காலம் பேராசிரியராகப் பணியாற்றியவர். முனைவர். தமிழகத்தின் மிக மூத்த மார்க்க அறிஞர்களில் ஒருவர். சென்னை வண்டலூரில் அமைந்துள்ள “புகாரிய்யா அரபுக் கல்லூரி” முதல்வர்.

மாணவர்களுக்கு பாடம் நடத்துவது போல வரிசையாக ஒவ்வொன்றையும் விளக்கியுள்ளார். இஸ்லாமியச் சட்டங்களை அதன் எதார்த்த வடிவத்தில் விளங்கிட விரும்புவோர் அனைவரும் வாசிக்க வேண்டிய நூல்.

குறிப்பாக இஸ்லாமிய அழைப்பாளர்கள், இளம் ஆலிம்கள், அரபுக் கல்லூரி மாணவர்கள், இயக்கவாதிகள் வாசிக்க வேண்டிய் நூல்.

**பேராசிரியர் இல்யாஸ் ரியாஜி.**


விலை: 30.ரூபாய்

8148129887



தொடர் 7

# முதல் சிலுவைப் போர் வெற்றி வீரர் சுல்தான் நூருத்தீன் ஸங்கி(ரஹ்)

முஸ்லிம்களிடமிருந்து ஃபிரான்குகளால் கைப்பற்றப்பட்ட ஆக்கிரமிக்கப் பட்ட நிலங்களை கொஞ்சம் கொஞ்சமாக மீட்கும் முயற்சியில் ஸங்கி (ரஹ்) அவர்கள் இறங்கினார். ரமளான் மாதம் ஹிஜ்ரி 522இல் அதாவது கி.பி 1128இல் அவர் முதலில் உமர் தீவையும் இர்பிலையும் வெற்றி கொண்டார்.

அதன் பின்னர் அவர் மொசூலுக்கு திரும்பினார். ஹிஜ்ரி 523ம் (கி.பி. 1129இல்) வருடம் ஜமாஅத்துல் அவ்வல் மாதத்தில் அவர் சின்ஜாரை நோக்கி படையெடுத்து அதை வென்றார்.

அதன் பின்னர் அவர் அல்கபூர் மற்றும் அர்ரஹ்பாவை நோக்கி தன் படைகளை திருப்பினார். அதனையும் வென்றார்.

அதற்கு பின் நசீபைனையும் வென்றார். இப்போது தன் படைகளை ஹர்ரானை நோக்கி செலுத்தினார்.

ஏற்கனவே எடெஸ்ஸா, சுரூஜ் மற்றும் அல்ஜசீராவின் நகரங்கள் ஃபிரான்குகளால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தன. ஹர்ரானின் மக்கள் ஃபிரான்குகளால் மிகவும் பாதிக்கப் பட்டிருந்தனர். அந்த மக்களின் மீது தாளொன்னா அடக்குமுறைகள் ஃபிரான்குகளால் அவிழ்த்து விடப்பட்டிருந்தன. அந்த மக்கள் ஸங்கி அவர்களிடம் இந்த கொடுமைக் காரர்களிடமிருந்து தங்களை விடுவிக்கும் படியும் தங்கள் நிலங்களை மீட்டுத்தரும் படியும் கோரிக்கை விட்டிருந்தனர்.

இந்த நேரத்தில் ஸங்கி ஒரு அறிவார்த்தமான முடிவை எடுத்தார். இந்த நேரத்தில் அந்த பகுதியில் இருந்த ஃபிரான்குகளிடம் போர் செய்யாமல் இருப்பதே அந்த முடிவு. அவர் அந்த பகுதியில் இருந்த ஃபிரான்குகளுடன் ஒரு சமாதான ஒப்பந்தத்தை மேற்கொண்டார். இதன் மூலம் லெவான்தின் மற்ற நகரங்களை அவரால் மீட்க முடிந்தது. அவருடைய முக்கிய நோக்கம் யூப்ரடீஸை கடந்து அலெப்போவையும் மற்ற நகரங்களையும் வெற்றி கொள்வதே.

அதன் படியே அவர் யூப்ரடீஸை கடந்து அலெப்போவை முற்றுகையிட்டு அதனை வென்றார். அங்கு தலைகீழாக இருந்த நிர்வாகத்தை சீர் செய்து விட்டு ஹமாவை நோக்கி படையெடுத்தார். அதனையும் வென்றார்.

அல்லாஹ் அவருக்கு வெற்றியை அள்ளி கொடுத்துக்கொண்டே இருந்தான். அதற்கு முக்கிய காரணமாக இருந்தது அவருடைய இறையச்சம். அவர் கிடைக்கப்பெற்ற எந்த வெற்றியையும் தன் தலைக்கு ஏற்றிக் கொண்டு ஆடாமல் மிக அடக்கமாகவும் அறிவார்த்தமாகவும் காய்களை நகர்த்தினார். எந்த இடத்தை முதலில் கைப்பற்ற வேண்டும் எந்த இடத்தை பின்னர் கைப்பற்ற வேண்டும், எங்கு போர் செய்யக்கூடாது, யாருடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும் என்பது போன்ற தெளிவான அறிவு அவருக்கு நிரம்பவே இருந்தது.

அவருடைய திட்டமிடல் மிகச் சீராக இருந்தது. கி.பி. 1129இல் அவர் ஹிம்ஸை வெற்றி கொண்டு அதன் ஆட்சியாளனை சிறைப் பிடித்தார்.

**ஸங்கிக்கு எதிராக பெரும் படை**

கி.பி.1130இல் ஒரு சில ஆட்சியாளர்கள் கைஃபா கோட்டையின் ஆட்சியாளருடன் சேர்ந்து ஸங்கிக்கு எதிராக ஒரு பெரும் படையை திரட்டினார்கள். இருபதாயிரத்திற்கும் மேற்பட்டோர் அந்த படையில் இருந்தனர். ஆனால் அவர்களால் ஸங்கியை வெற்றி கொள்ள முடியவில்லை. ஸங்கி அவர்களை சிதறடித்து விட்டார்.

இப்போது இமாதுத்தீன் ஸங்கி அவர்கள் தன் ஜிஹாதை முழுமைப்படுத்த விரும்பினார். அவர் அத்தரிப் கோட்டைக்கு எதிராக தன் போரை தொடங்கினார். அலெப்போ மக்களுக்கு மிகப்பெரிய ஆபத்தாக விளங்கி வந்தது அத்தரிப் கோட்டை.

ஃபிரான்குகள் இமாதுத்தீனுக்கு எதிராக மிகப்பெரிய போருக்கு ஆயத்தமானார்கள். ஆனால் அவர்களை எல்லாம் தூள்தூளாக்கி வெற்றி பெற்று வரலாறு படைத்தார் இமாதுத்தீன் ஸங்கி.

இந்த போரில் கொல்லப்பட்ட ஃபிரான்குகளின் எலும்புகள் நீண்ட நாட்களாக போர்களத்தில் அப்படியே கிடந்தன என கூறப்படுகிறது. அதை நீக்குவதற்கு கூட திராணியற்றவர்களாக பலஹீனமாவர்களாக மாறிப்போனார்கள் ஃபிரான்குகள்.

இந்த வெற்றியின் மூலம் அத்தரிப் கோட்டை இமாதுத்தீன் அவர்களின் கைவசம் வந்தது. இந்த வெற்றிகளெல்லாம் இமாதுத்தீன் அவர்களுக்கு சுலபமாக வந்துவிடவில்லை. ஒவ்வொரு வெற்றியும் நீண்ட சவாலுக்குப் பின்னர் வாழ்வா சாவா என்ற நிலைக்கு பின்னரே அவருக்கு கைவசப்பட்டது.

ஒவ்வொரு போர் களத்திலும் அவர் காலை எடுத்து வைப்பதற்கு முன்னர் இறைவனுடைய பாதையில் தான் வெட்டிக்கொல்லப்பட வேண்டும் என்று வேண்டாமல் இறைவனிடம் கையேந்தாமல் சென்றதில்லை. ஷஹீதுகளின் அந்தஸ்தை உணர்ந்தவர் இமாதுத்தீன் ஸங்கி அவர்கள்.

இதுவரை நடந்துவிட்ட போரில் அவர் உயிரை இழக்கவில்லை என்றாலும் இமாதுத்தீன் தரப்பிலும் பலர் இறை வழியை அடைந்து விட்டிருந்தனர். ஆம் அவர்கள் தன் இறைவனை சந்திக்க தன் இன்னுயிரை ஈந்து விட்டிருந்தனர். பலர் தன் கை, கால்கள் என உடலுறுப்புகளை இறைவன் பாதையில் தந்து விட்டிருந்தனர்.

எவர்கள் ஈமான் கொண்டு, தம் நாட்டை விட்டும் வெளியேறித் தம் செல்வங்களையும் உயிர்களையும் தியாகம் செய்து அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் செய்தார்களோ, அவர்கள் அல்லாஹ்விடம் பதவியால் மகத்தானவர்கள், மேலும் அவர்கள் தான் வெற்றியாளர்கள் (அல்குர்ஆன் 9:20) என்ற இறைவசனத்தை மெய்ப்படுத்தி கொண்டிருந்தனர்.

பலர் சோர்வுற்றிருந்தனர். இருப்பினும் ஸங்கி அவர்கள் தங்களுடைய இலட்சியத்தில்

இருந்து பின்வாங்கவில்லை. அவருடைய படைவீரர்களும் முடிந்தவரை அவருடன் தோள்கொடுத்தனர். இப்போதைக்கு ஸங்கியின் படை பலவீனமானப்படை. இருப்பினும் அவர்கள் பின்வாங்கவில்லை.

இப்போது அவர்கள் ஹரிம் கோட்டையை நோக்கி முன்னேறினார்கள். இப்போது தான் அல்லாஹ் இந்த மன உறுதிக்கு இலட்சியப்பிடிப்பிற்கு உதவி செய்தான். இப்போது ஃபிரான்குகள் பயந்து விட்டிருந்தார்கள். ஸங்கியை தாக்குப்பிடிப்பது கடினம் என்ற எண்ணம் அவர்கள் மனதில் உறுதியாக வியாபித்து விட்டிருந்தது. அந்த எண்ணத்தை அல்லாஹ் அவர்கள் மனதில் போட்டு விட்டான்.

மிச்ச மீதியிருந்த ஃபிரான்குகள் இமாதுத்தீனிடம் தூதனுப்பினார்கள். அவருடன் ஒப்பந்தம் செய்து கொள்ள விரும்பினார்கள். தங்களை இமாதுத்தீன் தாக்காமல் விட்டுவிட்டால் ஹரிம் கோட்டையின் வருமானத்தில் பாதியை அவருக்கு வரியாக செலுத்துவதாக கூறி உயிர்பிச்சை கேட்டார்கள்.

ஸங்கி அவர்கள் இறைவன் தனக்கு அளித்த இந்த வெற்றியை நன்றியுடன் ஏற்றுக் கொண்டார்கள். ஸங்கியின் போர்வீரர்கள் முந்தைய போரில் இருந்த அதே பலத்துடன் இல்லை என்பதே உண்மை. இந்த சூழ்நிலையில் தானாக வந்த இந்த வாய்ப்பை ஸங்கி பயன்படுத்தி கொண்டார்கள். அந்த சமாதான ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டார்கள். அவருடைய படை வீரர்களின் மனநிலையை கணித்தே ஸங்கி அவர்கள் இதனை செய்தார்கள். இதன் மூலம் லெவான்தில் இருந்த முஸ்லிம்கள் உற்சாக மனோ நிலையை பெற்றார்கள். பாதுகாப்பாக உணர்ந்தார்கள். ஸங்கி வெற்றி பெற்ற செய்தி அந்த பிரதேசம் முழுமைக்கும் பரவியது.

### ஃபிரான்குகளுக்கு எதிராக ஸங்கியின் ஜிஹாத்

கி.பி.1137இல் ரோமாபுரி மன்னன் திடீரென பெரும்படையுடன் கான்ஸ்டான்டின் நோபிளிலிருந்து கிளம்பினான். அவன் லெவான்தை நோக்கி படையெடுத்து வந்து ஒரு பெரும் பீதியை ஏற்படுத்தினான். அந்த நேரத்தில் ஸங்கி அவர்கள் ஃபிரான்குகளுடன் அவ்வப்போது நடந்து வந்த போர்களில் முனைப்போடு இருந்து வந்ததால் அவரால் மொசூலை விட்டு நகர முடியவில்லை.

இப்போது ரோம மன்னன் பஸாஹ் என்ற இடத்தை முற்றுகையிட்டு அதனை வெற்றி கொண்டான். அதில் இருந்த பல வீரர்களை கொன்று பலரை அடிமைப்படுத்தினான்.

அதன் பின்னர் அவன் ஹமாவுக்கு அருகில் இருந்த ஷைஸர் என்ற கோட்டையை முற்றுகையிட்டான். அந்த கோட்டையை சுற்றி கோட்டை மதில் சுவர்களை தகர்க்கக்கூடிய பதினெட்டு கவண் வண்டிகளை நிறுத்தினான். அந்த கோட்டையே ஆட்டம் கண்டு விட்டது.

அந்த கோட்டையின் ஆட்சியாளர் அபூஅல்அஸ்கர் சுல்தானிப்னு முன்கித் அவர்கள் இமாதுத்தீன் ஸங்கி அவர்களிடம் உதவி கோரி செய்தியனுப்பினார்.

### ஸங்கியின் போர் தந்திரம்

செய்தி கிடைத்தவுடன் ஸங்கி உடனடியாக ஹமாவுக்கு வந்து விட்டார். அவர் அங்கிருந்து தினமும் ஷைஸர் கோட்டைக்கு ரோமாபுரி மன்னன் பார்க்கும் வகையில் சென்று வந்து கொண்டிருந்தார். அதுமட்டுமன்றி யாராவது ரோமாபுரி வீரர்கள் பொருட்களை கொள்ளையடிக்கும் வேலையில் ஈடுபட்டால் அவர்களை தடுக்க தன் படைகளை அனுப்பி அவர்களை தூக்கி வரும்படி கட்டளையிட்டிருந்தார். இதையெல்லாம் ரோமாபுரி மன்னன் கவனித்துக் கொண்டிருந்தான்.

இப்போது ரோமர்களும் ஃபிரான்குகளும் ஷைஸர் கோட்டையின் கிழக்கு பகுதியில் ஒன்று கூடி இருந்தனர்.

அவர்களிடம் ஸங்கி தன் தூதுவரை அனுப்பினார். அவன் பின்வரும் செய்தியை அவர்களிடம் கூறினான், “நீங்கள் மலைகளை உங்களுக்கு அரணாக பெற்றுள்ளீர்கள். நீங்கள்

உண்மையில் வீரர்களாக இருந்தால் நீங்கள் பாலைவனத்திற்கு சென்று போர் செய்ய வருவீர்கள். அப்படி வந்து ஒருவேளை நீங்கள் வென்றால் நீங்கள் ஷைஸர் கோட்டையையும் இன்னும் பல நகரங்களையும் வெற்றி கொள்வீர்கள். ஒருவேளை நான் வென்றால் உங்கள் தீங்குகளில் இருந்து முஸ்லிம்களை விடுவிப்பேன்.”

இதை ஸங்கி ரோமர்களையும் ஃபிரான்குகளையும் பயமுறுத்த சொன்னாரே தவிர ரோமாபுரி மன்னனிடமும் ஃபிரான்குகளிடமும் இருந்த படைவீரர்களை ஒப்பிட்டால் அவரிடம் இருந்த படை மிகச்சிறியதே. ஸங்கியால் அவர்களை வெற்றி கொள்ள முடியாது என்பதே உண்மை.

ஃபிரான்குகள் இதனை சாதாரணமாக எடுத்துக்கொண்டனர். ரோமாபுரி மன்னரிடம் ஸங்கியை எதிர்த்து தாக்கும்படி கூறினர்.

ஆனால் ரோமாபுரி மன்னனோ இப்படி கூறிவிட்டான், “இவ்வளவு நிலங்களையும் தன் வசம் வைத்துள்ள ஸங்கியிடம் இந்த படை மட்டும் தான் உள்ளது என்று நினைக்கிறீர்களா? அவ்வளவு முட்டாள்களா நீங்கள்? இந்த சிறிய எண்ணிக்கையிலான படைகளை நம் கண் முன்னே காட்டி அவர் நமக்கு வலை விரிக்கிறார். இதன் மூலம் நாம் உற்சாகப்பட்டு அவரை பாலைவனத்தில் எதிர் கொள்ள வேண்டும் என்பதே அவர் திட்டம். அப்படி செய்தால் அவரின் மற்ற படைகளை நம் மீது பாய்ந்து நம்மை சின்னாபின்னமாக்கி விடும். நாம் உதவியற்றவர்களாக நிர்கதியாக நிற்க வேண்டியது தான்.”

**ஃபிரான்குகளுக்கும் ரோமர்களுக்கும் இடையே ஸங்கி உருவாக்கிய குழப்பம்**

இத்துடன் சும்மா இருக்கவில்லை ஸங்கி அவர்கள். இதே நேரத்தில் ஸங்கி லெவான்தில் இருந்த ஃபிரான்குகளிடம் ரோம மன்னனை குறித்து எச்சரிக்கை செய்தார். ஒருவேளை ரோமாபுரி மன்னன் இந்த கோட்டையை வென்று விட்டால் அவன் ஃபிரான்குகள் வசம் ஏற்கனவே உள்ள மற்ற கோட்டைகளையும் கைப்பற்ற முனைவான் என்று கூறி அவர்களை பயமுறுத்தினார். இது ஃபிரான்குகளிடையே குழப்பத்தை ஏற்படுத்தியது.

இதே சமயம் ஃபிரான்குகள் ஸங்கியுடன் நெருக்கமாக உள்ளார்கள் என்ற செய்தியை ஸங்கி பரப்பி விட்டார். இதனை ரோமாபுரி மன்னன் காதில் விழும்படி செய்தார். இதன் மூலம் ரோமாபுரி மன்னன் மனதில் குழப்பத்தை ஏற்படுத்தினார். ஃபிரான்குகள் ஸங்கிக்கு உதவி செய்வார்கள் என ரோமாபுரி மன்னனை நம்ப வைத்தார்.

இதன் மூலம் ரோமர்களும் ஃபிரான்குகளும் ஒருவருக்கு ஒருவர் அவரவர் மீது வைத்த நம்பிக்கையை இழந்தனர்.

எனவே ரோமாபுரி மன்னன் இருபத்தி நான்கு நாட்களுக்கு பின்னர் தன் முற்றுகையை கைவிட்டு ரோமாபுரி திரும்பினான். அப்படி திரும்பும் போது அவன் கோட்டை சுவர்களை தகர்க்கக்கூடிய கவண்களையும் அதன் உபகரணங்களையும் அப்படியே விட்டு விட்டு திரும்பினான்.

ஸங்கி அவர்களை துரத்தி சென்று அந்த படையில் கடைசியாக பின்னால் சென்று கொண்டிருந்த சில வீரர்களை கைது செய்தார். இப்படியாக ஸங்கியின் தந்திரம் மிகப்பெரிய வெற்றி பெற்றது.

**- அபூ அஃப்ரஹ்**

**வைகறை வெளிச்சம்**
**மாத இதழில்**
**சந்தாதாரராக இணைய**
**தொடர்பு கொள்ளவும்**
**+91 81481 29887**

# அண்ணலாரின் வாழ்வில் அதிகாரப் பரிமாணங்கள்

ஸஃபர் பங்காஷ்

அண்ணலார் எவ்வாறு அதிகாரத்தை கைப்பற்றினார்கள், எவ்வாறு அதைப் பிரயோகித்தார்கள் என்ற சீறாவின் அம்சம் முஸ்லிம்களால் முறையாக ஆய்வு செய்யப்படாத ஒன்றாகவே நீடிக்கிறது. நாம் சீறாவின் மென்னதிகாரம் (Soft-power), வல்லதிகாரம் (Hard-power) இரண்டு பற்றியும் ஒரு பார்வை செலுத்த வேண்டியுள்ளது.

ரபீயுல் அவ்வல் மாதத்தில் முஸ்லிம்கள் நபிகள் நாயகத்தின் பிறந்த தினத்தைக் கொண்டாடி மகிழ்கிறார்கள். இந்தக் கொண்டாட்டங்கள் பெரும்பாலும் நாத், நஷீத்களைக் கொண்டு மௌலூது பாடுவதாகவே அமைகின்றன. உரைகள் நிகழ்த்தப்பட்டாலும் கூட அவை அண்ணலார் நிகழ்த்திய அற்புதங்களை எடுத்துரைப்பவையாக மட்டும் சுருங்கிவிடுகின்றன. நபிகளாரின் வாழ்நாள் நீளப் போராட்டத்தின் ஒரு அம்சம் என்ற வகையில் சீறாவின் அதிகாரப் பரிமாணங்கள் (Power Dimensions) பற்றிய கலந்துரையாடல்கள் அவற்றில் ஒருபோதும் இடம்பெறுவதில்லை.

சமகால இஸ்லாமிய சிந்தனைக்கான நிறுவனத்தின் (ICIT) இயக்குநர் ஸஃபர் பங்காஷின் இக்கட்டுரை அதனுடன் தொடர்புடைய சில அம்சங்கள் பற்றி கலந்துரையாடுகிறது.

---

**பெருமானாரும் அரசியலும்**

*அல்லாஹ் (சுப்ஹானஹூ வ தஆலா) திருக்குர்ஆனில் நபிகள் பெருமானாரை (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) யுக இறுதி வரையான மனிதகுலம் முழுமைக்கும் ஓர் அழகிய முன்மாதிரி (33:21) என்று வருணித்திருக்கிறான்.*

*தெளிவான வழிகாட்டுதலையும், (இறைவல்லமை, அதிகாரம், ஆட்சி என்பவற்றில் அல்லாஹ்வுக்கு இணை கற்பிக்கும்) இணைவைப்பாளர்கள் (முஷ்ரிகீன்) எவ்வளவு வெறுத்த போதும் மற்றெல்லா அமைப்பு முறைகளையும் மிகைத்து மேலோங்குவதற்காக சத்திய தீனுல் இஸ்லாத்தையும் கொடுத்து அண்ணலாரை அனுப்பியுள்ளதாகவும் (9:33, 61:9) அல்லாஹ் கூறுகிறான்.*

*மேலும், முஸ்லிம்கள் வெற்றியாளர்களாகவும் மேலோங்கியவர்களாகவும் மாறும் போது மக்கள் இஸ்லாமியக் கூடாரத்திற்குள் கூட்டங் கூட்டமாக நுழைவார்கள் என்றும் அல்லாஹ் திருக்குர்ஆனில் (அல்-நஸ்ரு அத்தியாயம்) கூறுகிறான்.*

*ஆக இஸ்லாம் மேலோங்கியதாக மாற வேண்டும் என்பதும், அதன் பிறகே மக்கள் பெரும் எண்ணிக்கையில் அதன் குடையின் கீழ் வருவார்கள் என்பதும் அல்லாஹ்வின் பிரகடனமாகும். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், இஸ்லாத்தின் வெற்றிகரமான பரவலுக்கு இஸ்லாம் மேலோங்கியதாக மாறவேண்டியது அவசியமாகும்.*

எனினும், இன்றைய நிலைமை அவ்வாறில்லை. முஸ்லிம் அரசியல் சிந்தனையை ஐரோப்பியக் காலனித்துவம் ஆழமாகப் பாதித்திருக்கிறதெனத் தெரிகிறது. மேற்குலகைப் பொறுத்தவரை, மதத்தையும் அரசையும் பிரித்து நோக்கும் கருத்தாக்கம் அங்கு நன்கு நிலைபெற்றுவிட்டது. அதே விதமான கண்ணோட்டத்தை முஸ்லிம்கள் சிலரும் கொண்டிருக்கிறார்கள். இறைத் தூதர்களின் பாத்திரம் என்ன என்பதுவரை கூட இவ்வாதம் நீண்டு செல்கிறது.

அதாவது, "இறைத்தூதர்கள் இறைத்தூதை எடுத்துரைப்பதற்காக மட்டுமே அனுப்பப் பட்டார்கள்; அதனை அமலாக்குவது என்பது அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பணியின் ஒரு பகுதியல்ல" என்பதாக அந்த வாதம் நீளுகிறது.

'வல்லமை, அதிகாரம் என்பன அரச நிர்வாகத்துடன் சம்பந்தப்பட்ட விசயங்கள் என்பதால், அவை இறைத்ததூதர்களின் பொறுப்பு மண்டலத்திற்கு வெளியிலுள்ளவை' என்பதாக அந்த வாதம் நீளுகிறது.

இது ஒருபுறமிருக்க, பகுத்தறிவுவாதமே மனிதச் சாதனையின் அதியுச்சம் என்பதாக முன்னிறுத்தப்படுகிறது; இறைவழிகாட்டுதல் எனும் சுமையேற்றப்படாத பகுத்தறிவு வாதமே சமூகத்தைப் பாதித்திருக்கும் நோய்கள் அனைத்திற்குமான சர்வ லோக நிவாரணி என்றும் முன்வைக்கப்படுகிறது.

முஸ்லிம்கள் தாமாகவே ஒரு சீர்திருத்தத்திற்கு (Reformation) உள்ளாகி அரசியலிலிருந்து மதத்தை அப்புறப்படுத்தாத வரை அவர்கள் முன்னேற முடியாது என்றும் வாதிடப்படுகிறது. ஐரோப்பிய வரலாற்றில் திருச்சபை வகித்த தனித்துவமான பாத்திரமானது மேற்கத்தியச் சமூகத்தைப் பல வகையிலும் எதிர்மறையாகப் பாதித்திருக்கிறது என்பது உண்மைதான். ஆனால், முஸ்லிம்கள் மிகவும் வேறுபட்டவொரு வரலாற்று அனுபவத்தைக் கடந்துவந்துள்ளார்கள். திருச்சபையின் ஒடுக்குமுறை பாத்திரம் போன்ற எதுவும் முஸ்லிம்களின் வரலாற்றில் இல்லை.

'திருச்சபைக்கும் அரசுக்கும் இடையிலான பிரிவினை' எனும் இக்கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு, முஹம்மது நபி (ஸல்) மக்காவிலிருந்த போது ஒரு இறைத்தூதராக இருந்ததாகவும், மதீனாவில் ஒரு ஆட்சியாளராக மாறியதாகவும் மாண்ட்கோமெரி வாட் (Montgomery Watt) போன்ற மேற்கத்திய கீழைத்தேயவாதிகள் எழுதியிருக்கிறார்கள்.

இதன் பொருள் என்னவென்றால், எதுவரை நபியவர்கள்(ஸல்) அமலாக்கப் பொறிமுறை எதுவுமின்றி தூதைப் பிரச்சாரம் செய்து கொண்டு மட்டும் இருந்தார்களோ அதுவரை அவர்கள் ஒரு இறைத்தூதரின் பணியைச் செய்துவந்தார்கள்; எப்போது இஸ்லாத்தின் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வல்லமை மற்றும் அதிகாரத்தைக் கைப் பற்றினார்களோ, அப்போதே ஒரு வகையில் அவர்களின் தூதுத்துவப் பணி முடிவுக்கு வந்து விட்டது என்பதாகும். (நஸ்தக்ஃபிருல்லாஹ்– அல்லாஹ் நம்மை மன்னிப்பானாக!).

**அதிகாரம் என்பது என்ன?**

மேற்குலக கருத்தாக்கத்தின் படி பார்க்கின், அதிகாரம் என்பது இறைத்தூதர்களின் பாத்திரத்திலிருந்து விலக்கப்பட்ட ஒன்று. அவர்கள் நல்லறத்தைப் பரப்புவதற்காகவும், வணக்க வழிபாடுகளைப் போதிப்பதற்காகவும் மட்டுமே அனுப்பப்பட்டவர்கள்; அரச விவகாரங்களில் தலையிடுவது அவர்களின் பணியல்ல என்று கருதப்படுகிறது. இப்போது, அறமும் கூட ஒரு தனிமனிதத் தெரிவாகச் சுருக்கப்பட்டிருக்கிறது. அறநெறிப் பெறுமானங்கள் இனி இறைவழிகாட்டுதலில் ஊன்றியவையாக இருக்கப்போவதில்லை; மாறாக, 'தெரிவுச் சுதந்திரம்' என்ற பெயரில் செயற்படும் அழுத்தக் குழுக்களாலேயே (Pressure Groups) அவை இனி தீர்மானிக்கப்படும்.

முஸ்லிம்கள் மத்தியில் மற்றொரு பிழையான கருத்தாக்கமும் பொதுவாகக் காணப்படுகிறது: அதாவது, மக்காவிலிருந்த போது நபியவர்களிடம் வலிமையோ அதிகாரமோ இருக்கவில்லை; மதீனாவை அடைந்த பிறகே

அவர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றினார்கள் என்பதாக. இது அன்றிருந்த சூழ்நிலை பற்றிய துல்லியமான வாசிப்பு அல்ல. நபியவர்கள் மக்காவிலிருந்த போது முற்றிலும் அதிகாரமற்றவராகவும் இல்லை; அதே போல், மதீனாவை அடைந்தவுடனேயே ஒட்டு மொத்த அதிகாரத்தைக் கைப்பற்றி விடவும் இல்லை. நபியவர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றியது பற்றி கலந்துரையாடுவதற்கு முன்னால், அதிகாரம் என்றால் என்னவென்பதை வரைவிலக்கணம் செய்ய வேண்டியுள்ளது.

அதிகாரம் என்றால் என்னவென்பதை மேற்கத்தியக் கோட்பாட்டியலாளர்கள் இவ்வாறு வரைவிலக்கணம் செய்கிறார்கள்:

“அதிகாரம் என்பது நீங்கள் விரும்பும் விளைவை ஏற்படுத்துவதற்கும், அவசியப் பட்டால் அதற்காக மற்றவர்களின் நடத்தையை மாற்றி அமைப்பதற்குமான சக்தியாகும்” (ஜோசப் நியே, அமெரிக்க அதிகாரத்தின் முரணுண்மை, 2002).

“அதிகாரம் என்பது மக்கள் திரள், ஆட்சிப்பரப்பு, இயற்கை வளம், பொருளாதார வலிமை, இராணுவ சக்தி, அரசியல் நிலைத்தன்மை போன்ற குறிப்பிட்ட சில வளங்களைப் பெற்றிருப்பதாகும்” என்று அதிகாரம் பற்றிய மற்றொரு வரைவிலக்கணம் கூறுகிறது. இவை முழுக்கவும் சடவாத வரைவிலக்கணங்கள்; இங்கு சமய அல்லது ஆன்மீக விழுமியங்களுக்கு பாத்திரமெதுவும் இல்லை.

ஆனால், அதிகாரம் என்றால் என்ன என்பது பற்றி முஸ்லிம்களிடம் மிகவும் மாறு பட்டதொரு கண்ணோட்டம் இருக்கிறது. டாக்டர் கலீம் சித்தீக்கி இவ்வாறு கூறுகிறார்:

“உண்மையான அதிகாரம் என்பது விசுவாசம், நம்பிக்கை, மனநிறைவு, பற்றுறுதி, பொறுப்புணர்வு, எல்லாம் வல்லவனுக்கு மறுமையில் பதில்கூறக் கடமைப்பட்டவர்கள் நாம் என்கிற உணர்வு ஆகியவற்றைப் பெற்றிருப்பதிலேயே இருக்கிறது” (இஸ்லாமியப் புரட்சியின் படிநிலைகள், 1996).

விசுவாசம், அல்லாஹ்வுடைய வல்லமையின் பிரசன்னத்தை உணர்ந்து பணிதல், பற்றுறுதி, பொறுப்புடைமை, பதில்கூறக் கடமைப்பட்ட உணர்வு ஆகிய கருத்தாக்கங்களை நாம் மீளாய்வு செய்யும்போதே அதிகாரத்தைக் கைப்பற்றுவதன் மீதும், அதைப் பிரயோகிப்பதன் மீதும் அவை கொண்டுள்ள உண்மைத் தாக்கத்தை நம்மால் புரிந்துகொள்ள முடியும்.

அதிகார ஏற்றத்தாழ்வு என்ற ஒன்றே இருக்க முடியாதென இஸ்லாம் கூறவில்லை; மாறாக, பலவீனமான மக்களை ஒடுக்கவும் சுரண்டவுமான வரம்பற்றதொரு சுதந்திரம் அதிகாரம் படைத்தோரிடம் இருக்கக்கூடாது என்ற வகையில், அது அதிகாரப் பிரயோகத்தை நன்கு வரைவிலக்கணம் செய்யப்பட்ட வரம்புகளுக்கு உள்ளாக முறைப்படுத்துகிறது. எனினும், இதற்கு நேர்மாறான சூழ்நிலையே இன்று உலகில் மிகப் பொதுவாக நிலவுகிறது.

இராணுவ வலிமை, ஆட்சிப்பரப்பு, செல்வ வளம் என்பவற்றின் அடிப்படையில் அமைந்த மேற்கத்திய வரையறை அரைகுறையானது என்பது பல சமயங்களில் நிரூபணமாகியுள்ளது.

எடுத்துக்காட்டாக யு.எஸ்.ஏ. உலகிலேயே மிகப் பெரிய இராணுவ பட்ஜெட்டைக் கொண்ட நாடு. அதனிடம் ஆயிரக்கணக்கான போர்விமானங்கள், கடல்களில் சுற்றியலையும் நூற்றுக்கணக்கான போர்க் கப்பல்கள், பல பத்தாயிரக் கணக்கான டாங்குகள், ஏவுகணைகள், ஏன் அணுவாயுதங்கள் கூட இருக்கின்றன. இவையெல்லாம் இருந்தும் கூட, வெறும் எளியவகை ஆயுதங்களை மட்டுமே வைத்திருக்கும் சாதாரண ஆஃப்கன் போராளிக் குழுக்களால் இன்று அது தோற்கடிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவால் தனது நூறுகோடி மக்கள் தொகையில் அடிமட்ட ஏழைகளாகவுள்ள நாற்பதுகோடி பேருக்கு மிக அடிப்படையான வசதிகளைக் கூட செய்துதர முடியாமலிருப்பது, அதிகாரம் பற்றிய மேற்கத்திய வரைவிலக்கணத்தின் போதாமைக்கு மற்றொரு எடுத்துக்காட்டு.

சிறு குழுவான ஹிஸ்புல்லாஹ் போராளிகளின் கரங்களில் இஸ்ரேல் அடைந்த தோல்வி (ஒரு முறையல்ல, இரண்டு முறை) , அதிகாரம் பற்றிய சடவாத வரைவிலக்கணத்தின் பலவீனத்தை மீண்டும் ஒருமுறை அம்பலப்படுத்தியிருக்கிறது.

## அதிகாரத்தின் இரு வகைகள்

எனவே, அதிகாரம் என்றால் என்னவென்பதை நாம் இன்னும் துல்லியமாக வரையறை செய்ய வேண்டும். அதிகாரத்தில் இருவகைகள் உண்டு: (உணர்வூட்டுவதற்கான) மென்னதிகாரம் மற்றும் (நிர்பந்திப்பதற்கான) வல்லதிகாரம். இவ்விரண்டும் ஒன்றையொன்று பூரணமாக்கும் வகையில் தத்தமக்கே உரிய தனித்துவப் பாத்திரங்களைக் கொண்டுள்ளன.

மென்னதிகாரம் (Soft-Power) என்பதை 'கோரிக்கை விடுப்பதற்கும், நியாயம் கற்பிப்பதற்கும், இணக்கப்படுத்துவதற்கும், வசீகரிப்பதற்கும், செல்வாக்குச் செலுத்துவதற்கும், தார்மிக ரீதியில் ஆணையிடுவதற்கும் தேவையான பலம்' என்று வரைவிலக்கணம் செய்யலாம். குறிப்பிட்டதொரு கண்ணோட்டத்தின் பக்கம் வரவேண்டுமெனப் பிறரைக் கோருவதில் பொதுவாகப் பலவந்தம் சம்பந்தப்படுவதில்லை; அல்லது மிகச் சிறிதளவே சம்பந்தப்படுகிறது. எனினும், சமகால உலகில் அது கூட எப்போதும் அவ்விதம் இருப்பதில்லை என்பது தனிக்கதை.

மனிதர்கள் அனைவரிடமும் ஒரு குறிப்பிட்டளவு மென்னதிகாரமும் வல்லதிகாரமும் இருக்கின்றன. அவை வெவ்வேறு விதங்களில் வெளிப்படுகின்றன. உள்ளத்தை நெகிழவைக்கும் தமது கெஞ்சல்கள் மூலம் குழந்தைகள் தங்கள் பெற்றோர் மீது ஒருவித மென்னதிகாரத்தைப் பிரயோகிக்கிறார்கள்; கணவன்-மனைவி உறவுகளில் மென்னதிகாரம்-வல்லதிகாரம் இரண்டும் பிரயோகிக்கப்படுகின்றன.

அதேபோல், முதலாளிகள் தங்களின் தொழிலாளர்கள் மீது இருவகை அதிகாரங்களையும் பிரயோகிக்கிறார்கள். தொழிலாளர்களிடம் கடமையுணர்வை விதைப்பதன் மூலம் அவர்களை ஊக்கப்படுத்துவதற்கு மென்னதிகாரம் பிரயோகிக்கப்படுகிறது; பணிநீக்க மிரட்டல் என்பது வல்லதிகார வகையின் கீழ் வருகிறது. கண்ணியமான ஊதியம் அல்லது பணிச்சூழல் அல்லது இரண்டையும் பெறுவதற்காக வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவதாக அச்சுறுத்துவன் மூலம் தொழிலாளர்களும் கூட வல்லதிகாரத்தைப் பிரயோகிக்க முடியும்.

அரசியல் களத்தைப் பொறுத்தவரை, அதிகாரத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற தணியாத தாகத்தில் (அல்லது பொதுவாக அறியப்படுகின்றவாறு, "அதிகாரத்திற்கு வருவதற்காக") இவ்விரு வகை அதிகாரங்களும் பயன்படுத்தப்படுகின்றன; அவ்வாறு அதிகாரத்திற்கு வருவதன் மூலம் கிடைக்கிற வளங்களைப் பயன்படுத்தி மேலும் அதிகாரத்தைப் பெருக்கிக் கொள்வதே பொதுவாக அவர்களின் நோக்கமாக இருக்கிறது.

மென்னதிகாரம் என்பது செல்வாக்கு (Influence) என்பதைக் காட்டிலும் அதிகமானது; அது மக்களை உணர்வூட்டி, வசீகரித்து, இணங்கச் செய்வதற்கான ஒரு திறன். மேலும் அது பழைய வழக்கங்களையும் மரபுகளையும் விட்டொழித்து புதியவற்றை விருத்தி செய்வதற்கு வழிகோலுகிறது.

ஒரு தனிமனிதரின் குடும்பமும் நண்பர்களும் அவர் பற்றிப்பிடித்துள்ள சிந்தாந்தத்திற்கு எதிரானதொரு சித்தாந்தத்தைக் கொண்டிருப்பின், அவர் அவர்களை விட்டு தன்னைத் துண்டித்துக் கொள்ளும்படி செய்வதற்கும் கூட இந்த மென்னதிகாரம் திறன்படைத்ததாக இருக்கிறது. புதிய விழுமிய அமைப்பு முன்னிறுத்துகின்ற இச்சித்தாந்தம், இயல்பாகவே புதிய உறவுப் பிணைப்புகளின் தோற்றத்திற்கும் வழிகோலுகிறது.

மறுபுறம் (நிர்பந்திப்பதற்கான) வல்லதிகாரம் (Hard-power) என்பது மக்கள் தமது நடத்தையை மாற்றிக்கொள்ளும் படியும், குறிப்பிட்ட சில விதிமுறைகளுக்குக் கீழ்ப்படியும் படியும்,

குறிப்பிட்ட சில பெறுமானங்களை ஏற்றுக்கொள்ளும்படியும் -அவர்கள் அவற்றை விரும்பாவிடினும், அவற்றுடன் உடன்படாவிடினும் சரியே - அவர்களை நிர்ப்பந்திப்பதற்கான ஒரு திறனாகும்.

சட்டங்களை இயற்றி நடைமுறைப் படுத்துவதற்கும், அந்தச் சட்டங்களை மீறுவோரைத் தண்டிப்பதற்கும், தனது நலன்களை எதிர்ப்பவர்களுக்கு எதிராகப் போரிடுவதற்காக இராணுவ பலத்தைப் பயன்படுத்துவதற்குமான ஒரு அதிகாரத்திலிருந்தே இது வருகின்றது. பொருளாதார-அரசியல் அதிகாரங்களும், அச்சுறுத்தும் விதமான அவற்றின் பிரயோகமும் வல்லதிகாரச் செயற்பாட்டின் ஒரு பகுதியாக இருக்கின்றன.

இராணுவ பலத்தை மிகுதியாகப் பெற்றிருக்கும் போது, பிறரை நேரடியாகவோ மறைமுகமாகவோ கீழடக்கி மேலோங்க முடியும் என்ற உணர்வையும் அது சிலரிடம் உண்டாக்குகிறது. எனினும், ஒத்திசைவான மென்னதிகாரம் இல்லாத எந்தவொரு வல்லதிகாரமும் நெடுநாட்களுக்கு நீடிக்க முடியாது. நிச்சயமாக அது கொடுங்கோன்மைக்கும் ஒடுக்குமுறைக்குமே வழிவகுக்கும்; எனவே விரைவிலேயே மக்கள் அதற்கெதிராகக் கிளர்ச்சியில் இறங்குவார்கள்!

### நபிவாழ்வில் இரு வகை அதிகாரங்கள்

அதேவேளை எந்தவொரு மென்னதிகாரமும், அது எத்துணை வலுவான கொள்கைகளின் மீதமைந்ததாக இருப்பினும், வினைத்திறன் மிக்கதாக மாறவேண்டுமென்றால் அதற்கொரு வல்லதிகாரம் தேவைப்படுகிறது.

அல்லாஹ்வின் தூதர்கள் அனைவரின் பாத்திரமும் இந்த வகைப்பாட்டின் கீழேயே வருகின்றது. அவர்களிடம் ஒருவித "மென்னதிகாரம்" இருந்தது. அதாவது, அவர்களின் தூது இறைவனால் அருளப்பட்டதாக, சட்டப்பூர்வமானதாக இருந்தது. தெள்ளத் தெளிவுடன் இரத்தினச் சுருக்கமாக அது மக்களிடம் முன்வைக்கப்பட்டது.

ஆயினும், பெரும்பாலான மக்கள் அதை ஏற்கவில்லை அல்லது அதை ஏற்பதிலிருந்து தடுக்கப்பட்டார்கள். எனவே, பெரும்பாலான இறைத்தூதர்கள் தம்முடைய தூதைப் பிரச்சாரம் செய்துவிட்டு இவ்வுலகை விட்டுப் பிரிந்து விட்டார்கள்.

வேறு சில இறைத்தூதர்களோ தமது சொந்த மக்களாலேயே படுகொலை செய்யப் பட்டார்கள். அவர்களின் "மென்னதிகாரம்" "வல்லதிகாரமாக" மாற்றப்படவில்லை. அதாவது, அவர்களின் சமூகங்களில் இறைவனால் விதிக்கப்பட்ட சட்டங்கள் அமலாக்கம் செய்யப் படவில்லை. வெகுசில எடுத்துக்காட்டுகளில் மட்டுமே இறைத்தூதர்களின் 'மென்னதிகாரம்' 'வல்லதிகாரமாக' நிலைமாற்றப்பட்டது. அதாவது, அவர்கள் இப்புவியில் அல்லாஹ்வின் சட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கான அதிகாரத்தை வென்றெடுத்தார்கள்.

அல்லாஹ்விடமிருந்து வேத வெளிப்பாட்டைப் பெறத்துவங்குமுன்பே கூட அண்ணல் நபிகளாரிடம் ஒரு குறிப்பிட்டளவு மென்னதிகாரம் இருந்தது. நேர்மை, நம்பகத்தன்மை, வசீகரிக்கும் ஆளுமை ஆகியவை அவர்களிடம் இருந்தன.

மக்காவில் அல்-அமீன் (நம்பிக்கைக்கு உரியவர்) என்று பிரபலமாக அறியப்படுபவராக இருந்தார்கள். மேலும், வெற்றிகரமான ஒரு வணிகர்-வியாபாரி என்ற நன்மதிப்பையும் ஈட்டியிருந்தார்கள். அதிகாரத்தைப் பெறவேண்டுமென்ற தனிப்பட்ட குறிக்கோள் மட்டும் இருந்திருப்பின், அதற்காக மக்களை அணிதிரட்டப் பயன்பட்டிருக்கக் கூடிய தகைமைகள் பலவும் அவர்களிடம் இருக்கவே செய்தன.

ஆனால், அவர்கள் செய்ததென்னவோ அதற்கு நேரெதிராக இருந்தது. (தூதுத்துவம் வழங்கப்படுவதற்கு முன்பு) நபியவர்கள் அடிக்கடி சமூகத்திலிருந்தி விலகித் தனிமையை நாடிச் செல்பவராகவும், ரமழான் மாதத்தில் தியானத்திலும் சிந்தனையிலும் ஈடுபடுவதற்காக ஹிரா குகையில் தஞ்சமடைபவராகவும் இருந்தார்கள். இதே ஹிரா குகையில் வைத்துத்தான் ஓர் ரமழான்

இரவில் அல்லாஹ்வின் புறத்திலிருந்த வந்த முதல் வேதவெளிப்பாட்டை நபியவர்கள் பெற்றார்கள். இவ்வாறு, வானுலக அனுமதியுடன் அவருக்கு இந்தத் தூது (அல்லது மென்னதிகாரம்) வழங்கப்பட்டது.

இதிலிருந்து மூன்றாண்டுகள் நபியவர்களின் உறவினர்கள் மற்றும் நெருங்கிய நண்பர்களுக்கு மட்டுமே இந்தத் தூது எடுத்துரைக்கப்பட்டது. நபிகளார் தனது தூதைப் பகிரங்கமாக எடுத்துச் சென்றபோதுதான், ஏற்கனவே சிலர் இஸ்லாத்தை ஏற்றிருக்கிறார்கள் என்பது வெளியே தெரியவந்தபோதுதான் எதிர்ப்பு கிளம்பியது.

நாம் இங்கு இருவகை அதிகாரங்களுக்கு இடையில் தோன்றும் மோதலுக்கான ஒரு முதல்தர முன்மாதிரியைப் பார்க்கிறோம். அது இறைத்தூதரின் மென்னதிகாரத்திற்கு எதிராகக் கிளம்பிய கோத்திரத் தலைவர்களின் வல்லதிகாரம். மக்கத்துத் தலைவர்கள் கட்டவிழ்த்துவிட்ட ஒடுக்குமுறையையும் மீறி மக்கள் தொடர்ச்சியாக இஸ்லாத்தின் பால் கவரப்பட்டார்கள்.

விரைவிலேயே நபிகளாரைச் சுற்றிக் கணிசமான எண்ணிக்கையில் பின்பற்றாளர்கள் திரண்டார்கள். அவர்களில் பெரும்பாலானவர்கள் பலவீனமான, ஒடுக்கப்பட்ட வகுப்பினராகவே இருந்தார்கள் என்றாலும், அங்கு மக்கத்துப் பிரபுக்குலத்தைச் சேர்ந்தவர்களும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் இருக்கவே செய்தார்கள். இது ஆளும்வர்க்க மேட்டுக்குடிகளின் அணிகளின் மத்தியில் ஒரு பெரிய விரிசலை உண்டுபண்ணியது.

சிறு எண்ணிக்கையிலான இந்தப் பின்பற்றாளர்களைக் கொண்டே, நபியவர்கள் அந்தச் சமூகத்தில் நிலைபெற்றிருந்த ஒழுங்குக்கு எதிராக ஓரளவு அதிகாரத்தை வென்றெடுத்தார்கள். தூதிலிருந்து வந்த தார்மீக அதிகாரத்தைப் பிரயோகித்து நபிகளார் இதைச் சாதித்தார்கள்.

வேதவெளிப்பாட்டின் அடிப்படையில் அமைந்த ஒரு விழுமியத் தொகுதியை முஸ்லிம்களுக்கு வழங்கியதன் மூலம் சமூகத்தில் புதிய விதிமுறைகளை இஸ்லாம் நிறுவியது. “மென்னதிகாரத்தை” பிரயோகிக் காமல் நபியவர்களால் இதைச் செய்திருக்க முடியாது என்பது தெளிவு.

கொடுமைகளிலிருந்து தப்பிப்பதற்காக முஸ்லிம்களின் ஒரு குழுவை அபிசீனியாவுக்குப் புலம்பெயர அனுமதித்தபோது, நபியவர்களின் இம்மென்னதிகாரம் மேலும் வினைத் திறத்துடன் வெளிப்பட்டது. இவ்வாறு புலம் பெயர்ந்தவர்களில் மக்காவின் பிரபுக்குலத்தைச் சேர்ந்த பலரும் இருந்தார்கள். எடுத்துக் காட்டாக, மக்காவின் முன்னணித் தலைவர்களில் ஒருவரான அபூ ஸுஃப்யானின் மகளார் உம்மு ஹபீபாவையும், பனூ உமையா கிளையின் மற்றொரு முக்கியப் பிரமுகரான உஸ்மான் இப்னு அஃப்பானையும் கூறலாம்.

அபிசீனியப் புலப்பெயர்வு இரண்டு விசயங்களை நடைமுறையில் புலப்படுத்தியது. ஒன்று, நபியவர்கள் பெற்றிருந்த மென்னதிகாரம். மற்றது, தன்னுடைய ஆணை களைப் பின்பற்றுமாறு பின்பற்றாளர்களை இணங்கச் செய்வதற்கான அவர்களின் திறன். இதில் பலவந்தமோ, ‘கீழ்ப்படியாவிடில் தண்டிக்கப்படுவீர்கள்’ என்பது போன்ற அச்சுறுத்தலோ சம்பந்தப் படவில்லை.

அபிசீனியாவுக்குப் புலம்பெயர்ந்த அந்தக் குழுவினர்கள் தங்களின் உற்றார்-உறவினர்களில் பெரும்பாலானவர்களை விட்டுப்பிரிந்து செல்லவேண்டியிருந்தது. இப்புலப்பெயர்வின் காரணமாக, பிரபுக்குலக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தங்களின் பெற்றோர்கள் தங்களுக்கு ஏற்படுத்தித் தந்திருந்த சுகபோக வாழ்க்கையைத் துறந்து, இனமறியாதவொரு நாட்டில் நிச்சயமற்றதொரு எதிர்காலத்தை நோக்கிச் செல்ல வேண்டியிருந்தது. எனினும், சுமார் நூறு பேர்களைக் கொண்ட அந்த முதற் குழுவிலிருந்த முஸ்லிம்கள் அனைவரும் நபிகளாரின் ஆணையைத் தயக்கமேதுமின்றி ஏற்றார்கள். (அபிசீனியப் புலப்பெயர்வைப் போன்றே)

இரண்டாவதாக, தனது தூதுத்துவப் பணியின் பத்தாமாண்டில் நபிகளார் மேற்கொண்ட தாயிஃப் பயணமும் கூட இஸ்லாத்திற்கு ஒரு ஆட்சிப்பரப்பை வென்றெடுப்பதை நோக்கமாகக் கொண்டதுதான். தாயிஃப் அனுபவம் மிகவும் வேதனையான ஒன்றாக அமைந்துபோனது என்றாலும் (நபியவர்கள் அந்நகர மக்களால் அவமானப்படுத்தப்பட்டு தாக்குதலுக்கு ஆளானார்கள்), இஸ்லாத்திற்கு பாதுகாப்பான தளத்தை வென்றெடுப்பதற்கான ஒரு முயற்சியாக அது இருந்தது என்பதே உண்மை.

### வல்லதிகாரத்தின் முக்கியத்துவம்

இஸ்லாத்தின் தூதைப் பிரச்சாரம் செய்வதில் நபிகளார் மக்காவில் பதிமூன்று ஆண்டுகளைச் செலவிட்டார்கள். அன்னார் அம்மக்களிடையே அவர்களின் வாழ்வுநெடுக நன்கு அறிமுகமான ஒருவராக இருந்தார்கள்; அன்னாரின் நேர்மையையும் நம்பகத்தன்மையையும் மக்காவாசிகள் நன்கு அறிந்திருந்தார்கள். இருந்தபோதும், அம்மக்கள் நபியவர்களின் தூதை ஏற்கமறுத்து விட்டார்கள்.

அந்தப் பதிமூன்று ஆண்டுகளில் மக்காவின் சுமார் 5000 பேரில் வெறுமனே சில நூறு பேர் மட்டுமே இஸ்லாத்தை ஏற்றார்கள். மக்காவில் இருந்தபோது நபிகளாரிடம் மென்னதிகாரம் மட்டுமே இருந்தது. இஸ்லாத்தின் தூது பரவுவதைத் தடுப்பதற்காக குறைஷிகள் தமது வல்லதிகாரத்தைப் பயன்படுத்தி தம்மால் இயன்ற சகல முயற்சிகளையும் மேற் கொண்டார்கள்.

குறைஷிகள் நபியவர்களுடன் ஒரு நேர்மையான திறந்த விவாதத்தை மேற்கொண்டிருக்க முடியும்தான்; ஆனால், அத்தகையவொரு போக்கை அவர்கள் கைக்கொள்ளவில்லை. அன்னார் தமது தூதைப் பகிரங்கமாகப் பிரச்சாரம் செய்வதை அனுமதித்தால் பெரும்பாலான மக்கள் அதை ஏற்றுக்கொண்டு விடுவார்கள் என்பதையும், அதனால் தமது அதிகாரத்தையும் செல்வாக்கையும் இழக்கநேரிடும் என்பதையும் குறைஷிகள் அறிந்திருந்தார்கள்.

எனவே, அவர்கள் அந்தத் தூதினை நசுக்க முயன்றார்கள். இறுதியில் நபியவர்களைக் கொல்லவும் சதிசெய்தார்கள். இவ்வாறு நபிகள் பெருமானார் பெற்றிருந்த மென்னதிகாரம் குறைஷிகளின் வல்லதிகாரத்துடன் மோத நேர்ந்தது. இது பொதுவானதொரு அனுபவம். வல்லதிகாரத்தைப் பெற்றிருப்போர் மென்னதிகாரத்தைப் பெற்றிருப்போரை வன்முறையைக் கொண்டும் அச்சுறுத்தல்களைக் கொண்டும் அழித்திடவே எப்போதும் முயல்வார்கள்.

நபிகளார் அல்லாஹ்விடமிருந்து மென்னதிகாரத்தைப் பெற்றிருந்த போதும் கூட, அவர்களால் பெரும் எண்ணிக்கையில் பின்பற்றாளர்களை வென்றெடுக்க முடியவில்லை என்பதைத்தான் மக்காவில் அன்னாருக்கு வாய்த்த அனுபவம் காட்டி நிற்கிறது. எனவே, அல்லாஹ்வின் எதிரிகளுடைய வல்லதிகாரத்தை எதிர்த்து முறியடிப்பதற்கு மென்னதிகாரம் மட்டுமே (அது மிக அவசியமான ஒன்றுதான் என்றாலும்) போதுமானதாக மாட்டாது.

முஸ்லிம்கள் அக்கிரமமாக நடந்துகொள்ள வேண்டுமென்று இதற்குப் பொருளில்லை; ஆனால், அல்லாஹ்வின் மீது பற்றுறுதி கொண்டோரின் வல்லதிகாரத்தைக் கொண்டு நம்முடைய எதிரிகளின் கொடுங்கோன்மையை எதிர்கொள்வதைத் தவிர அது நமக்கு வேறு தெரிவெதையும் விட்டுவைப்பதில்லை. மென்னதிகாரத்தைப் பெற்றிருக்க வேண்டியது மிக அவசியமானதொரு முன் நிபந்தனை தான். எனினும், ஒடுக்குமுறையாளர்களின் வல்லதிகாரத்தை முறியடிப்பதற்கு அது மட்டுமே போதுமானது அல்ல. தூதின் மென்னதிகாரத்தால் செறிவூட்டப்பட்ட, பற்றுறுதி கொண்ட முஸ்லிம்களின் வல்லதிகாரத்தைக் கொண்டே அறுதியில் அது சவாலுக்குள்ளாக்கப்பட வேண்டியுள்ளது.

### ஜாஹிலிய்ய அதிகார அமைப்பில் பங்கெடுக்கலாமா?

மக்காவிலிருந்த காலத்தில், குறைஷிகளுடன் சமரசம் செய்துகொண்டால் அதற்கு விலையாக நபிகளாருக்கு அதிகாரத்தில் பங்கு

தருவதாக ஒரு பேரம் முன்வைக்கப்பட்டது. நபியவர்கள் அதனை மிகத் திட்டவட்டமாக நிராகரித்துவிட்டார்கள். உண்மையில், நடந்துகொண்டிருப்பது ஒரு போராட்டம்-மோதல் என்பதையும், அறுதியில் அதில் இஸ்லாமே வெல்லும் என்பதையும் அவர்களின் மறுமொழி உள்ளடக்கியிருந்தது.

குறைஷிகளிடமிருந்து இச்செய்தியைக் கொண்டுவந்த தனது பாசத்திற்குரிய சிறிய தந்தை அபூதாலிபிடம் நபிகளார் இவ்வாறு கூறினார்கள்: "அவர்கள் எனது வலக்கரத்தில் சூரியனையும் இடக்கரத்தில் சந்திரனையும் வைத்தாலும் கூட, அல்லாஹ் என்னிடம் பொறுப்பளித்திருக்கும் இத்தூதை எடுத்துரைப்பதை நான் நிறுத்தப் போவதில்லை. ஒன்று இஸ்லாம் மேலோங்க வேண்டும்; அல்லது அதை மேலோங்கச் செய்வதற்கான செயல்முறையில் நான் அழிந்துபோக வேண்டும்."

சந்தர்ப்பவாத அரசியலின் நோக்கில் பார்த்திருந்தால், குறைஷிகள் முன்வைத்த பேரம் மிகக் கவர்ச்சிகரமான ஒன்றாக தோன்றியிருக்க முடியும். நபியவர்கள் அதனை ஏற்பதன் மூலம் குறைஷிகளின் தலைவராக மாறி, இஸ்லாத்தை மேலிருந்து பிரச்சாரம் செய்தும் இருக்கலாம். ஆனால், அன்னார் அதைச் செய்யவில்லை. அவர்கள் மட்டும் அவ்வாறு செய்திருந்தால் அதிகாரத்தைக் கைப்பற்ற முடிந்திருக்கும் என்பதுடன், தனது பின்பற்றாளர்கள் அனுபவித்து வந்த பல்லாண்டுக் கொடுமைகளிலிருந்தும் அவர்களைக் காப்பாற்ற முடிந்திருக்கும் என்று சிலர் வாதிடலாம்.

உண்மையுள்ளம் படைத்த வெகுளியான முஸ்லிம்கள் பலரிடம் இன்றும் கூட இத்தகைய பிழையான சிந்தனை காணப்படுகிறது.

குறைஷிகளுடன் செய்து கொள்ளப்படும் சமரசம் தனது தூதை நீர்த்துப்போகச் செய்துவிடும் என்பதையும், குறைஷிகளின் வல்லதிகாரத்தைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள ஒரு சட்டபூர்வமற்ற அமைப்புக்கு அது ஒரு விதத்தில் சட்டபூர்வ தன்மையை வழங்கிவிடும் என்பதையும் அண்ணல் நபிகளார் அறிந்திருந்தார்கள்.

ஆனால் அவப்பேறாக, இன்று இஸ்லாமிய இயக்கத்தின் அங்கத்தவர்கள் பலரும் இப்பார்வையை தொலைத்து விட்டிருக்கிறார்கள். அவர்கள் ஐயத்திற்குரிய நம்பகச் சான்றுகளைக் கொண்ட அரசாங்கங்களில் அமைச்சர் பதவிகளைப் பெறுவதில் மிகுந்த ஆர்வம் காட்டுகிறார்கள். ஒரு இஸ்லாமிய அரசை நிறுவும் நம்பிக்கையில், இஸ்லாத்திற்கு முரணான (ஜாஹிலிய்ய) அமைப்புமுறைகளின் பிழையான கருவிகளைப் பயன்படுத்தி உழைப்பதற்கும் வேறு சிலர் ஆயத்தமாக இருக்கிறார்கள்.

இஸ்லாத்தினால் ஒரு கீழடங்கிய பாத்திரத்தில் இயங்கவோ செயல்படவோ முடியாது; இஸ்லாத்தின் அதிகாரத்தில் வேர்கொண்ட தனது சொந்த அமைப்பை அது நிறுவியாக வேண்டும். பின்வரும் திருக்குர்ஆன் வசனத்திலிருந்தும், அண்ணல் நபிகளாரின் சீறாவிலிருந்தும் தெரியவருவது அதுவே:

"(அல்லாஹ்) தனது தூதரை தெளிவான தொரு வழிகாட்டுதலைக் கொண்டும், மற்றெல்லா அமைப்புமுறைகளையும் மேலோங்க வேண்டுமென்பதற்காக சத்திய தீனைக் கொண்டும் அனுப்பியிருக்கிறான்; அதை இணைவைப்பாளர்கள் (முஷ்ரிகீன்) எத்துணை வெறுத்தபோதும் சரியே." *(9:33; 61:09)*

### மதீனாவின் இஸ்லாமிய அரசு

அண்ணல் நபிகளார் யத்ரிபுக்கு புலம் பெயர்ந்த போது இஸ்லாத்தின் மென்னதிகாரம் மேலாதிக்கம் பெற்று வல்லதிகாரமாக மாறியது (யத்ரிப் பின்னாட்களில் மதீனா என்று பெயர்மாற்றப்பட்டது). மக்காவில் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டவொரு சிறுபான்மை சமுதாயமாக இருந்த முஸ்லிம்கள், மதீனாவில் ஒரு மேலாதிக்கம் மிக்க பிரசன்னத்தைப் பெற்றார்கள். அப்போதும் கூட அவர்கள் எண்ணிக்கையில் சிறுபான்மையினராகவே இருந்தார்கள் என்பதை கவனிக்க வேண்டும்.

அங்கு நபியவர்கள் தன்னிகரற்ற ஓர் தலைவராக ஏற்றுக் கொள்ளப்பட்டார்கள் என்பது சுவாரஸ்யமானது. யூதர்கள், உம்மிகள் (இறைவேதத்துடன் பரிச்சயமற்றவர்கள்) என

முஸ்லிம்-அல்லாதோரும் கூட எல்லாப் பிரச்சினைகளையும் நபிகளாரிடமே கொண்டு வந்தார்கள். 'மதீனா சாசனம்' (மீஸாக் அல்-மதீனா) என்றறியப்படும் ஓர் எழுத்துபூர்வ ஆவணத்தில் சகல குடிமக்களின் உரிமைகள்-பொறுப்புகள் அனைத்தும் மிகத் தெளிவாக நிறுவப்பட்டு, மதீனாவில் ஓர் இஸ்லாமிய அரசு தோற்றம் பெற்றது.

இவ்வாறு இஸ்லாத்தின் மென்னதிகாரம் ஒரு வல்லதிகாரமாக மாற்றப்பட்டதையும், மதீனாவில் இஸ்லாம் மேலோங்கியதையும் கண்ட மக்காவின் இணைவைப்பாளர்கள் (முஷ்ரிகீன்) மிகக் கடுமையான அவமான உணர்வுக்கு ஆளானார்கள். தங்கள் நகரைக் காலிசெய்து விட்டு மதீனாவுக்குச் சென்று குடியமர்ந்து விட்டார்கள் என்பதற்காக மட்டும் முஸ்லிம்களை மக்கத்துத் தலைவர்கள் நிம்மதியாக இருக்க விட்டுவிடப் போவதில்லை என்பதை நபியவர்களால் முன்னுணர முடிந்தது.

முஸ்லிம் அதிகாரம் மதீனாவில் இவ்வாறு திண்மம் அடைந்தது குறைஷிகளை மேலும் அச்சமூட்டுவதாக அமைந்தது. இந்த அச்சுறுத்தல் இன்னும் வலுவடையும் முன்பே அதைத் தாக்கியழிக்க வேண்டியதொரு கட்டாயத்தில் குறைஷிகள் இருந்தார்கள்.

எனினும் நபியவர்கள் தனது மென்னதிகாரத்தை மிக விவேகமாகப் பயன்படுத்தி, மதீனாவுக்கும் செங்கடலுக்கும் நடுவிலிருந்த குறுகிய வணிகப் பாதையில் வாழ்ந்த கோத்திரங்கள் பலவற்றையும் முஸ்லிம்களின் கூட்டணியில் இணைத்தார்கள் (மக்காவின் பெரும்பாலான வணிகக் கூட்டங்கள் இவ்வணிகப் பாதையின் வழியாகவே கடந்துசெல்ல வேண்டியிருந்தது).

இது (தார்மிக ரீதியில் உணர்வூட்டுவதற்கான) மென்னதிகாரத்தை வெற்றிகரமாக (இராணுவ வலிமைக்கான) வல்லதிகாரமாக மாற்றுவதாக அமைந்தது. இப்போது குறைஷிகள் மதீனாவைத் தாக்கினால், முஸ்லிம்களின் உதவிக்கு வரவேண்டுமென்ற கட்டுப்பாடு கொண்டவையாக இப்போது அந்தக் கோத்திரங்கள் மாறின.

அதே போல், அந்தக் கோத்திரங்கள் தாக்கப்பட்டால் முஸ்லிம்கள் அவற்றைப் பாதுகாக்க போரிடுவார்கள் என்றும் வாக்களிக்கப்பட்டது.

அண்டையிலிருந்த கோத்திரங்களுடன் செய்துகொள்ளப்பட்ட இந்தக் கூட்டணி உடன்படிக்கைக்கு மற்றொரு பின்விளைவும் இருந்தது; போராட்ட அரங்கை அது மேலும் விசாலமாக்கி விட்டது. போர் இப்போது வெறுமனே மக்காவுக்கும் மதீனாவுக்கும் இடையில் மட்டுமில்லை என்றானது. செறிவானதொரு அதிகார மையம் என்பதாக மக்கா பெற்றிருந்த அனுகூலமானது இராணுவ ரீதியில் நுண்ணறிவுடன் மேற்கொள்ளப்பட்ட இந்நடவடிக்கையால் ஒருவகையில் மட்டுப் படுத்தப்பட்டது. இதையடுத்து, மக்காவின் உயிர்-ஆதாரங்களாக இருந்த வணிகக் கூட்டங்களை முஸ்லிம்களின் கூட்டணியினர் அச்சுறுத்தத் துவங்கி விட்டார்கள். ஆக, முஸ்லிம்களுக்கும் மக்கத்து எதிரிகளுக்கும் நடுவே முறைப்படியான ஆயுத மோதல் துவங்குவதற்கு முன்பே, நபியவர்கள் இவ்விதமான முன்னெடுப்புகளின் வழியாக குறைஷிகளுடைய வல்லதிகாரத்தின் அடித்தளங்கள் சிலவற்றைத் தகர்த்து எறிந்தார்கள்.

முஸ்லிம்களுக்கு எதிரான நேரடி மோதலைப் பொறுத்தவரை, குறைஷிகள் இராணுவ-பொருளாதார-அரசியல் வல்லதிகாரம் என்ற அம்சங்களில் முஸ்லிம்களை மிகைத்தவர்களாக இருந்தார்கள். எஞ்சிய அரேபியத் தீபகற்பத்திலிருந்த எஞ்சிய பல கோத்திரங்களுடனும் அவர்களுக்குத் தொடர்புகள் இருந்தன. கஅபா ஆலயம் மக்காவில் இருந்ததும், கிழக்கு-மேற்கு வணிகப் பாதையில் அமைந்த ஒரு நகராக அது இருந்ததும் மக்காவுக்கு மேலுமதிக அனுகூலத்தை வழங்கியிருந்தன.

அது மட்டுமின்றி, குறைஷிகள் மிகச் சிறந்த போர் வீரர்களாக இருந்தார்கள். எண்ணிக்கையில் மிகக் குறைவானவர்களாகவும் வளங்களில் வெகுவாகப் பற்றாக்குறை கொண்டவர்களாகவும் இருந்த முஸ்லிம்களின் போரிடும் திறன்

அதுவரை போர்க்களத்தில் சோதிக்கப்பட்டு நிரூபணமாகியிருக்கவில்லை. எனவே, கூட்டணியினரை ஈர்ப்பதற்கு ஏதேனுமொரு வெற்றியைச் சுட்டிக்காட்டும் நிலையில் அவர்கள் அப்போது இருக்கவில்லை.

மக்காவின் வல்லதிகார அச்சுறுத்தலை கருத்தில் கொண்டால், மக்களை வென்றெடுப்பதற்கு முஸ்லிம்களின் வசமிருந்த (அற்புதமான நீதமிக்க தூதும் உயர் ஒழுக்க மாண்பும் என்ற) மென்னதிகாரம் மட்டுமே போதுமானதாக இல்லை.

**இஸ்லாம் எப்போது வெல்லும்?**

ஒரு சித்தாந்தமோ அமைப்புமுறையோ, அது சரியானதாக இருக்கிறது என்ற ஒரே காரணத்திற்காக மட்டும் பெரும்பான்மை மக்களால் ஆதரிக்கப்படுவது இல்லை என்பதே வரலாற்று யதார்த்தம். அது மகத்தான இராணுவ-பொருளாதார வலிமையைக் கொண்டிருக்கிறது என்பதை மக்கள் உணரும்போதே தம்மை அதனுடன் இணைத்துக் கொள்கிறார்கள். எனவே, இஸ்லாத்திற்கும் இறைநிராகரிப்புக்கும் (குஃப்ரு) இடையிலான அந்தப் போராட்டத்தில் அரேபியாவின் பெரும்பாலான கோத்திரங்கள் குறைஷிகளின் பக்கமே அணிசேர்ந்திருந்தன.

பத்ரு களத்தில் முதலாவது தீர்மானகரமான வெற்றியை ஈட்டும்வரை, நபிகளாரிடம் உணர்வூட்டுவதற்கான அதிகாரமும் இறைவனால் வழங்கப்பட்ட சட்டபூர்வ தன்மையும் மட்டுமே கைவசம் இருந்தன. இஸ்லாத்தை ஏற்கும்படியும், முஸ்லிம்களுடன் கூட்டணியில் இணையும்படியும், (குறைந்த பட்சம்) நடுநிலை வகிக்கும்படியும் மக்களைத் தூண்டுவதற்கு நபியவர்கள் அவற்றைப் பயன்படுத்தினார்கள்.

மக்காவிலிருந்த பதிமூன்று வருடங்களில் சில நூறு பேர் மட்டுமே முஸ்லிம்களாக மாறியிருந்தார்கள். ஆனால், மதீனாவின் பத்தாண்டுகளில் பல்லாயிரக் கணக்கான மக்கள் முஸ்லிம்களாக மாறினார்கள். ஏன் இத்துணை பெரிய வேறுபாடு? இன்று இஸ்லாமியப் பிரச்சாரத்தை அதிகம் வலியுறுத்துவோர் தம்முடைய முயற்சிகள் ஏன் வெகுசிறிதளவே பலன்தருகின்றன என்பதைப் புரிந்துகொள்ள வேண்டுமெனில், இக்கேள்வி குறித்து அவர்கள் ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். வேறுபாடு இருப்பது இதில்தான்:

மக்காவில் நபிகளாரிடம் மென்னதிகாரம் மட்டுமே இருந்தது, ஆனால் மதீனாவில் அவர்கள் வல்லதிகாரத்தையும் ஈட்டிக் கொண்டார்கள். விரும்பிய பலன்களை அடையவேண்டுமெனில், மென்னதிகாரம் வல்லதிகாரத்தால் வலுவூட்டப்பட வேண்டும்.

இன்றும் கூட இது வெளிப்படையே. ஓர் உலக வல்லரசாக இருக்கும் யு.எஸ்ஸிடம் பண்பு நலம், ஒழுக்க மாண்புகள், பண்பாடு அல்லது நல்லறம் என எவ்வித இயல்பான விழுமியங்களும் இல்லை; எனினும், அதனிடமுள்ள வல்லதிகாரத்தின் காரணத்தினாலேயே மெக்டொனால்டு, கோகோ-கோலா, பெப்சி போன்றவற்றின் உற்பத்திப் பண்டங்கள் அன்றாடம் பல பத்து இலட்சக்கணக்கான மக்களால் நுகரப்படுகின்றன; இத்தனைக்கும், இவ்வுணவுப் பொருட்கள் ஊட்டச்சத்து ரீதியில் பெறுமதி அற்றவையே (அல்லது மிகச் சிறிதளவே பெறுமதி கொண்டவை). அமெரிக்க பாணி ஆடைகளும் கூட இதே காரணத்தினால்தான் உலகம் முழுக்க நவ-நாகரிகமானவை என்று கருதப்படுகின்றன.

இராணுவத் தோல்விகளின் விளைவாக யு.எஸ்ஸின் வல்லதிகாரம் குறையக் குறைய, மேற்கூறியவற்றின் மேலுள்ள மோகங்களும் படிப்படியாகக் குறைய ஆரம்பிப்பதைப் பார்க்க முடிகிறது.

நபியவர்களின் தூதுத்துவப் பணியில் அதிமுக்கியச் சிறப்பு நிகழ்வுகள் எனப் பலவற்றை நம்மால் அடையாளம் காண முடியும். மக்காவிலிருந்த பதிமூன்று ஆண்டுகளில் அவர்கள் மென்னதிகாரத்தை மட்டுமே பெற்றிருந்தார்கள். அப்போது இஸ்லாத்திடம் ஒரு ஆட்சிப்பரப்புத் தளம் இல்லாதிருந்தமையால், அதன் தாக்கம் வரையறுக்கப்பட்டதாக இருந்தது. இஸ்லாத்தின் அதிகாரத்தை ஒரு முறையான

தளத்தின் மீது நிறுவுவதற்கான ஆட்சிப்பரப்பை மதீனா வழங்கியது. முஸ்லிம்களின் மனத்துணிவைச் சோதிப்பதாக அமைந்த பத்ருப் போர், அரேபியாவில் புதியதொரு சக்தி எழுச்சி பெற்றிருக்கிறது என்பதை அரேபியத் தீபகற்பத்தில் வாழ்ந்த மக்களுக்கு கட்டியம்கூறி அறிவித்தது.

எனினும், இராணுவ ரீதியில் வலிமை மிக்கவர்களாகவும், பொருளாதார ரீதியில் செழிப்பு மிக்கவர்களாகவும், கஅபா ஆலயம் மக்காவில் இருந்த காரணத்தால் பல்வேறு அரசியல் கூட்டணிகளைக் கொண்டவர்களாகவும், மிகுந்த செல்வாக்கு பெற்றவர்களாகவும் இருந்த குறைஷிகளின் அதிகாரத்துக்கு எதிராக முஸ்லிம்கள் எவ்வளவு காலம் தாக்குப்பிடித்து நிற்கமுடியும் என்பது பற்றி அரேபியாவின் மக்களுக்கு அப்பொழுது முழு நம்பிக்கை வந்திருக்கவில்லை (இவ்வாறிருக்க, குறைஷிகளின் அதிகாரத்தை முஸ்லிம்களால் முற்றாகத் தோற்கடிக்க முடியுமா என்று அவர்களுக்கு இருந்திருக்கக் கூடிய சந்தேகம் பற்றி தனியே கூறத் தேவையில்லை) .

மதீனா காலகட்டத்தில் முஸ்லிம்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பு, வல்லதிகாரத்துக்கான மிகவும் திறம்வாய்ந்த ஒரு சான்றாகும். வெற்றி எப்போதுமே மக்கள் மீது உற்சாகமூட்டும் தாக்கம் ஒன்றை ஏற்படுத்துகிறது; மக்கள் தாமாகவே அதை நோக்கி கவரப்படுகிறார்கள்.

இதற்கு நேர்மாற்றமாக, தோல்வி எப்போதும் வெகுசில ஆதரவாளர்களை மட்டுமே பெற்றிருக்கும்; அதன் பக்க நியாயம் எத்துணை உறுதியான அடிப்படையைக் கொண்டதாகவும் அறிவுக்குப் பொருந்துவதாகவும் இருந்தபோதிலும் சரியே.

**நபிவாழ்வு காட்டும் பாதை**

இறுதியாக ஒன்றைக் கூற வேண்டியுள்ளது. (முஸ்லிம் உலகில் நடைமுறையிலுள்ள) இன்றைய அரசியல், பொருளாதார, கல்வி அமைப்புகள் இஸ்லாத்தின் குறிக்கோள்களைச் சாதிப்பதற்குப் பொருத்தமான மக்களை உருவாக்குபவையாக இல்லை. இஸ்லாத்தின் விழுமியங்களுக்கு எதிராக இன்று மேலோங்கியுள்ள அமைப்பு முறையின் நலன்களுக்குச் சேவையாற்றக் கூடியவர்களையே அவை உற்பத்தி செய்கின்றன.

“இஸ்லாமிய” நிறுவனங்கள் பலவற்றின் விசயத்திலும் இதுவே உண்மையாக இருக்கிறது. ஏனெனில், அவை மேற்கத்தியச் செல்வாக்குகளால் மாசடைந்திருக்கின்றன. எனவே, பெரும்பாலும் அவை முஸ்லிம்களின் தேவைகளுக்குப் பொருத்தப்பாடு அற்றவையாக மாறிப்போயிருக்கின்றன.

நபியவர்கள் தனது வாழ்நாளின் போது எந்த இலட்சியப் பணிக்காகத் தனது தோழர்களைப் பயிற்றுவித்தார்களோ, அவ்வாறான ஒரு பயிற்சியை முஸ்லிம்களுக்கு வழங்குபவையாக இத்தகைய நிறுவனங்கள் இருப்பதில்லை. எனவே, நபியவர்கள் அரேபியத் தீபகற்பத்தில் எந்தவிதமான ஒரு அமைப்புமுறையை நிறுவினார்களோ, நபியவர்களின் மரணத்திற்குப் பிறகு அரேபியத் தீபகற்பத்தைச் சுற்றியிருந்த பூமிகளில் நபித்தோழர்கள் எந்த அமைப்புமுறையைத் தொடரச் செய்தார்களோ, அதே அமைப்புமுறையின் மாதிரியில் நாம் நமது ஒட்டுமொத்த அமைப்புமுறையையும் மாற்றியமைக்க வேண்டியது நிர்ப்பந்தமாகிறது.

அல்லாஹ்வுடன் போரில் ஈடுபட்டிருந்த ஆதிக்க அதிகார மையங்களின் நலன்களுக்குச் சேவை செய்யாத ஒரு விழுமியத் தொகுதியை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) வளர்த்தெடுத்தார்கள்.

*9:33, 61:09* ஆகிய வசனங்களில் அல்லாஹ் வாக்களித்துள்ளவாறும் கோரியுள்ளவாறும், இஸ்லாத்தை மேலாதிக்கம் பெற்றவோர் முன்மாதிரியாக ஆக்க வேண்டுமெனில் நபிகளார் மற்றும் நபித்தோழர்களுடையதை ஒத்தவொரு பேரியக்கத்தை முஸ்லிம்கள் முன்னெடுக்க வேண்டும்.

இவ்வாறிருக்க, இன்று முஸ்லிம் சமூகங்களில் நிலவும் இஸ்லாத்திற்கு முரணான

(ஜாஹிலிய்ய) அமைப்புமுறைகளுக்கு உள்ளே செயற்படுவதன் மூலமோ அல்லது அவற்றுடன் சமரசம் செய்துகொள்வதன் மூலமோ இதனைச் சாதிக்க முடியாது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

எனினும் அவப்பேறு என்னவென்றால், நல்லெண்ணம் கொண்ட முஸ்லிம்கள் பலரும் வெகுளித்தனமாக இவ்வாறு எண்ணுகிறார்கள்: “நாம் சேவையாற்றிக் கொண்டிருக்கும் இந்த அமைப்புமுறைகளின் அநீதிகளுக்கு நாம் பொறுப்பாளிகள் இல்லை; நாம் ‘நற்செயல்கள்’ செய்கிறோமா இல்லையா என்பதுதான் கேள்வி.”


இத்தகைய கண்ணோட்டத்தை திருக்குர்ஆனோ நபிகளாரின் சுன்னாஹ்வோ ஆதரிப்பதில்லை. முதல் முறை வஹீயைப் பெற்றதன் பிறகு நபிகளார் மீண்டும் குகைக்குத் திரும்பிச் செல்லவில்லை; தியானத்தையும் அமைதியான முறையில் வெறுமனே நற்செயல்கள் புரிவதையும் பிரச்சாரம் செய்துகொண்டிருக்கவும் இல்லை.

மாறாக, கடைவீதியில் நுழைந்து அந்தச் சமூகத்தில் நிறுவப்பட்டிருந்த ஒழுங்கை சவாலுக்குள்ளாக்கினார்கள்; அச்செயல் முறையில் மகத்தான துன்பங்களை அனுபவித்தார்கள். இவையெல்லாம் இல்லாமல் இஸ்லாம் அந்த இருபத்திமூன்று வருடங்களில் அரேபியத் தீபகற்பத்தில் மேலாதிக்கம் பெற்றவொரு சக்தியாகவோ முன்மாதிரியாகவோ மாறியிருக்க முடியாது.

நிலைத்தன்மை இல்லாத இன்றைய காலங்களில் இறைநிராகரிப்பின் (குஃப்ரு) ஆதிக்கப் பிடியை உடைத்தெறிய வேண்டுமென்றால், முஸ்லிம்கள் சீறாவின் அதிகாரப் பரிமாணங்களின் பால் திரும்புவதைத் தவிர தெரிவேதுமில்லை.

**மூலம்:** Power dimensions in the Sirah of the noble Messenger (saws) <https://crescent.icit-digital.org/articles/power-dimensions-in-the-sirah-of-the-noble-messenger-saws>

*தமிழில்:* **உவைஸ் அஹமது**




மால்கம் எக்ஸின் வரலாற்றை எழுதுவது என்பது மனித குல விடுதலைக்கான நாயகர்களில் ஒருவரின் வரலாற்றை எழுதுவது என்பதே.

கறுப்பின மக்களின் விடுதலைக்காக போராட்டம், ஆன்மீகம் என்ற இரண்டு பாதையிலும் அவர் மேற்கொண்ட பயணம் உலகெங்கும் அடையாள அரசியலுக்கு ஒரு முன்னுதாரணமாகத் திகழ்கிறது. தனது வாழ்வையும் உயிரையும் மால்கம் எக்ஸ் எந்த இலட்சியத்திற்காக அர்ப்பணித்தாரோ அவை இன்றும் தங்கள் உரிமைகளுக்காகப் போராடும் ஒவ்வொரு மக்கள் சமூகத்தின் கனவிலும் உயிர்த்தெழுந்து கொண்டிருந்தது.

இப்படியான ஓர் நாயகனும், அமெரிக்காவின் நிறவெறிக்கெதிராக போராடிய மாவீரனுமான மால்கம் எக்ஸின் முழு வரலாறையும் எளிய நடையில் கொடுத்திருக்கும் நூல் தான் , வேர்கள் பதிப்பகம் வெளியீட்டில் வந்த " மால்கம் எக்ஸ்". நான்கு பதிப்புகளை தாண்டி அதிக விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.

– IQRA Online Bookshop



# உஹது களம் அழைக்கின்றது

**மகளிர் மன்றம்**

அலைகள் ஓயலாம். ஆனாலும் இஸ்லாத்தை அடுத்தவர்களுக்கு எடுத்துச் சொல்வது எனும் இலட்சியத்தில் நாம் ஓய்ந்து விடக்கூடாது.

இந்த இலட்சியப்பணியில் நாம் அடியெடுத்து வைக்கும் போதெல்லாம், ஓர் எதிர்வாதத்தை நாம் தவறாமல் எதிர்கொள்கிறோம்.

அதுதான் முஸ்லிம் பெண்களின் நிலை என்ன? ஏன் நீங்கள் அவர்களை மூலையிலே முடக்கி போடுகின்றீர்கள்?

இதனால் முஸ்லிம் பெண்களின் நிலை என்ன என்பதை நாம் இடைவிடாமல் எடுத்துச் சொல்லிட வேண்டியது அவசியமாகி விடுகின்றது.

இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதில் பெண்கள் எந்த விதமான கட்டாயத்திற்கும் உட்படுத்தப்படுவதில்லை. அவர்களுக்கு இதுதான் நேரான பாதை என்று பட்டது. இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

தந்தை இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார், கணவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் கைவிட்டு விடுவேன் என்று மிரட்டினார். மொத்தக் குடும்பமும் ஏற்றுக்கொண்டது.

அதனால் வழியின்றி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டோம். என்பன போன்ற நெருக்கடிகளுக்கு ஆட்படும் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்களின் முடிவு அவர்களின் சொந்த விருப்பத்தின் அடிப்படையில் அமைந்ததாய் இருந்தது.

இப்படித் தங்கள் சொந்த விருப்பத்தின் அடிப்படையில் அமைந்த இந்த முடிவினால் வந்த அத்தனை துன்பங் களையும், துயரங்களையும், சித்திரவதைகளையும் அவர்களே ஏற்றார்கள். அத்தோடு நின்று விடாமல் அதன் வளர்ச்சிக்காக தங்களால் இயன்றதையெல்லாம் செய்தார்கள்.

இந்தக் கொள்கையை ஏற்றுக் கொண்டவர்கள் தாக்குதல்களுக்கு ஆளாகிய போதெல்லாம் அவர்கள், அவர்களுக்கு



பாலஸ்தீன போராட்ட களத்தில் நமது பெண்கள்

வேண்டிய உதவிகளை செய்தார்கள். ஏன்! அவர்கள் முஸ்லிம் படைகளுடன் போர்களம் சென்றார்கள். பணிவிடைகள் செய்தார்கள். தேவைப்பட்ட போது போரிலும் கலந்துக் கொண்டார்கள்.

**போர்களத்தில் அவர்கள் ஆற்றிய முக்கிய பணிகள்**

தண்ணீர் கொண்டு வர தோல் பைகளை தயார் செய்தல் போரில் கலந்து களத்தில் நிற்பவர்களுக்குத் தண்ணீர் கொண்டு வருதல் காயம் பட்டோருக்கு மருத்துவம் செய்தல் இறந்தவர்களை களத்திலிருந்து வெளியே கொண்டு வருதல் உணவு சமைத்தல் என்பன!

இமாம் முஸ்லிம்(ரஹ்) அவர்கள் பின்வரும் வரலாற்றைப் பதிவு செய்கிறார்கள்;

உம்மு அத்தியாஃஹ் அல் அன்சாரி(ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

“நான் ஏழு போர்களின் போது பெருமானார்(ஸல்) அவர்களுடன் சென்றேன். நான் அவர்கள் முகாமிட்டிருந்த இடத்திற்கு வெளியே இருந்து அவர்களுக்கு உணவு தயாரித்துக் கொடுத்தேன். நோய்வாய்ப் பட்டவர்களுக்கும், காயம் பட்டவர்களுக்கும் மருத்துவம் செய்தேன்.” (முஸ்லிம்)

அனஸ் இப்னு மாலிக்(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

“இறைவனின் தூதர்(ஸல்) அவர்கள் போருக்குப் போகும் போது உம்மு சுலைம்(ரலி) அவர்களையும் இன்னும் சில அன்ஸாரி பெண்களையும் அழைத்துச் செல்வார்கள். அவர்கள் தண்ணீர் எடுத்து வருவார்கள், காயம் பட்டவர்களுக்கு மருத்துவம் செய்வார்கள்.(முஸ்லிம்)

இமாம் புஹாரி(ரஹ்) அவர்கள் பின்வரும் நபிமொழியைப் பதிவு செய்திருக்கின்றார்கள்;

அல் ரூபி பின்த் முஅவ்வத்(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

“நாங்கள் பெருமானார்(ஸல்) அவர்களோடு இருந்தோம், தண்ணீர் கொண்டு வந்தோம். (போரில்) ஷஹீதானவர்களை மதினாவிற்கு கொண்டு வந்தோம். (புஹாரி)

இமாம் புஹாரி(ரஹ்) அவர்களும், இமாம் முஸ்லிம்(ரஹ்) அவர்களும் பின்வரும் நபிமொழியைப் பதிவு செய்திருக்கின்றார்கள்.

அனஸ்(ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்;

"உஹத் போரின் போது பெருமானார்(ஸல்) அவர்களை விட்டு சிலர் ஓடிக் கொண்டிருந்தார்கள். அபூதல்ஹா(ரலி) அவர்கள் பெருமானார்(ஸல்) அவர்களின் முன் நின்று கொண்டிருந்தார்கள்."

"அவர்கள், பெருமானார்(ஸல்) அவர்களை ஒரு கேடயத்தைக் கொண்டு பாதுகாத்து கொண்டிருந்தார்கள். அபூதல்ஹா(ரலி) அவர்கள் அம்பெய்வதில் திறமைமிக்கவர். மூன்று கூடைகளில் இருந்த அம்புகள் அனைத்தையும் அவர்கள் அன்றைய தினத்தில் எய்து முடித்துவிட்டார்கள். யாராவது அம்புகளோடு சென்றால் அதனை தல்ஹா (ரலி) அவர்களிடம் கொடுங்கள் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் சொல்வார்கள்."

"பெருமானார்(ஸல்) அவர்கள், எப்போதாவது தலையை நிமிர்த்தி என்ன நடந்து கொண்டிருக்கின்றது எனப்பார்த்தால் தல்ஹா(ரலி) அவர்கள், 'அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்களே! என்னுடைய தாயையும், தந்தையும் உங்களுக்காக தியாகம் செய்யட்டுமா? உங்கள் தலையை நிமிர்த்தாதீர்கள். பாய்ந்து வரும் அம்புகள் உங்களை தாக்கிவிடலாம். அந்த அம்புகள் என் நெஞ்சைப் பிளக்கட்டும். அவை உங்களைத் தொட வேண்டாம்.' என்று கூறினார்கள்."

"இப்படி நெருக்கடியாக போர் நடந்துக் கொண்டிருந்த போது ஆயிஷா பின்த் அபூபக்ர்(ரலி) அவர்களும், உம்மு சுலைம்(ரலி) அவர்களும் தண்ணீர் பைகளில் தண்ணீர் சுமந்து வந்து தாகித்தவர்களுக்கு வாயில் ஊற்றிக் கொண்டிருந்தார்கள். மீண்டும் ஓடோடிச் சென்றார்கள். தண்ணீர் மொண்டு வந்தார்கள். தாகத்தால் தவித்தோருக்கு தண்ணீர் ஊட்டினார்கள்."

"இவர்கள் இருவரும் தங்களது ஆடைகளை எடுத்துக் கட்டியிருந்தார்கள். இதனால் அவர்களின் முழங்கால்கள் வெளியே தெரிந்தன. அபூதல்ஹா(ரலி) அவர்களின் வாள் மூன்று அல்லது நான்கு முறை கீழே விழுந்தது. அவர் தளர்ச்சியுற்றதால். (புஹாரி, முஸ்லிம்)

அனல் பறக்கும் வெய்யில் அதில் கனல் பறக்கும் வாளும், ஈட்டியும், அம்பும், களத்தில் பலரும் அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருக்கிறார்கள். முஸ்லிம்கள் முகாமிலேயே கபளீகரங்கள். அத்தனைக்குமிடையில் இந்த இரண்டு சகோதரிகளும் தண்ணீர் எடுத்துக் கொண்டோடி வருகின்றார்கள். மீண்டும், மீண்டும் இதையே செய்கின்றார்கள்.

வாள்கள் அவர்களின் முன்னும், பின்னும் சுழன்று கொண்டிருக்கின்றன. அம்புகள் பறந்துக் கொண்டிருக்கின்றன. இத்தனைக்கும் இடையில் அவர்கள் தாகம் தீர்க்கும் தங்கள் பணியைத் தீர்க்கமாகச் செய்து கொண்டே இருந்தார்கள்.

இந்தச் சகோதரிகளை அன்றைக்கு வாழ்ந்த நபித்தோழர்கள் அனைவரும் கண்ணியப் படுத்தினார்கள். அதேபோல் இன்றைய வரலாறும், இனிவரும் வரலாறும் அவர்களின் நினைவால் ஊட்டம் பெறும்.

கலிஃபா உமர்(ரலி) அவர்கள் ஆட்சியிலிருந்த போது நடந்த நிகழ்ச்சி ஒன்றை, தலபா பின் அபிமாலிக்(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்;

"கலீஃபா உமர்(ரலி) அவர்கள் மதினாவில் வைத்து வனப்புமிக்க ஆடைகளை எங்களுக்குப் பகிர்ந்து தந்து கொண்டிருந்தார்கள். இறுதியாக மிகவும் அழகான ஆடையொன்று எஞ்சியது."

"அங்கே குழுமியிருந்த சிலர் கலிஃபா உமர்(ரலி) அவர்களிடம், 'அமீருல் மூஃமினூன் அவர்களே! இந்த அழகு மிகு ஆடையை உங்கள் மனைவிக்குக் கொடுத்து விடுங்கள். அவர்கள் தாம் பெருமானார்(ஸல்) அவர்களின் பேத்தியாயிற்றே' என்றார்கள்."

"உமர்(ரலி) அவர்கள், அலி(ரலி) அவர்களின் மகள் உம்மு குல்தும் பின்த் அலி(ரலி) அவர்களைத் திருமணம் செய்திருந்தார்கள். பொது மக்களின் இந்த வேண்டுகோளுக்கு உமர்(ரலி) அவர்கள் இப்படிப் பதில் சொன்னார்கள்.

"இந்த உம்மு சாலிம்(ரலி) அவர்கள், இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளமாட்டேன் என்று

சொன்ன தன் கணவரை விவாகரத்துச் செய்தார்கள். ஹுனைன் போரின் போது ஒரு நீண்ட கட்டாரியோடு வலம் வந்துக் கொண்டிருந்தார்கள். அபூதல்ஹா(ரலி) அவர்கள் இதனைப் பார்த்து பெருமானார் (ஸல்) அவர்களிடம் கூறினார்கள். பெருமானார்(ஸல்) அவர்கள் இதைக் கொண்டு என்ன செய்யப் போகின்றாய் என்று கேட்டார்கள். இதற்கு உம்மு சாலிம்(ரலி) அவர்கள் இப்படிப் பதில் சொன்னார்கள்: 'எதிரிகள் யாராவது என் பக்கம் வந்தால் அவன் வயிற்றைக் கீறிவிடுவேன்.' வாழ்க்கையின் பிந்தைய காலத்தில் ஷரியத் விளக்கங்களை அடுத்தவர்களுக்கு கற்றுத்தரும் பணியினை செய்து வந்தார்கள்."

"இந்த ஆடையின் மீது உம்மு சாலிம்(ரஹ்) அவர்களுக்குத்தான் அதிக உரிமை இருக்கின்றது. அவர்களே இந்த அழகான ஆடையை பெறுவதற்கு தகுதியானவர்கள். எங்களுக்கு உஹத் போரின் போது தண்ணீர் கொண்டு வந்து தந்தார்கள்."

"உஹத் போரின் போது இறைவனின் தூதர்(ஸல்) அவர்களின் மேல் உதடு காயப்பட்டது. ஒரு பல் உடைந்தது. இரத்தம் வழிந்தோடியது. பெருமானார்(ஸல்) அவர்களின் மகள் ஃபாத்திமா(ரலி) அவர்கள் இந்தக் காயத்தின் மேல் தண்ணீர் ஊற்றினார்கள். அது இரத்த கசிவை இன்னும் மோசமாக்கிவிட்டது. பின்னர் படுக்கைக்கு பயன்படுத்தும் ஒரு பொருளை எடுத்து எரித்தார்கள். அதை அந்த இடத்தில் வைத்தார்கள். இரத்த கசிவு நின்றது. (ஃபத்ஹுல் பாரி)

உஹத் போரில் மிகவும் உறுதியாக நின்ற பெண்களில் பிரிதோர் வீராங்கனை சபியா பின்த் அப்துல் முத்தலிப்(ரலி) அவர்கள் கையில் சிறு மரக்கிளையின் தழையை வைத்துக்கொண்டு வலம் வந்தார்கள். எதிர்படும் ஸஹாபாக்களின் முகத்தில் அந்தத் தழையால் தட்டி, 'நீங்கள் பெருமானார்(ஸல்) அவர்களை விட்டா ஓடுகின்றீர்கள்?' எனக்கேட்டார்கள்.

பெருமானார்(ஸல்) அவர்கள், அவர்களுடைய மகனிடம்;

"அவர்களை இங்கே கொண்டு வந்துவிடாதீர்கள். அவர்கள் தங்களுடைய சகோதரருக்கு என்ன நிகழ்ந்தது என்பதை பார்க்க வேண்டாம் என்றார்கள். இதனைப் புரிந்துக் கொண்ட அந்தச் சகோதரி இப்படிக் கூறினார்கள், 'என் சகோதரர் ஷஹீதாக்கப் பட்டு விட்டார். அவர் உடல் சின்னா பின்னமாக்கப்பட்டு விட்டது. இதை நான் அறிவேன். அல்லாஹ்வுக்காக நான் பொறுத்துக் கொள்வேன். அல்லாஹ்விடம் உதவி தேடுவேன்."

இப்படி தங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு மணித்துளியையும் இஸ்லாத்தை நிலைநாட்ட செலவு செய்து வரலாற்றில் வனப்பான இடத்தை பிடித்துக் கொண்டார்கள் முஸ்லிம் பெண்கள்.

இன்னும் இந்த வீராங்கனைகளுக்கு எந்தப் பஞ்சமுமில்லை. இதோ நெருங்கிய உறவினர் ஒருவரை இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்களிடம் உயிர் பலி தந்து விட்டு, இல்லை! இல்லை! அல்லாஹ்வின் பாதையில் தந்து விட்டு யூத அநியாயக்காரர்களால் கைது செய்யப்பட்டு வரும் பாலஸ்தீன சகோதரிகள்.

ஆமாம்! அவர்களின் தியாகம் தொடர்ந்துக் கொண்டுதான் இருக்கிறது. இன்றளவிலும் பாலஸ்தீனத்தில் வாழும் முஸ்லிம்களை இஸ்ரேலிய படைகள் பெருமளவில் கொலை செய்துவிட்டதால், பாலஸ்தீன மீட்பு போரை முன்னின்று நடத்துபவர்கள் முஸ்லிம் பெண்கள் தானே!

**– எம்.ஜி.எம்**


**வைகறை வெளிச்சம்**
**இதழில் விளம்பரம் செய்ய**
**கீழ்கண்ட எண்ணைத்**
**தொடர்பு கொள்ளவும்**
**8148129887**



# இவர்கள் ஏன்? தொடர்-5

# இஸ்லாத்தை ஏற்றார்கள்

## தமிழகத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட சாதாரண முஸ்லிம்களின் வரலாறு

## ஐஸ்வர்யா (எ) ஸைனப்

சென்ற இதழில் இந்து மதத்தின் கீழ் சாதி என்று அறியப்படும் தலித் சமூகத்திலிருந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு, தன் மீதிருந்த சாதியம் என்ற சாக்கடையை வீசியெறிந்த இணியவன் என்கின்ற சகோதரரின் அனுபவங்களைப் பார்த்தோம்.

அதில் அவர் இந்து மதத்தின் சாதிய வரணாசிரமக் கொள்கைகள் எப்படியெல்லாம் மனிதனை இழிவுபடுத்தின. அதற்கு இஸ்லாம் எப்படி முற்றுப் புள்ளி வைத்தது என்று அவருடைய அனுபவங்களை மனம் நெகிழச் சொன்னார்.

இந்த இதழில் அதே வரணாசிரமக் கொள்கையை பின்பற்றி வாழ்ந்த இந்து மதத்தின் உயர் வகுப்பான பிராமண வகுப்பை சார்ந்த ஒரு பெண் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு தன் மீது படிந்திருந்த சாதியக் கழிவுகளை தூக்கியெறிந்த அனுபவங்களைப் பார்ப்போம்.

அஸ்ஸலாமு அலைக்கும் என்னுடைய முன்னாள் பெயர் ஐஸ்வர்யா. இப்போது இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவுடன் என்னுடைய பெயர் ஸைனப்.

நான் இந்து மதத்தில் பிராமண வகுப்பை சார்ந்தவள். சிறு வயதிலிருந்தே அக்ரஹாரத்தில் வளர்ந்ததால் இந்து மதத்தின் மீதும், அதன் சித்தாந்தங்கள் மீதும் பற்றுதலோடு இருந்தேன். நான் பிராமண வகுப்பை சார்ந்தவள் என்பதால், நான் தான் உயர்ந்தவள், மற்ற மனிதர்கள் எல்லாம் எனக்கு கீழ் தான் என்ற பெருமை கூட எனக்கு இருந்தது.

நான் படித்த கல்வி முறையும் Brahmin institution தான். பாடசாலைகளில் என்னுடன் படிக்கும் மற்ற மாணவிகளுடன் பழகும் போது கூட, “நான் உயர் சாதிப் பெண். இவர்கள் என்னை விட தாழ்ந்தவர்கள்” என்ற எண்ணம் எனக்குள் இருந்து கொண்டே இருக்கும்.

அவர்களை என்னுடைய வீட்டிற்கு நான் அழைக்க மாட்டேன். அவர்களுடைய வீட்டிற்கும் நான் செல்ல மாட்டேன். அவர்கள் அசைவ உணவு பழக்கமுடையவர்கள் என்று அவர்களுடைய உணவுகளைக் கூட நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன்.

இந்த நிலையில் தான் என்னுடை பள்ளிப் படிப்பு முடிந்து கல்லூரிக்குச் செல்கிறேன். கல்லூரியில் தான் எனக்கு மற்ற மதத்தை சார்ந்த புதிய நட்புகள் கிடைத்தது. அப்போது எனக்கு ஒரு முஸ்லிம் தோழியும் அறிமுகமானாள். அவளுடன் எனக்கு நல்ல நட்பு ஏற்பட்டது.

அவள் மார்க்கப்பற்றுள்ள முஸ்லிமாக இருந்தாள். எப்போதும் இஸ்லாம் சம்மந்தமான புத்தகங்களை படிப்பது, இஸ்லாத்தின் போதனைகளை கடை பிடிப்பது என்று இஸ்லாத்தில் ஈடுபாடோடு இருந்தாள்.

அவளைப் பார்த்த போது தான் எனக்கு அந்த எண்ணம் தோன்றியது. “இவ்வளவு ஈடுபாடோடு இருக்கிறாளே! அப்படி என்னதான் இருக்கிறது இந்த இஸ்லாத்தில்” என்று ஆராயத் தொடங்கினேன்.

**இஸ்லாம் - இறைத்தன்மை**

அப்படி இஸ்லாத்தை ஆராயும் போது தான் உண்மையான இறைத்தன்மையை நான் உணர்ந்தேன்.

“தன்னுடைய தேவையை கூட நிறைவேற்றிக் கொள்ள சக்தியில்லாத இந்த சிலைகளை நாம் இத்தனை நாளாய் இறைவன் என்று நம்பினோமே! அது எப்படி இறைவனாய் இருக்க முடியும்? ஒரு நாட்டிற்கு ஒரு தலைவன், ஒரு வீட்டிற்கு ஒரு தலைவன் என்பது போல் இந்த உலகுக்கும் ஒரு கடவுள் என்பது தானே எதார்த்தம்.” போன்ற சிந்தனைகளெல்லாம் எனக்குள் ஓடியது. அதன் பின் நான் அவளிடம் இஸ்லாம் குறித்து நிறைய கேட்டுத் தெரிந்துக் கொண்டேன்.

**சகோதரத்துவம்**

நான் இந்துவாக இருக்கும் போது எனக்கு சகோதரத்துவம் என்றாலே என்னவென்று தெரியாது. அதுவும் நான் பிராமண குலத்தை சார்ந்தவள் என்பதால், எங்களை விட எல்லா மனிதர்களும் கீழானவர்கள். நான் தான் உயர்ந்தவள் என்ற சிந்தனையே எனக்குள் மேலோங்கியிருந்தது.

ஆனால் இஸ்லாத்தைப் பற்றி நான் அறிந்துக் கொள்ள முற்பட்ட போது என்னை மிகவும் கவர்ந்தது, இஸ்லாம் மனிதர்கள் மத்தியில் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கும் சகோதரத்துவம் தான்.

தொட்டாலே தீட்டு. அதுதான் எங்களின் இறை நம்பிக்கையாக இருந்தது இந்து மதத்தில். ஆனால் இஸ்லாம் ஒரு மனிதனை புன் முறுவலோடு சந்திப்பதும் தர்மம் - வணக்க வழிபாடு என்கிறது.

இந்து மதத்தில் கோவிலுக்குச் சென்றால் ஏழைகளுக்கு ஒரு வரிசை, வி.ஐ.பி.க்கு ஒரு வரிசை என்று கடவுளை வணங்குவதில் கூட பாகுபாடுகள் இருக்கும்.

அதேப்போல மேல் சாதிக்காரர்கள் தான் கோவிலுக்கு உள்ளே வரை நுழைந்து வழிபட முடியும். கீழ் சாதிக்காரர்கள் கருவரைக்குள் வர முடியாது. அடிமட்ட சாதிக்காரர்கள் கோவிலுக்கு உள்ளே வர அனுமதியில்லை.

ஆனால் இஸ்லாத்தில் இந்த பாகுபாடு களெல்லாம் இல்லை. ஏழையாக இருந்தாலும், செல்வந்தராக இருந்தாலும், கருப்பராக இருந்தாலும், வெள்ளையராக இருந்தாலும் தொழுகையில் ஒரே வரிசையில் தோளோடு தோள் சேர்த்து இறைவனை வழிபடலாம்.

இந்து மதத்தில் கடவுளை வழிபட கோவிலுக்கு செல்ல வேண்டுமென்றால் குறைந்தது கையில் பத்து ரூபாயாவது இருக்க வேண்டும்.

அங்குள்ள தெய்வத்திற்கு ஐந்து ரூபாய் நெய் விளக்கு ஏற்றினால் தான், அது நம் குறைகளை காது கொடுத்து கேட்கும் என்பார்கள். லஞ்சம் கொடுத்துதான் கடவுளையே வழிபட்டு வந்தேன்.

ஆனால் இஸ்லாத்தில் அப்படியெல்லாம் இல்லை. நம்மிடம் எவ்வளவு செல்வம் உள்ளது என்றெல்லாம் இறைவன் பார்ப்பதில்லை. இறைவன் நம் உள்ளத்தைத் தான் பார்க்கின்றான். தன்னை நாடி வரக்கூடிய அடியானுடைய உள்ளத்தில் எந்தளவு இறையச்சம் இருக்கிறது என்பதை மட்டும் தான் பார்க்கின்றான்.

### மூடப்பழக்க வழக்கங்கள்

இந்து மதத்தின் மூடப்பழக்க வழக்கங்களை பற்றி சொல்ல வேண்டுமென்றால், சொல்லிக் கொண்டே இருக்கலாம். அந்தளவிற்கு மூடப்பழக்க வழக்கங்கள் இருக்கிறது.

ராவு காலம், எமகண்டம் என்று காலத்தை குறை சொல்வது, ஜோசியம் என்ற பெயரில் நான்கு கட்டங்களில் கணித்து பலப் பெண்களின் வாழ்க்கையை சீரழிப்பது, கணவனை இழந்த பெண்ணை சமூகத்தை விட்டு ஒதுக்கி வைப்பது, அவள் விதவை என்று அவளை புறக்கணிப்பது! என்று இந்து மதத்தின் மூடப்பழக்கங்களின் பட்டியல் நீண்டுக் கொண்டே போகும்.

இஸ்லாத்தில் இதுப் போன்ற மூடப்பழக்கங்கள், மனித அறிவுக்கு பொருந்தாத போதனைகள் எதுவுமேயில்லை.

ஒரு பெண் தன்னுடைய கணவனை இழந்து விட்டாள் என்றால், அவளை விதவைப் பட்டம் கட்டி சமூகத்தை விட்டு ஒதுக்கி வைத்து விட வேண்டும் என்று இஸ்லாம் கற்பிக்கவில்லை. மாறாக அவளுக்கு தன்னுடைய அடுத்த வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்கும் உரிமையையும் சுதந்திரத்தையும் இஸ்லாம் வலியுறுத்துகிறது.

### சுயமரியாதையை வலியுறுத்தும் மார்க்கம்

இந்து மதத்தில் மனிதர்கள் சுயமரியாதையோடு வாழ்வதற்கான வாழ்வியல் முறையே கிடையாது. எங்கள் வீட்டிற்கு யாராவது பெரியவர்கள் வந்தாலே என்னை அவர்களின் காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கிக்கொள்ள நிர்பந்திப்பார்கள். எனக்கு அது பிடிக்காமல் இருந்தாலும் பெற்றோர்களின் வலியுறுத்தலால் செய்வேன்.

ஆனால் இஸ்லாம் இதுப்போன்ற காரியங்களை வன்மையாக கண்டிக்கிறது. "மனிதர்களையும் ஜின்களையும் என்னை வணங்குவதற்காகவேயன்றி படைக்கவில்லை" என்று அல்லாஹ் தனது திருமறையான குர்ஆனில் குறிப்பிடுகின்றான்.

நம்மைப்படைத்த இறைவனுக்கு மட்டும் நாம் சிரம் பணிந்தால் போதும். சிரம் பணிவதற்கு தகுதியானவன் அவனே. என்று இஸ்லாம் கற்பிக்கிறது.

### பெண்ணியம் போதித்த இஸ்லாம்

என் வாழ்க்கையில் எந்த ஒரு நெறிமுறையும் இல்லாமல் தான் நான் வாழ்ந்துக் கொண்டிருந்தேன். அதுவும் நான் பேஷன் டெக்னாலஜி துறையில் படித்துக் கொண்டிருந்ததால், நல்ல மாடலாக இருக்க வேண்டும். ஜாலியாக இருக்க வேண்டும். வாழ்க்கை என்பது ஒரு முறைதான். அதை நன்றாக அனுபவிக்க வேண்டும் என்று நினைத்திருந்தேன்.

ஆனால் இஸ்லாத்தை அறிந்தவுடன் தான் பெண்ணின் உண்மையான தன்மையை நான் உணர்ந்தேன். ஒரு பெண் எப்படி உடை அணிய வேண்டும், தன்னுடைய அழகை யார் யாரிடம் வெளிப்படுத்த வேண்டும், அந்நிய ஆண்களோடு எப்படி நடந்துக் கொள்ள வேண்டும், அண்டை வீட்டார்களோடு எப்படி பழக வேண்டும் போன்ற சிறு சிறு விஷயங்களை கூட இஸ்லாம் அழகாக கற்பிக்கிறது.

### அனுமதிக்கப்பட்டவை - அனுமதிக்கப்படாதவை

என் தந்தை வட்டி தொழில் செய்து வருபவர். அதனால் இந்த உலகில் எப்படி வேண்டுமானாலும் பணம் சம்பாதிக்கலாம் என்ற எண்ணம் எனக்குள் இருந்தது. இஸ்லாத்திற்கு வந்தவுடன் தான் ஹலால் - ஹராம் என்ற போதனை எனக்கு தெரிந்தது. இறைவனால் அங்கீகரிக்கப்பட்ட எந்த தொழில் செய்தாலும் அதில் நீதமாக நடந்துக் கொள்ள வேண்டும். அதில் வரும் லாபத்தில் ஒருப் பங்கை ஏழைகளுக்கும், அனாதைகளுக்கும் கொடுத்து அவர்களை ஆதரிக்க வேண்டும் என்று இஸ்லாம் போதிக்கிறது.

### மறுமை சிந்தனை

இந்து மதத்தில் இருக்கும் போது தவறு செய்வதற்கு நான் பயந்ததே இல்லை. யாருக்கும் தெரியாமல் தவறு செய்தால் யார் நம்மை கண்டுபிடிக்கப் போகிறார்கள் என்ற எண்ணமெல்லாம் இருந்தது.

ஆனால் இஸ்லாத்தை அறிந்தவுடன் இரண்டு பேர் சேர்ந்து இரகசியமாக ஏதாவது தவறான காரியங்களை பற்றி பேசவே அச்சமாக இருக்கிறது. மூன்றாவதாக அல்லாஹ் அதை கவனிக்கின்றான், மறுமையில் அதை வெளிப்படுத்தி நம்மை தண்டிப்பான் என்ற அச்சம் தான் அது.

முன்பெல்லாம் கீழே ஏதாவது ஒரு பொருள் கிடைத்தால், முதலில் ஒருவரிடம் கேட்பேன். பின்னர் அது எனக்கு சொந்தமாகிவிடும். ஆனால் இஸ்லாத்தை அறிந்தவுடன் அப்படி ஏதேனும் நடந்தால் அந்த பொருளை உரியவரிடத்தில் ஒப்படைக்க மனம் பதைபதைக்கிறது. உரியவர் கிடைக்கவில்லையென்றால் அந்த அமானிதத்தை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டிய பொறுப்புணர்வும் எனக்குள் உண்டாகி விடுகிறது. காரணம் மறுமைப் பற்றிய அச்ச உணர்வு தான்.

**இஸ்லாம் - பயங்கரவாதம்**

அதேப்போல நான் இந்து மதத்தில் இருக்கும் போது இஸ்லாம் என்றாலே தீவிரவாதத்தை - பயங்கரவாதத்தை போதிக்கும் மார்க்கம். முஸ்லிம்கள் எல்லாம் பயங்கரவாதிகள் என்ற எண்ணம் தான் எனக்குள் இருந்தது.

ஆனால் இஸ்லாத்தை அறிந்த போது தான் புரிந்தது இது தீவிரவாத மார்க்கமல்ல. இஸ்லாம் என்பது மனிதன் இறைவனுக்கு எப்படி கட்டுப்பட்டு ஒரு அமைதியான வாழ்க்கை முறையை வாழ வேண்டும் என்று போதிக்கும் மார்க்கம். அந்த வாழ்க்கை முறை இந்த நிரந்தரமற்ற உலகில் மட்டுமல்லாது, நிரந்தரமான மறுமையிலும் நமக்கு கண்ணியத்தை பெற்றுத் தரும் என்பதை நான் புரிந்துக் கொண்டேன்.

இன்றைக்கு இஸ்லாத்தை அறியாத மாற்று மத சகோதர, சகோதரிகள் பெரும்பாலானோர் இஸ்லாம் ஒரு தீவிரவாத மார்க்கம் என்றே எண்ணிக் கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு இஸ்லாத்தைப் பற்றின புரிதல்களை ஏற்படுத்த வேண்டியது நம்மைப் போன்ற முஸ்லிம்களின் கடமை. அதை நாம் செய்ய வேண்டும்.

நாம் இஸ்லாம் போதிக்கும் கட்டளைகளை முழுமையாக பின்பற்றினாலே போதும். அதுவே ஒரு அழைப்பாக மாறிவிடும். சகோதர சமுதாயத்தை சார்ந்தவர்கள் நம்முடைய செயல்முறைகளைப் பார்த்தே இஸ்லாத்தை அறிந்துக் கொள்வார்கள். இன்ஷா அல்லாஹ்.

என்னுடைய பெற்றோர்கள் மற்றும் குடும்பத்தினர்கள் அனைவரும் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று எனக்காக வல்லோன் அல்லாஹ்விடம் பிரார்த்தியுங்கள்.

**ஆதாரம்** - https://youtu.be/rej363zjbsg

**- அஷ்ரஃப் இஸ்லாம்**


**சகோதர சமூகத்தைச் சார்ந்தவர்களுக்கு இலவச**

# திருக்குர்ஆன்

**தமிழ் பிரதியைப் பெற கீழ்கண்ட முகவரிக்கு எழுதவும்.**

52/1, மண்ணடி தெரு,
மண்ணடி, சென்னை - 600001.

**தொலைப்பேசி:**

**81481 29887**

**இந்த இலவசம் முஸ்லிம்களுக்கு கிடையாது.**




# நூலாய்வு நிகழ்வுகள்

## இஸ்லாமியச் சட்டத்தின் வளமும் விசாலமும்

மௌலானா டாக்டர் மஸ்வூது ஜமாலி அவர்கள் எழுதிய இஸ்லாமியச் சட்டத்தின் விசாலமும் வளமும் என்ற நூல் அறிமுக விழா சென்னை கிரசண்ட் பல்கலைக் கழகத்தின் வளாகத்தில் அமைந்துள்ள ஆலிம் புஹாரி அரபுக் கல்லூரி அரங்கத்தில் 27.11.2018 அன்று நடந்தது.

மௌலவி இல்யாஸ் ரியாஜி அவர்கள் ஆய்வுரை நிகழ்த்தினார்கள். நூலாசிரியர் மஸ்வூது ஜமாலி அவர்கள் ஏற்புரையாற்றினார்கள்.

5.11.2018 அன்று கடையநல்லூரில் இதே நூலின் அறிமுகக் கூட்டம் நடந்தது. இதில் கடையநல்லூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் அபுபக்கர், இல்யாஸ் ரியாஜி, சன் டீ.வி. வீரபாண்டியன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். நூலாசிரியர் இறுதியாக ஏற்புரையாற்றினார்.

இந்நூல் "ஷெய்கு சதக்கத்துல்லாஹ் அப்பா இலக்கிய விருது" பெற்ற நூல் என்பது குறிப்பிடத் தக்கது.



சென்னை பெரியமேட்டில் உள்ள ஜமாத்துல் உலமா அலுவலகத்தில் 18.09.2018 நடந்த நூல் ஆய்வரங்கத்தில் இந்நூலை ஆய்வு செய்து மௌலவி கான் பாகவி உரையாற்றினார்.

இந்நிகழ்வில் பங்கேற்ற ஆலிம்கள் அனைவருக்கும் இந்நூல் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. 27.10.2018 அன்று வண்டலூரில் நடந்த நிகழ்வில் முன்னாள் மாணவர்கள் பங்கேற்று நூலாசிரியரைப் பாராட்டினர்.

சிறப்பான இந்நூலை எழுதிய டாக்டர் மஸ்வூது ஜமாலி அவர்களுக்கு நினைவு பரிசும் வழங்கினர்.

- ந.நி.

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001.
Editor **M. Gulam Mohamed.** Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFSET PRINTERS,**
19/1, 21,2, Kitabath Khan Bhadgur Street, chennai - 600 002